பாரதி

1960

மாநாட்டு மலர்

தமிழ் எழுத்தாளர் சங்கம், சென்னை-2

கேடயங்கள் பெறும் தமிழறிஞர்கள்



பன்மொழிப் புலவர்
திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்



ஆராய்ச்சி வல்லுநர்
திரு. கு. கோதண்டபாணி பிள்ளை

பதக்கம் பெறும் தெலுங்கு மொழி அறிஞர்

திரு. சல்லா இராதாகிருஷ்ண சர்மா

பா ர தி

மாநாட்டு மலர்

எட்டாவது

தமிழ் எழுத்தாளர்

மாநாடு

1960 அக்டோபர் 15, 16

விலை ரூபாய் ஒன்று

தமிழ் எழுத்தாளர் சங்கம்

சென்னை - 2

தமிழ் எழுத்தாளர் சங்க

எட்டாவது மாநாடு

வரவேற்புக் குழு

தலைவர் :

திரு. அழ. வள்ளியப்பா

உறுப்பினர் :

செயற்குழு உறுப்பினர் அனைவரும்
மற்றும்

கவிஞர். கண்ணதாசன்
திரு. கி. வா. ஜகந்நாதன்
திரு. முரசொலி மாறன் எம். ஏ.
வித்துவான் வே. இலட்சுமணன்
திருமதி. நீலாவதி இராமசுப்பிரமணியம்

மலர்க் குழு

அமைப்பாளர் :

திரு. நாரண-துரைக்கண்ணன்

உறுப்பினர் :

திரு. மா. இளஞ்செழியன் எம். ஏ.
திரு மா. சு. சம்பந்தன்
,, நா. ஜகந்நாதன் எம். ஏ.
,, புத்தனேரி ரா. சுப்பிரமணியம்

விளம்பரக் குழு

அமைப்பாளர் :

திரு. சிறுவை மோகனசுந்தரன்

உறுப்பினர் :

திரு. சி ர. பழனியாண்டி
,, கே. ஆர். கலியாணராமன் [மகரம்]
,, ந. பழநியப்பன்
,, ஏ. பி நாகராஜன்
புலவர். தணிகை உலகநாதன்
திரு. டி. என் சிவதாணு
,, டி. எஸ் ஸ்ரீபால்

முன்னுரை

1960ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15, 16ஆம் நாட்களில் சென்னை மாநகரில் நடைபெறும் 'தமிழ் எழுத்தாளர் சங்க எட்டாவது மாநாட்டை யொட்டிப் "பாரதி" இதழின் இந்த சிறப்புமலர் வெளியிடப் படுகிறது. சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி—அறிவின் செல்வர் திரு. இராஜமன்னார் அவர்களால் திறந்துவைக்கப்பட்டு, குழந் தைப் பாடல்கள் பலவற்றை இயற்றித் தமிழ் மக்களின் இதயங்களைக் கவர்ந்துள்ள குழந்தைக் கவிஞர் திரு. அழ. வள்ளியப்பா அவர்களால் வரவேற்கப்பட்டு, அழகான பல அரிய நூல்களை அணியணியாக எழுதி வெளியிட்டு அருந்தமிழ்ப் பணி புரிந்துள்ள பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாத்துரை அவர்கள் தலைமையில் நடைபெறும் இந்த மாநாடு, தமிழ் எழுத்தாளர் சங்க வரலாற்றில் பொலிவு மிக்கதோர் பொன்னே டாகத் திகழ்கிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இத்தகைய சிறப்புமிக்க இம் மாநாட்டின் நினைவாக வெளியாகும் இம் மலரில், செந்தமிழின் வளர்ச்சிக்காகச் செம்மை சான்ற பணிகள் பல ஆற்றி, இம் மாநாட்டில் பாராட்டுக் கேடயங்கள் பெறுகின்ற பேரறிஞர் கள் பன்மொழிப்புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், ஆராய்ச்சி வல்லுநர் கு. கோதண்டபாணி பிள்ளை ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகள் இடம்பெற்றிருப்பது பெருமகிழ்ச்சியைத் தருவதாக அமைந்துள்ளது. அதுபோலவே உயரிய தமிழ் இலக்கியங்கள் பலவற்றை முறையே தெலுங்கு மொழியிலும் மலையாள மொழியிலும் பெயர்த்தமைத்துப் பெரும்புகழ் பெற்று, இம் மாநாட்டில் பாராட்டுப் பதக்கங்கள் பெறுகின்ற தமிழ்மொழி வல்ல பிறமொழிச் சான்றோர்கள் திரு. சல்லா இராதா கிருஷ்ண சர்மா, திரு. வெ. கோபால குறுப் ஆகியோரின் வாழ்க் கைக் குறிப்புகள் இடம் பெற்றிருப்பதும் நம் இதயத்தை இன்ப வெள்ளத் தில் ஆழ்த்துகிறது.

தமிழகத்தின் அறிஞர்பெருமக்கள் பலருடைய சீர்மிக்க எழுத் தோவியங்கள் இம் மலரில் அமைந்திருப்பது இம் மலரின் மற்றொரு தனிச் சிறப்பாகும். /அந்தக் கட்டுரைகள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு கருத்துக் கருவூலமாக அமைந்திருக்கின்றது என்பதை எடுத்துக் கூறவும் வேண்டுமோ ? கேட்டவுடன் அன்போடு கட்டுரைகள் கொடுத்துதவிய அந்தச் சான்றோர்கள் அனைவருக்கும் நம் மனமார்ந்த நன்றி உரியது.

இம் மாநாட்டு மலருக்குத் தத்தம் விளம்பரங்களைத் தந்துதவிய வணிக நிலையங்கட்கும், அவ் விளம்பரங்களைப் பெற்றுத் தந்த நல்லன்பர் கட்கும், கட்டுரைகளைக் கேட்டு வாங்கிவந்த தோழர்கட்கும், இம் மலரைச் சிறப்பான முறையில் கொண்டுவருவதற்குத் தேவைப்பட்ட பலவகை உதவிகளையும் அவ்வப்போது தந்துவந்த எல்லா நண்பர்கட்கும், நம் நன்றியை மீண்டும் மீண்டும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

மிகக் குறுகிய காலத்தில் மிக நல்ல முறையில் இம் மலரை அச் சிட்டுத் தந்துள்ள 'சாந்தி அச்சகத்'தின் உரிமையாளர்கள்—மேலாளர் கள்—ஊழியர்கள் ஆகிய அனைவருக்கும் எங்கள் அன்பார்ந்த நன்றி.

இதோ, மலர். இதோ, அதன் மணத்தை நுகரத் துடிக்கும் நீங் கள். இடையே, இனியும் நாங்கள் தடையாக நிற்பது முறையல்ல அல்லவா ? வணக்கம்.

—மலர்க் குழுவினர்

தமிழ் எழுத்தாளர் சங்கம்

1960-ஆம் ஆண்டின் செயற்குழு

தலைவர் :

பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாத்துரை எம்.ஏ., எல்.டி.

துணைத் தலைவர்கள் :

திரு ப. ஜீவானந்தம்
,, நாரண–துரைக்கண்ணன்
,, அப்துல் வகாப் எம். ஏ.
,, சீனி. வேங்கடசாமி

பொதுச் செயலாளர் :

திரு. ஊ. ஐயராமன்

துணைச் செயலாளர்கள் :

திரு. சி. ர. பழனியாண்டி
,, நாக. முத்தையா

பொருளாளர் :

திரு. அழ. வள்ளியப்பா

குழு உறுப்பினர் :

திருமதி கமலா விருத்தாசலம்
திரு. அகிலன்
,, மா. சு. சம்பந்தன்
,, மா. இளஞ்செழியன் எம்.ஏ.
,, சையத் முகம்மது
,, சிறுவை. மோகனசுந்தரன்

திருமதி குகப்ரியை
திரு. புத்தனேரி சுப்பிரமணியம்
,, டி. என். சிவதாணு
,, ந. பழநியப்பன்
,, டி. எஸ். ஸ்ரீபால்
,, அ. ச. புஷ்பரத்தினம்

திரு. நா. ஜகந்நாதன் எம்.ஏ.,

(வெளியூர்)

திரு. சாலை. இளந்திரையன் எம்.ஏ., எம்.லிட்.
,, அரு. தியாகராசன்

தமிழ் எழுத்தாளர் சங்க எட்டாவது மாநாடு

1960 அக்டோபர் 15, 16

திரு. அழ. வள்ளியப்பா

அவர்களின்

வரவேற்புரை

அறிவிற் சிறந்த பெரியோர்களே,
அன்புமிக்க எழுத்தாள நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என் பணிவார்ந்த வணக்கம்.

தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்தும் இந்த எட்டாவது தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் உங்கள் அனைவரையும் வரவேற்கும் நற்பேறு பெற்றேன். இதை நினைத்துப் பெருமகிழ்வுறுகின்றேன். மனங்கனிந்து, 'வருக, வருக' என உங்களை வரவேற்கின்றேன்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு எழுத்துலக மேதை வ.ரா. அவர்களுக்கு ஓர் ஆசை தோன்றியது. எழுத்தாளர் பலரையும் ஒரே சமயத்தில் ஒரே இடத்தில் ஒன்றாகக் காணவேண்டும் என்பதுதான் அவரது ஆசை. அந்த ஆசையின் விளைவாக ஏறத்தாழ முந்நூறு எழுத்தாளர்கள் ஓரிடத்தில் கூடினர்; ஒருவரை ஒருவர் நேரில் அறிந்தனர்; கவலைகளை மறந்து களிப்புடன் உரையாடினர். அக்காட்சியைக் கண்டு பேரின்பம் பெற்றார் வ. ரா. அவர்கள். நூற்றுக்கணக்கான எழுத்தாளர்கள் கூடியுள்ள இந்த மாநாட்டைப் பார்க்கும்போது, வ. ரா. அவர்களின் நினைவுதான் வருகிறது.

இந்தச் சங்கம் தழைத்தினிதோங்க அரும்பாடு பட்டோர் பலர். அவர்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் இருவர். ஒருவர் கல்கி; மற்றொருவர் தேவன். மறைந்த இவ்விரு பெரும் எழுத்தாளர்களுக்கும் நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். இவ்விருவருக்கும் முன்னும் பின்னும் இலக்கியத் தொண்டாற்றி மறைந்த பலர் நம் நினைவுக்கு வருகின்றனர். அவர்களுக்கு நாமனைவரும் அஞ்சலி செலுத்துவோமாக.

எழுத்தாளர் சங்கத்தில் இன்று 459 உறுப்பினர்கள் உள்ளனர். 'இந்த 459 நண்பர்களும் இம் மாநாட்டிற்கு வந்திருந்தால், எவ்வளவு நன்றாயிருக்கும்!' என்ற ஆசை இச் சமயம் நமக்குத் தோன்றாமலில்லை. எல்லோருமே இச் சென்னை நகரில் வாழ்ந்தால், ஒருவேளை இந்த ஆசை நிறைவேறலாம். ஆனால், சென்னையில் மட்டுமல்ல, தமிழகத்தின் பல பாகங்களிலும், வெளி மாகாணங்களிலும், ஏன், வெளிநாடுகளிலும்கூட அவர்கள் வாழ்ந்துவருகின்றனர். அவர்களில் பலர் நேரிலே வர இயலாவிடினும், அவர்களது நினைவெல்லாம் தற்போது இங்குதான் இருக்கும். அவர்களது நல் எண்ணங்கள் இம் மாநாட்டின் வெற்றிக்குத் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை.

நமக்கெல்லாம் முன்னோடியாக விளங்குபவர் பாரதியார். அவர் கூறுவதைக் கேளுங்கள்: அவரது வீட்டிலே ஒரு பூனை இருந்ததாம். அது நான்கு பிள்ளைகள் பெற்றதாம்.

சாம்பல் நிறத்தொரு குட்டி;
—கருஞ்
சாந்து நிறம் ஒரு குட்டி;
பாம்பு நிறம் ஒரு குட்டி;
—வெள்ளைப்
பாலின் நிறம் ஒரு குட்டி;

இப்படி அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறமிருந்தாலும், 'அவை யாவும் ஒரே தரம் அன்றோ?' என்று கேட்கிறார் பாரதியார். அதே போலத்தான் நமக்குள் சாதி, மதம், நிறம் எனப் பிரிவுகள் பல இருப்பினும், நாம் யாவரும் ஒரே

இனம்; நம் அனைவருக்கும் ஒரே தொழில் — எழுத்துத்தொழில். இது மிகவும் புனிதமான ஒரு தொழில். ஆனால், மிகவும் பொறுப்பு வாய்ந்த ஒரு தொழில். இத் தொழில்தான் நம் அனைவரையும் இங்கே ஒன்று கூட்டி வைத்துள்ளது.

பண்டைத் தமிழர் பண்பாட்டைப் பற்றிப் படிக்கின்றோம்; பேசுகின்றோம். அந்த நிலை மீண்டும் வராதா என ஏங்குகின்றோம். பண்டை நிலையுடன் இன்றைய நிலையை ஒப்பிட்டுப்பார்ப்பதைவிடப் பத்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்தநிலையுடன் இன்றைய நிலையைஒப்பிட்டுப் பார்ப்பது எளிது. 1950-ஆம் ஆண்டு மனிதனுக்கும் 1960-ஆம் ஆண்டு மனிதனுக்கும் எவ்வளவோ வேற்றுமையைக்காண்கின்றோம். எத்தனையோ விஷயங்களில் தரம் குறைந்து வருவது போல், மனிதத் தன்மையிலும் நாளுக்கு நாள் குறைந்து வருவதைக் கண்டு பெரியவர்கள் மனம் வருந்துகின்றனர். இதற்கு முக்கிய காரணம் இன்றைய சூழ்நிலையே. இந்நிலை மாறி எல்லா மக்களும் மேன்மக்களாக வேண்டும். இதற்கு எழுத்தாளராகிய நாம் என்ன செய்யலாம்? நம்மால் ஏதேனும் செய்ய முடியுமா?

"நாம் ஏதேனும் கதை எழுதலாம்; கட்டுரை எழுதலாம். நம்மால் வேறு என்ன செய்ய முடியும்?" என்ற எண்ணம் ஒரு சிலருக்கு ஏற்படலாம். ஆனால், அதே கதை, கட்டுரை மூலம் செயற்கரிய செய்த எத்தனையோ எழுத்தாளர்களைப் பற்றி நாம் கேள்விப்பட்டதில்லையா?

அமெரிக்காவில் அடிமைத்தனத்தை ஒழிக்கக் காரணமாயிருந்தது Uncle Tom's Cabin என்ற நாவல்தான். ஸ்டவ் (Stowe) என்ற அம்மையார் எழுதிய அந்த நாவல் எத்தனையோ உள்ளங்களுக்கு உணர்ச்சி ஊட்டியது. அடிமை வாழ்வு அகல வழிவகுத்தது.

ரூஸோவைப் பற்றிப் படித்திருக்கிறோம். அவர் தமது எழுத்தின் வலிமையால் ஏழைகளின் உரிமைக்குரலை எழுப்பினார்; பிரெஞ்சுப் புரட்சிக்கு அடிகோலினார்; உலக வரலாற்றையே மாற்றி அமைத்து விட்டார்.

'ஆலிவர் டிவிஸ்ட்' என்ற நாவல் மூலம், இங்கிலாந்தில் அநாதை விடுதிகளிலே நடந்து வந்த அக்கிரமங்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்த பெருமை சார்லஸ் டிக்கன்ஸுக்கு உண்டு.

மகாத்மா காந்தியின் உள்ளத்தைப் பண்படுத்தி, அவரை உலகம் போற்றும் உத்தமராக மாற்றியது எது? "என் வாழ்க்கையில் புரட்சி மிக்க ஒரு பெரும் மாறுதலைச் செய்தது ரஸ்கின் எழுதிய Unto This Last என்ற புத்தகம்தான்" எனக் காந்திஜியே கூறியிருக்கிறார்.

'என்றன் பாட்டுத் திறத்தாலே இவ் வையத்தைப் பாலித்திட வேணும்' எனப் பராசக்தியின் அருள் வேண்டிய பாரதியார், தமது பாட்டுத் திறத்தால் நாட்டிலே ஒரு பெரும் விழிப்பை உண்டாக்கினார்; தேசபக்திக் கனலை வளர்த்தார்; தமிழின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டார்.

இப்படித் தமது எழுத்துத் திறத்தாலே உலகுக்கு ஏற்றம் தந்தவர் பலர். இவர்களெல்லாம் நமக்கு வழிகாட்டிகள்; நமக்கு உதவும் ஒளி விளக்குகள்.

இருபது, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சில தமிழ்ப் பத்திரிகைகளே வெளிவந்து கொண்டிருந்தன. அவற்றில் எழுதிய எழுத்தாளர் தொகையும் குறைவாகவே இருந்தது. அதனால், அப் பத்திரிகைகளில் எழுதும் எழுத்தாளர்களையும், அவர்களது எழுத்தோவியங்களையும் எடைபோட்டுப் பார்ப்பது எளிதாயிருந்தது. இன்று தமிழில் நூற்றுக்கணக்கான பத்திரிகைகள் வெளிவருகின்றன. எழுத்தாளர்களும் ஆயிரத்துக்கு மேற்பட்டுள்ளனர். மாதந்தோறும் எண்ணற்ற கதைகள் உருவாகின்றன. இக்காரணங்களால், தமிழில் வெளிவருகின்ற கதைகளுள் மிகச் சிறந்த சில கதைகள், இலக்கிய ஆர்வமுடையோருக்குத் தெரியாமலே போய்விடுகின்றன. இதைத் தவிர்க்க ஒரு வழி காணலாம். ஒவ்வோராண்டும் வெளிவரும் ஆயிரக்கணக்கான சிறுகதைகளுள் மிகச் சிறந்த பத்துப் பதினைந்து கதைகளைத் தேர்ந்தெடுக்கலாம். '1960ஆம் ஆண்டுச் சிறந்த சிறு கதைகள்' என்பதுபோல் ஒரு பெயர் கொடுத்து அவற்றைப் புத்தகமாக வெளியிடலாம்.

இவ்வாறு ஒவ்வோராண்டும் வெளியாகும் சிறந்த சிறு கதைகளைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட்டால், அது பலவகையிலும் பயன்படும். முதலில், கதை படிப்போருக்கு அது ஒரு சிறந்த விருந்தாக அமையும். இரண்டாவதாக, அக்கதைகளை மற்றைய மொழிகளிலும் வெளிக்கொணர முயலலாம். ஆரம்பத்தில் மூன்று தென் மொழிகளிலும் அவற்றை வெளியிடலாம். பிறகு, பிற இந்திய மொழிகளிலும் வெளியிட வாய்ப்புக் கிடைக்கலாம். அதன் பின்னர், இதுபோன்ற தொகுப்புக்களிலுள்ள மிகவும் சிறந்த சில கதைகளைப் பொறுக்கி எடுத்து உலகம் முழுமைக்கும் அறிமுகம் செய்து வைக்கலாம். இதுபோலவே கவிதை, நாடகம் முதலியவற்றுக்கும் செய்யலாம். இதனால், தமிழ் எழுத்தாளன், முதலில் 'தென் இந்திய எழுத்தாளன்' ஆகிறான்; பிறகு, 'இந்திய எழுத்தாளன்' ஆகிறான்; அதன்பின்னர், 'உலக எழுத்தாளன்' என்ற உயர் பதவியை அடைகிறான். நம்மில் யார் அப்பத

வியை அடைந்தாலும் நம் அனைவருக்கும் பெருமைதானே !

தமிழ் இலக்கிய வரலாற்றை எடுத்துக் கூறும் நூல்கள் பலவற்றை இன்று நாம் காண்கிறோம். ஆயினும், தமிழ் இலக்கியத்தில் உள்ள பல்வேறு பிரிவுகளையும் பற்றி-பண்டைக் காலம் முதல் இக்காலம்வரை-கூறுகின்ற நூல் அரிதாகவே உள்ளது என்ற ஒரு குறை அடிக்கடி கூறப்பட்டு வருகிறது. இக்குறை நீங்க மலையாளத்திலும், தெலுங்கிலும் மற்றும் சில இந்திய மொழிகளிலும் செய்திருப்பதுபோல், தமிழ் இலக்கியத்தின் ஒவ்வொரு பிரிவைப் பற்றியும் தக்கவர் ஒருவரைக் கொண்டு கட்டுரை எழுதச்செய்து, அப்படி எழுதப்பெற்ற கட்டுரைகள் அனைத்தையும் சேர்த்துத் தொகுத்துப் புத்தகமாக வெளியிடலாம்.

ஒரு மொழியிலுள்ள நூல் மற்றொரு மொழியில் வெளிவரவேண்டும் என்ற ஆவல் அனைவருக்கும் உள்ளது. இந்த நற்பணியைத் தென்மொழிப் புத்தக டிரஸ்ட், சாகித்ய அகாதமி போன்ற நிறுவனங்களும், தனிப்பட்ட பல பதிப்பாளரும் மேற்கொண்டுள்ளனர். இது மகிழ்ச்சிக்குரியதே. பண்டை இலக்கியங்களைப் பிற மொழிகளில் வெளியிடும் முயற்சியைப்போலவே, இன்று நம்மிடையே வாழ்கின்ற எழுத்தாளர்களின் சிறந்த படைப்புக்களையும் பிறமொழிகளில் கொண்டுவர அவர்கள் மேலும் முயலவேண்டும். அப்போதுதான், ஒவ்வொரு மொழியிலும் தற்கால இலக்கியம் எவ்வாறு வளர்ந்து வருகிறது என்பது தெரியும்.

விடுதலைக்குப் பிறகு, ஒவ்வொரு மொழியிலும் எத்தனையோ புது முயற்சிகள் நடைபெற்றுள்ளன. இம்முயற்சிகளில் பல, மொழி வளர்ச்சிக்கும் மக்களின் மேம்பாட்டிற்கும் உதவியிருக்கின்றன. இவற்றைப் பற்றியெல்லாம் அறிந்து கொள்ள வாய்ப்புக் கிடைப்பின் நமக்கும் அம் முயற்சிகளில் ஒரு சில உதவுமன்றோ ?

புகழ் பெற்ற பிரெஞ்சு நாவலாசிரியர் அலெக்ஸாண்டர் டூமாஸ், சர் வால்ட்டர் ஸ்காட் எழுதிய நூல்களை யெல்லாம் படித்தார், படிக்கப் படிக்க அவரது உள்ளத்திலே ஓர் ஆசை கிளர்ந்தெழுந்தது. 'தமது எழுத்து மூலம் ஸ்காட் ஆங்கில மொழிக்கு எத்தகைய தொண்டாற்றியிருக்கிறார்! அவரைப்போலவே, நானும் என் பிரெஞ்சு மொழிக்குப் பெருமை தேடித் தருவேன்' என்று உறுதி பூண்டார். அவரைப் போலவே நாமும் தமிழ் வளர்க்கும் அரும் பணியில் ஆர்வமுடன் ஈடுபடுவோம் ; பிற மொழியாளருடன் இலக்கியம் வளர்ப்பதில் பொறுமையின்றிப் போட்டியிடுவோம்.

தற்போது லட்சம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகக் கூடிய தமிழ்ப் பத்திரிகைகள் இரண்டு, மூன்று இருக்கின்றன. வேறு எந்த இந்திய மொழியிலும் இப்படிப் பெரும் அளவில் விற்பனையாகும் பத்திரிகைகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்ப் பத்திரிகைகளின் விற்பனை பெருகப் பெருக எழுத்தாளரின் ஊதியமும் உயர வேண்டும் என்று நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நாம் கருதினோம். பத்திரிகையாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்தோம். பல பத்திரிகையாளர் நம் வேண்டுகோளுக்கு இணங்கி ஊதியத்தை உயர்த்தினர். அவர்களுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். இன்னும் சில பத்திரிகையாளர்கள் ஊதியத்தை யுத்த முற்கால நிலையிலே வைத்துள்ளனர். வேறு சில பத்திரிகையாளர்கள் எழுதுவோருக்கு ஒரு காசுகூடத் தருவதில்லை. ஒரு கதையை எடுத்துக் கொண்டால், அக்கதைக்குப் படம் வரையும் ஓவியருக்கு ஊதியம் கொடுக்கிறார்கள்; அந்தப் படத்தை பிளாக் செய்பவருக்கு—அந்தக் கதையை அச்சிடுபவருக்கு—அச்சிடும் தாளுக்கு,ஆகிய ஒவ்வொன்றுக்கும், செலவு செய்கிறார்கள். ஆனால் இவை எல்லாவற்றிற்கும் அடிப்படையாக இருக்கின்றானே, அந்தக் கதையை எழுதிய எழுத்தாளன், அவனுக்கு மட்டும் எதுவும் கொடுக்க மனம் வருவதில்லை! பொழுது போக்காக எழுதி வரும் வசதி படைத்த ஒரு சிலரை இது அவ்வளவாகப் பாதிப்பதில்லை. ஆனால், ஏழமை நிலையிலுள்ள எழுத்தாளனுக்கு இது எத்தகைய வேதனையைத் தரும் என்பதை அவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டாமா? இந்த நிலை இனியும் நீடித்தல் அழகன்று.

கடந்த சில ஆண்டுகளாக மலையாளம், தெலுங்கு, கன்னடம், இந்தி, வங்காளம், பிரெஞ்சு முதலிய பிற மொழிகளில் நாம் தமிழ் நூல்களைப் பெயர்த்து வெளியிட்ட அறிஞர்களைப் போற்றுகின்றோம். அவர்களது இலக்கியத் தொண்டினைப் பாராட்டுகின்றோம். இவர்களைப் போல் தமிழ் மொழியை முறையாகப் பயில வேண்டும் என ஆர்வம் கொண்ட பிற மொழியாளர் பலர் இருக்கின்றனர். அவர்கள் தமிழகத்துக்கு வந்து தமிழ் மக்களுடன் பழகி, தமிழ் மொழியைக் கற்றுக் கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும். தமிழகத்தின் சூழ்நிலை, பழக்க வழக்கங்கள், மரபு, உச்சரிப்பு முதலியவற்றை அவர்கள் நேரிலே அறிந்து கொள்வதால், நல்ல பயன் விளையும். இத்துறையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஓரளவு முயற்சி எடுத்துள்ளது. மேலும் விரிவாக இதைச் செய்யலாம். ஒருசில ஆண்டுகள் முழுநேரம் தமிழ் கற்க வசதி செய்து கொடுக்கலாம். இதனால் மேலெழுந்தவாரியாக இல்லாமல்

ஆழ்ந்துபயில் அவர்களுக்கு வாய்ப்புக்கிடைக்கிறது. இலக்கிய நூல்களைப் படித்துணரவும், அவற்றைத் தங்கள் மொழியில் பெயர்க்கவும் இப்பயிற்சி பெரிதும் உதவும். இதே போல், தமிழ் எழுத்தாளர்களும் பிற இடங்களுக்குச் சென்று அங்குள்ள மொழிகளைக் கற்க வசதி செய்து கொடுத்தால் எவ்வளவோ நன்றாயிருக்கும்.

தற்போது தமிழ் நாட்டில் பத்திரிகை படிக்கும் பழக்கம் மிகவும் வளர்ந்துள்ளது. ஆயினும் அதில் பத்தில் ஓரளவுகூட புத்தகம் படிக்கும் வழக்கமும் நூற்றில் ஓரளவுகூட புத்தகம் வாங்கும் வழக்கமும் ஏற்படவில்லை. இருப்பினும் சில ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட இப்போது புத்தகம் வாங்கும் வழக்கம் சிறிது வளர்ந்துள்ளது. இது எழுத்தாளர்களாகிய நமக்கு ஓரளவு ஊக்கம் தருகின்றது. ஆயினும், ஒரு புத்தகம் தயாரானதும், குறைந்தது ஒரு மாதத்திற்குள், தமிழ்நாடு முழுமைக்கும் அச் செய்தியைத் தெரிவிப்பதற்கு இன்று ஏதேனும் வழி உண்டா? இல்லை. புத்தக விற்பனையாளருக்காவது தெரிகிறதா? ஒரு சிலருக்குத்தான் தெரிகிறது: எல்லோருக்கும் தெரிவிக்க வசதியில்லை. இப்போது நாம் விரும்புவது என்ன? ஒரு புத்தகம் வெளியானதும், புத்தக விற்பனையாளர் ஒவ்வொருவருக்கும் உடனே இச்செய்தி தெரியவேண்டும். அடுத்தபடியாக, குறைந்தது அப்புத்தகத்தில் ஒரு பிரதியாவது புத்தக விற்பனையாளர் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டும். வெளியூரிலிருப்பவர்கள் தபால் மூலம் புத்தகத்தை வரவழைப்பதில் செலவு அதிகமாகிறது. மேலும், நேரிலே பார்த்து ஒரு புத்தகத்தை வாங்குவதில் உள்ள மனநிறைவு தபால்மூலம் பெறுவதில் ஏற்படுவதில்லை. 'புதிய நூல்கள்' என்ற தலைப்பில் ஒவ்வொரு பத்திரிகையாளரும் அவ்வப்போது வெளியாகும் நூல்களை, ஒரு சில விவரங்களுடன் வெளியிட்டு வந்தால், மிக்க உதவியாயிருக்கும். இதற்குப் பதிப்பாளர்களும் ஒத்துழைக்க வேண்டும்.

மற்றொன்றையும் இங்கே கூறுதல் பொருந்தும். இன்று எத்தனையோ எழுத்தாளர்களின் நல்ல எழுத்தோவியங்கள் பிறருக்குத் தெரியாமல் பெட்டிக்குள் அடைபட்டுக் கிடக்கின்றன. உண்மையிலே தகுதிவாய்ந்த ஓர் எழுத்தோவியம் புத்தக உருப்பெறுதற்கான வழியில்லை' வாய்ப்பில்லை என்ற ஒரு நிலை இருக்கலாமா? தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் குழு, சாகித்ய அகாதமி போன்ற நிறுவனங்கள் எழுத்தாளர்களிடமுள்ள கையெழுத்துப் பிரதிகளை வரவழைத்து, அவற்றுள் தகுதி வாய்ந்தனவற்றை, விரைவில் புத்தகங்களாக வெளியிட வழிவகை செய்தால் எவ்வளவோ உதவியாயிருக்கும். சாதி, மத, அரசியல் நோக்கமில்லாத-நடுநிலைமையுடன் எதையும் பார்க்கக்கூடிய சிலர் அடங்கிய குழுக்களை அமைத்து இப்பணியைச் சீரிய முறையிலே திறம்படச் செய்யலாம். இச் செயலால், சிறந்த எழுத்துக்களைத் தேடிப்பிடித்து உலகுக்குத் தந்த பெருமை கிடைக்கிறது. அத்துடன் 'சூழ்நிலை வாய்த்திலையே!' எனச் சோர்ந்து கிடக்கும் எத்தனையோ எழுத்தாளர் உள்ளங்கள் மலர்ச்சி பெறவும் வழி பிறக்கிறது.

ஒரு சில மேதைகளைத்தவிர, பொதுவாக எல்லா எழுத்தாளர்களுக்கும் நல்ல சூழ்நிலை அவசியம்.

> தக்க திறனிருந்தும்—நல்ல
> தருணம் வாய்த்திலதேல்,
> மிக்க புகழெய்தி—மக்கள்
> மேன்மை அடையாரம்மா!
>
> சூழ்நிலை வாய்த்திலதேல்—சூரனும்
> சோம்பி மடிவானம்மா!
> பாழ்நிலத் திட்டவிதை—வளர்ந்து
> பயன்மர மாமோ?

என்று கவிமணி பாடுகிறார், **Gray's Elegy** என்னும் ஆங்கிலப் பாடலைத் தழுவி.

நல்ல சூழ்நிலை உருவாக நாம் ஒருவருக்கொருவர் உதவுவோம். எழுத்தாளருடன் தொடர்புடைய அனைவரையும் நல்ல சூழ்நிலையை நமக்கு அமைத்துத் தர வேண்டுவோம். எழுத்தாளர் சங்கம் இதற்குப் பெரிதும் துணைபுரியும்.

இந்த மாநாட்டுக்கு வருகை தந்துள்ள உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எழுத்தாளர் சங்கச் சார்பில் நல்வரவு கூறுகின்றேன். மாநாட்டு ஏற்பாடுகளில் ஏதேனும் குற்றம் குறை இருப்பின் தயவுசெய்து பொறுத்தருளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தமிழ் எழுத்தாளர் சங்க எட்டாவது மாநாடு

பன்மொழிப் புலவர் **திரு. கா. அப்பாத்துரை,** எம்.ஏ., எல்.டி.,

அவர்களின்

தலைமையுரை

மாநாட்டுத் திறப்பாளர் அவர்களே! வரவேற்புத் தலைவர் அவர்களே! செந்தமிழுக்காக அரும்பணியாற்றிவரும் பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், ஆராய்ச்சி வல்லுநர் கு. கோதண்டபாணி பிள்ளை ஆகிய அறிஞர் பெருமக்களே! பேரன்பு கெழுமிய எழுத்தாளத் தோழர்களே! உங்கள் அனைவர்க்கும் என் அன்பு கலந்த வணக்கம்.

உலக நாகரிகத்தின் முன்னோடிகள் தமிழர்கள் என்று வரலாறுகளும் ஆராய்ச்சித் துறைகளும் முழங்குகின்றன. மனிதஇன நாகரிகத்தையும் பண்பாட்டையும் பண்பையும் ஆக்கிய தாயகம் தமிழகம். அத்தமிழகத்தின் பண்பின் முன்னோடி, அதன் தலையூற்று, தமிழ்க்கலை—தமிழிலக்கியம்! தமிழ் இலக்கியத்தை ஆக்கிய மரபு எழுத்தாளர் மரபு! எழுத்தாளர் மரபில் மூத்தோர் ஆக்கித்தந்த தமிழின் தொல் பேரிலக்கியத்தை வளப்படுத்தவும், மேலும் நல்லிலக்கியம், புத்திலக்கியம் தீட்டவும் வழி வகுக்கும் தமிழ் எழுத்தாளர் உலக அமைப்பாகிய தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் எட்டாம் ஆண்டு மாநாட்டில் நாம் இங்கே கூடியிருக்கிறோம். தென்னகத் தமிழகத்திலேயுள்ள பல்வேறு எழுத்தாளர் சங்கங்கள், கடல் கடந்த ஈழத் தமிழகம், மலாயாத் தமிழகம், பர்மியத் தமிழகம், ஆப்பிரிக்கத் தமிழகம் முதலிய பல்வேறு மாநிலங்களிலுள்ள தமிழ் எழுத்தாளர்கள், தமிழ் எழுத்தாளர் சங்கங்கள், அவற்றுளெல்லாம் பரந்து தமிழ் வாழ்வின் நரம்பாய் இயங்கும் நம் சங்க உறுப்பினர்கள், பிற எழுத்தாளர்கள், தமிழ்த் தலைவர்கள், தமிழர் ஆகியோர் தாயகத்தின் இந்தத் தாய்ச் சங்கத்தின் வளர்ச்சியில் கருத்தூன்றி, அதில் ஆர்வப் பங்குகொண்டு, நம் சங்கத்தின் நடவடிக்கைகளைப் புத்தார்வத்துடன் எதிர்நோக்கிய வண்ணம் உள்ளனர்.

இறைவனே தலைமை வகித்து நடத்தினார் என்று தமிழ் முன்னோர் பெருமையுடன் கூறும் முத்தமிழ் முச்சங்க மரபில் வந்தது நம் சங்கம். சங்கத்தமிழின் மங்காத தங்கப் புகழ்வளம் நம் கலைவளம். அகல்பேருலகில் உள்ள நூற்றுக்கணக்கான மொழிகளில் வேறெம் மொழியிலும் இல்லாத அளவில் மனித இனத்தின் மழலை இளமைக் காலத்திலிருந்து தொடங்கி இருபது முப்பது நூற்றுண்டுகளுக்கு மேற்பட்ட தொடர்ச்சியான இலக்கியம் நம்மிடம் உண்டு. அது சிறப்பான வகையில் தேசீய இலக்கியம், நம் தேசீய இலக்கியம். அதே சமயம் அதுவே உலகளாவிய பண்பார்ந்த மனித இன இலக்கியமாகவும் திகழ்கிறது. அது தனிப்பட்ட முறையில் சமயத்தைச் சாராத வாழ்க்கை இலக்கியமாக, மக்கள் இலக்கியமாக இலங்கியுள்ளது. அதே சமயம் உலகில் இன்று நிலவும் எல்லாச் சமய இலக்கியங்களும், பாரதத்தின் பழம் பெருஞ் சமயங்களும் உயிர் நடமிடும் பேரிலக்கியமாக அது நிலவுகின்றது. இப் பழம் பெரும் வழக்குக்கும் வளத்துக்கும் உரியவர்களாகிய நாம், பண்டை முச்சங்கமரபின் உரிமை வழித்தோன்றல்களாகிய நாம், புதிய விடுதலை ஆர்வம், புதிய மறுமலர்ச்சியார்வம் ஆகியவற்றுடன், இன்றைய உலகின் புதிய மறுமலர்ச்சியினங்களின் புதுமலர்ச்சிக்கலை நாகரிகங்களிடையே ஒரு புத்தம் புதுமலர்ச்சி நாடி வேகமாகச் செல்ல அடியெடுத்துவைத்திருக்கிறோம்.

விரைந்து ஒருலகமாக, ஒருபெருநாடாக, ஒரு மாபெரும் குடும்பமாக ஒன்றுபட்டுவரும் நம் தற்கால உலகிலே, மேலை மொழிகளிலே ஒருமேலை

மொழியாக, கீழை மொழிகளிலே ஒரு கீழை மொழியாக, மேல் திசைக்கும் கீழ் திசைக்கும் இடையே ஒரு பாலமாக, இரண்டின் பழமைக ளுடன் ஊடாடி இரண்டின் வருங்கால வளங் களின் ஒளிநிழல் வண்ணமாக நம் மரபுவளம் விளங்குகிறது. தாய்மொழிகளிடையே ***ஒரே உயர்தனிச் செம்மொழியாய்,*** உயர்தனிச் செம்மொழிகளிடையே ***ஒரு தாய் மொழியாய்,*** காலத்தின் எல்லையளாவிப் பழமைஉரத்துடன் புதுமை வளம் இணைக்கும் உயிர்நிலமாய் நம் தமிழ் நிலைபெற்று வளர இருக்கின்றது.

தொல்காப்பியர் ஓர் எழுத்தாளர். இளங்கோ ஓர் எழுத்தாளர்· சங்கப்புலவர்கள் எழுத்தாளர் கள். பாரதத்தின் சமயாச்சாரியர்களுக்கு மூல ஆச்சாரியார்களான ஆழ்வார்கள் நாயன்மார் கள் எழுத்தாளர்கள். பரணிகண்ட சயங் கொண்டார், உலாக் கண்ட கூத்தர், கம்பர், சேக்கிழார், பட்டினத்தார், தாயுமானவர், அருட்பா கண்ட வள்ளலார், பாரதி, பாரதி தாசன், புத்தேரி தேசிக விநாயகம், நாமக்கல் கவிஞர், முத்தமிழ்க் கலையின் மூவா இளங் கவிஞர் கண்ணதாசன் என நீண்டு வருகிறது நம் கவிதை எழுத்தாளர் வரிசை. இறையனுர் அகப்பொருளுரைகண்ட நக்கீரர், இளம்பூர ணர், அடியார்க்கு நல்லார், நச்சினர்க்கினியர், பரிமேலழகர், சிவஞான அடிகள், வேதநாய கம், மனேன்மணீயம் இயற்றிய ஆசிரியர் சுந்தரனர், ஆசிரியர் மறைமலையடிகள், பண் டிதமணி, நாட்டார், கல்கி, புதுமைப் பித்தன், தேவன், மு. வரதராசன், திரு. வி. க., நமச் சிவாயனர், செல்வக் கேசவராயர், மணி திரு நாவுக்கரசு, கலைமேதைகள் டாக்டர். அ. சிதம்பரநாதனர், டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை, டாக்டர் இராசமாணிக்கம், நம் விழாப் பாராட்டுக்குரிய பன்மொழிப்புலவர் மீனுட்சி சுந்தரனர், இராவ்பகதூர் கோதண்டபாணி பிள்ளை இன்னும் நம் சங்கத்திலே நம்முடன் தோளோடு தோளளாவி நடமாடும் புத்துலகத் தமிழ்ச் சிற்பிகள் என வளர்ந்து வருகிறது நம் உரையாளர் எழுத்தாளர் மரபு. பீடுசான்ற இம் மரபின் வளங்கெடாமல், இம் மரபுப் பண்பு மாசுபடாமல் காத்து, அதனைப் பொங்குமா வளமாக, இறவாப் புகழூற்றாகப் பெருக்க நாம் வழிவகைகள், வகைதுறைகள் காண இருக் கிறேம்.

மக்கள் வாழ்வின் சமுதாய உருவம் மொழி. அதன் இன உருவம், கலை உருவம் இலக்கியம். மொழி என்பது வாழ்விலிருந்து விலகினல் அது வாழாது. அதுபோல வாழ்வு என்பதும் மொழியிலிருந்து விலகினல் அது பண்பாட்டு வளமுடையதாகத் தழைக்காது: விரைவில் மக்கிமறுகி மடிவுறவே நேரும். இதற்கு மாருக இலக்கியம் மக்கள் வாழ்விலிருந்தோ, மக்கள் பேச்சு வழக்காகிய உயிர் மொழியிலிருந்தோ விலகுந்தோறும் அது காகித மலராகி உயிர்ப் பும் வளர்ச்சியும் இழக்கும். இதுபோலவே இலக் கியத்திலிருந்து விலகிய மொழியும் வாழ்வும் பண்புகுன்றித் தளர்ச்சியுறும். தொல்காப்பியர் காலத்திலிருந்து தமிழர் இதைஅறிந்திருந்தனர். ஆயினும் தமிழும் சரி, சூழ்துணை மொழிகளும் சரி, உலகமொழிகளும் சரி, இவ்வுயர் குறிக் கோளை அவ்வப்போது மறந்து மறுகியதுண்டு. எடுத்துக்காட்டாகச் சங்க இலக்கியத் தொடர்பு குன்றியதனல் இடைக்காலத் தமிழகமும், அவ் விடைக்கால இலக்கியத் தொடர்பும் குன்றிய தனல் அண்மைக்காலத் தமிழகமும் நாகரிகப் படியில் உலகில் பெரிதும் தடமிழந்து வீழ்ந் துள்ளன. இதுபோலவே மக்கள்வாழ்வுத் தொடர்பும் பேச்சுமொழித் தொடர்பும் இழந்த தனலேயே வேதமொழி, பாளி, சமஸ்கிருத இலக்கியங்கள் பொலிவற்று வளராமல் சென்று தேய்ந்து இறுகிநின்று பயனற்றன வாகியுள்ளன.

மொழிகளின் வாழ்வில் மலர்ச்சி,மறுமலர்ச்சி, புதுமலர்ச்சித் திருப்பங்கள் உண்டு. ஒரு மலர்ச்சிகூட இல்லாத மொழிகளே உலகில் இலக்கியவளம் அற்றனவாயுள்ளன. ஒரு மலர்ச்சி கண்ட மொழிகள் பல. சமஸ்கிருதம், கிரேக்கம், இலத்தீனம் முதலிய மொழிகள் ஒரே ஒரு பெரு மலர்ச்சி கண்டு பின் மறுகி மடி வுற்றன. ஆங்கிலம், சீனம், தமிழ் முதலிய மொழிகள் பல மலர்ச்சிகள், மறுமலர்ச்சிகள், புதுமலர்ச்சிகள் கண்டுள்ளன; கண்டு வரு கின்றன. தமிழில் சங்க இலக்கியஊழி, பக்தி ஊழி, கம்பர்காலமாகிய இதிகாசகாலம், வள்ள லார்காலம், நம் காலம் என மலர்ச்சிகள் பல. தற்கால மலர்ச்சி இயல்பான மலர்ச்சி. அதில் புதுமலர்ச்சியும் மறுமலர்ச்சியும் ஒருங்கே இணைந்துள்ளன. அது பண்டைத் தமிழின் இயல் மலர்ச்சியாலும், உலகளாவிய கண் ேணாட்டத்தாலும், சூழ்ந்துள்ள நாடுகளின் கலை, எதிர்கலை விளைவுகளாலும் நிகழும் மறு மலர்ச்சியாக விளங்குகின்றது. அதே நேரத் தில் தமிழர் புது விடுதலைத் தேசியத் தூண்டுத லால் ஏற்படும் புது மலர்ச்சியாகவும் இயல் கின்றது.

எழுத்தாளர் உருவாக்கும் இன்றைய இலக்கியம் பண்டை இலக்கியங்களைவிட எல்லையிலும் தேசிய ஆழவிரிவுகளிலும் எவ் வளவோ அகற்சியுடையபது. ஏனெனில் அதில் கவிதைமட்டுமன்றிஅதனினும் விரிவாக உரை நடை இலக்கியத் துறைகள் இடம் பெறு கின்றன. புதிய துறைகளான புதினம், சிறு கதை, கட்டுரை, நாடகம், ஓரங்க நாடகம் ஆகியவை, கவிதைக் காலம் காணுது புதிய உரை நடையே கண்ட வளங்கள் ஆகும். பத்

திரிகைத் தமிழ், பாடத்தமிழ், விஞ்ஞானத்தமிழ் ஆகியவை பண்டை முத்தமிழ் வகுப்பு முறை வகுத்துக் காணாத புது முத்தமிழ் வகுப்புக்கள் ஆகும். உலகளாவிய இப் புது வளத்திலும் தமிழ் பிந்திவிடவில்லை. ஆனால் பிந்திவிடாம லிருக்க இன்றைய நிலையில் நம் ஓயா விழிப்பும் உழைப்பும் தேவை. ஏனெனில் இன்றைய உலகம் விரைந்து ஒருவரை முந்தி ஒருவர், ஒரு மொழியுடன் போட்டியிட்டு ஒருமொழி, முன் னேறிச் செல்லும் உலகம் ஆகும். தனி வாழ்வு என்பது என்றுமே தயக்கமும் தளர்ச்சியும் தருவது. இன்றேஅதுஎண்ணக்கூடாத ஒன்று. அதேசமயம் தன் பண்பு, தன் முயற்சியின்றி உலகப்பண்புகளில் மிதக்கும் தனி மனிதனும் சரி, மொழியும் சரி-உலகில் இனி தனக்குரிய இடம் பெறாது. மேல்திசை மொழிகளைப் பார்த் துப் பின்பற்றிக் கீழ்த்திசை மொழிகளாகவும், பண்டை மொழிகளைப் பார்த்துப் பின்பற்றி இன்றைய மொழிகளாகவும் இயங்குவதென் பது பின்னேற்றமாக முடியும். உலக வாழ்வு என்ற தொழிற்சாலையில் ஒவ்வோர் உறுப்பும் பிற உறுப்புக்களின் உழைப்பைக் கொள்வ துடன் சோம்பி நிற்றல் பெருங் குற்றமாகும். தத்தம் உழைப்புப் பங்கைக் கொடுத்தே பொது வாழ்வில் தன் மதிப்புக்குரிய இடம் பெற முடியும்.

கீழ்த்திசை மொழிகள் இன்று பிற்பட்டுள் ளன என்பதில் ஐயமில்லை. பாரத மொழிகளின் நிலை இவற்றுள் சற்று மேம்பட்டது என்றே கூறலாம். ஏனெனில் மேலை மொழிகளின் புது வளமும் புதுமைப்பண்பும் இங்கே கீழ்த்திசை யில் ஆயிரம் ஆண்டுக் கணக்காக நீடித்த தூக் கத்தையும் செக்கு மாட்டுப் போக்கையும் கலைத்து விறுவிறுப்பு ஏற்படுத்தியுள்ளன. ஆனால் மேல் திசையைப் பின்பற்றும் முயற்சி என்றும் பின்பற்றும் முயற்சியாகவே இருந்து விடக்கூடாது. சரிசமநிலையே ஒத்துழைப்பு நிலையை விரைந்து எட்டிப் பிடிக்க முடியும். இதுபற்றி எழுத்தாளர் சங்கங்கள் விளக்கி வழிவகைகள் கண்டு திட்டமிடல் இன்றியமை யாதது.

கவிதையில், காவியத்தில் நாம் பிற்பட்டுவிட வில்லை. உரை நடைத் துறையில் பொதுவாகப் பிற்பட்டேயிருக்கிறோம். கவிதை, காவியத்தி லும் புதுமுறை காண்பதுடன் உரைநடைத் துறைகளில் நம் புதுவளம் காண முயலல் அவசியம். நம் பத்திரிகைகள் இவ்வகையில் நமக்கு உயிர்த்துணை தருகின்றன. அவற்றின் வளர்ச்சியில் நாம் பெருமிதமடையத்தக்க கூறு கள் பல உண்டு. ஆனால் உலகச் செய்தி களில் காட்டும் ஆர்வத்தை அவை இன்னும் மிகுதியாக நாட்டுச்செய்திகளிலும், நாட்டு இலக்கியக் கலைத்துறைச் செய்திகளிலும், அதைச் சார்ந்த சங்க நடவடிக்கைகளிலும், தனிமனிதர்—எழுத்தாளர் செயல்களிலும் ஈடு பாடு காட்டி இடமளிக்க வேண்டும். தாய் மொழிப் பத்திரிகைகள் மட்டுமன்றி ஆங்கிலம் முதலிய ஆட்சி மொழிப் பத்திரிகைகளும் நாட்டிலும் நாட்டுமொழி இலக்கிய வரலாறு களிலும் மிகுந்த அக்கறை காட்டவேண்டும். ஆனால் இன்று இலக்கிய வளர்ச்சியைவிட மொழி வளர்ச்சியே மிகவும் பிற்பட்டுள்ளது. விடுதலையடைந்த பாரதத்தில் இவ்வழியில் ஒரு பெரும் புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டா லன்றி, நாட்டு மொழிகள் உலகமொழிக ளிடையே தக்க இடம்பெற முடியாது.

மேலையுலகுடன் ஒப்பிடும்போது நாம் எட்ட முடியாத நிலையில் பிற்பட்டிருக்கும் துறைகள், கல்வியிலக்கியம், விஞ்ஞான இலக்கியம், வர லாற்று இலக்கியம், ஆராய்ச்சி இலக்கியம் ஆகியவையே ஆகும். நம் சிறப்புக்குரிய தமிழ் மொழிகூட நெடுங்காலம் இத்துறைகளில் ஈடுபடாதிருந்த நிலையில் சிறப்புக் குன்றி இத் துறைகளுக்கேற்ற சொல்வளம் அருகிக் கிடக்கிறது. விரைவில் இந்நிலையை நாம் செப்ப னிட்டாக வேண்டும். மேலைமொழிகள் இத் துறையில் விரைந்து வளர்ச்சியடையப் பண்டை நாகரிக மொழிகளான கிரேக்க இலத் தீன்களையே பெரிதும் பயன்படுத்தின. கீழை யுலகில் அதுபோலப் பழைய நாகரிகம் படிந் துள்ள உயர் தனிச் செம்மொழியான சமஸ் கிருதத்தையே பல மொழிகள் கையாண்டு வருகின்றன, கையாள எண்ணுகின்றன. ஆனால் தமிழ் மொழிக்குப் பழந்தமிழே, மிக உயரிய உயர்தனிச் செம்மொழியாய், ஏனைய பண்டை மொழிகளும் காணாத பல்திசைச் சொல்வளமும் உரமும் உடையதாயிருக் கிறது. இதைப் பயன்படுத்தி மற்றக் கீழை மொழிகளையும் மேலைமொழிகளையும் தாண்டி விரைவில் தமிழ் கலைச்சொல்வளம் பெருக்கி விட முடியாதென்றில்லை. உண்மையில் இத் தேர்வில் நாம் வெற்றிபெற்றால், மற்றக் கீழை மொழிகளுக்குமட்டுமல்ல, மேலை மொழிகளுக் குக்கூட நாம் பல நல்ல படிப்பினைகளை இத் துறையில் வழங்கி, அவற்றையும், உலக அறிவியல் துறையனைத்தையும் பெரிதும் ஊக்கி உயர்த்தியவர்களாவோம்.

இலக்கியம் முன்பெல்லாம் உயர் இலக்கியம், நல்லிலக்கியம் அல்லது வாழ்க்கை இலக்கி யம், அறிவிலக்கியம் எனப் பிரிக்கப்பட்டு வந் தது. உயர் இலக்கியமே அழகு நடைக் கற் பனை இலக்கியம். நல் இலக்கியம் அல்லது வாழ்க்கை இலக்கியத்தைச் சார்ந்தவையே மக்கட் பாடல், மேடை நாடகம், கதை, புனை கதை, சிறுகதை என்பன. பத்திரிகைகள், அரசியல் பத்திரங்கள், கடிதங்கள், மேடைப்

பேச்சு முதலியன இத்துறையைச் சேர்ந்தவையே. இவற்றுள் பல, சிறப்பாகப் புனைகதை சிறுகதைகள் இப்போது உலக இலக்கியத் துறைகளில் புதிய உயர் இலக்கியமாகவே இடம்பெற்றுவிட்டன. மூன்றாவது வகை கலை இயல்துறை இலக்கியம், பாட இலக்கியம், வரலாறு போன்றவை; இவையும் இரண்டாம் வகையும் இலக்கிய மதிப்புப் பெருதிருந்த காலம் உண்டு. ஆனால் மொழிவளம் பற்றிய மட்டில், முதல் வகைக்கு முன் தரப்பட்ட முக்கியத்துவத்தைவிட மிகுதியான முக்கியத்துவம் இப்போது பத்திரிகை, வரலாறு, அரசியல், வாழ்க்கை நிகழ்ச்சிகள் பற்றிய 'கனரக' இலக்கியத்திற்கும் உலகமெங்கும் தரப்பட்டுவருகிறது. நளின எழுத்தாளர் மட்டுமன்றிக் 'கனரக' எழுத்தாளர்களும் மொழிபெயர்ப்பு எழுத்தாளர்களும் ஆராய்ச்சி எழுத்தாளர்களும் நிரம்பிய நம் எழுத்தாளர் சங்கம் இலக்கிய வளர்ச்சியில் மட்டுமன்றி மொழி வளர்ச்சியிலும் வளத்திலும் பெரும் பொறுப்புடையதாகும்.

'சுவர் இருந்தாலன்றிச் சித்திரம் எழுத முடியாது' என்பது பழமொழி. எழுத்தாளர் உலகில் இலக்கியமும் மொழியும் உண்மையில் சித்திரங்கள் போன்றவைதான். எழுத்தாளராகிய நாம்தான் சுவர்கள். தமிழுலகம் எழுத்தாளரைப் பேணவிட்டால் அது இலக்கியத்தையும் பேணியதாகாது. பண்டைத் தமிழ் மன்னர்களும் வேளிர்களும் இவ்வுண்மையறிந்தே நாட்டுப்பண்பின் ஓர் முக்கிய கூறாகப் புலவருலகைப் போற்றி வளர்த்தனர். சமயநிலைய ஆட்சியும், அரசாட்சியும், சமூக ஆட்சியும் படிப்படியாகத் தமிழரிடமிருந்தும், தமிழிலிருந்தும் நழுவிய இடைக்காலங்களில் எழுத்தாளர் என்ற இனமே படிப்படியாக நலிவுற்றுவிட்டது. ஆயினும் உயர்பதவியிலுள்ள ஆட்சி வகுப்பினரில் பல நல்ல தனி மனிதர்கள் எழுத்தாளர்களாகி இலக்கிய மரபு அழியாமல் காத்தனர். இன்றும் நம்மிடையே இந்த இடைக்கால மரபு பேணிய சீரிய எழுத்துக் கலைஞர் பலர் உள்ளனர். ஆசிரியர் மறைமலையடிகள் போன்றோர் உண்மையில் தமிழார்வம் காரணமாகத் தமிழ் எழுத்தாளரான ஆட்சி மொழியறிஞர்களேயாவர். ஆனால் இந்நிலை மாறிய போது பத்திரிகைகளும் அவை பேணும் புனைகதை, சிறு கதைகளும் ஒரு புதிய எழுத்தாளர் இனத்தைப் படைத்துவருகின்றன. தமிழ் ஆட்சி மொழியாகி வளரும் எதிர் காலத்தில், எழுத்தாளர் சங்கம் தமிழ்ச் சங்க மரபில் வந்த புதுச் சங்கமாகவும், எழுத்தாளர் இனம் பண்டை நக்கீரர் மரபில் வந்த புது இனமாகவும், வருங்கால இலக்கியம் சங்க இலக்கிய மரபில் வந்த உயரிய, ஆனால் அதனினும் பரப்பிலும் வளத்திலும் அகன்ற உலக இலக்கியமாகவும் வளர வழியுண்டு. அதை விரைவுபடுத்தும் வகையில் எழுத்தாளரின் உரிமைகளுக்காக எழுத்தாளர் மன்றங்களும் பத்திரிகைகள், ஆட்சித் துறைகள்போன்ற அமைப்புக்களும் பாடுபடவேண்டும்; போராடவேண்டும். எழுத்தாளர்களைப் பேணச் செல்வர்களும் ஏழைகளும் கல்வி நிலையங்களும் போட்டியிட்டு முந்தவேண்டும். எழுத்தாளர்கட்காகச் செலவாகும் ஒவ்வொரு காசும் மொழிக்கும் நாட்டுக்கும் கோயிலுக்கும் செலவாகும் ஓர் ஆயிரம் பொன்னின் மதிப்புடையதாகும் என்ற எண்ணம் தமிழரிடையே வளர்ந்தால், தமிழகம் பொன்னுலகமாக உயர்ந்து ஓங்கிச் செழித்து வளர்தல் உறுதி.

நம் தமிழ் எழுத்தாளர் சங்கம் எழுத்தாளர்களுக்கு வலிவும் ஊக்கமும் வளமும் பெருக்கி, உலகின் பன்மொழி எழுத்தாளர் அமைப்புக்களுடன் தொடர்பு பூண்டு எண்ணும் எழுத்தும் வகுத்து வளம்பெருக்குமாக.



சல்லா இராதாகிருஷ்ண சர்மா

"சீனு"

இரண்டு மொழி மக்கள் கலந்து வாழும் பகுதிகளில் வளரும் குழந்தைகள், அதிகக் கஷ்டமின்றி, விளையாட்டாகவே இரண்டு மொழிகளையும் கற்றுக்கொண்டுவிடுவார்கள். ஆனால், வயதான பிறகும் இரண்டு மொழிகளில் நல்ல இலக்கியத் தேர்ச்சியுடன் விளங்குவோர் தொகை குறைவு. அதிலும், தமது இரு மொழி அறிவைக் கொண்டு இலக்கிய வளர்ச்சிக்குப் பணிபுரிவோர் தொகை இன்னமும் குறைவாகவே இருக்கும். இவருள் ஒருவரே திரு சல்லா இராதாகிருஷ்ண சர்மா.

தாய்மொழியான தெலுங்கு மொழியினிடத்து உள்ள பற்று இவருக்குத் தமிழினிடத்தும் உண்டு. திராவிடமொழிகளில் தொன்மையானது என்ற காரணத்தாலும் பண்டை இலக்கியவளம் காரணமாகவும் தமிழினிடத்து இவரது பற்று பக்தியாகவே வளர்ந்துவிட்டது. ஆகவே இளம்வயது முதலே பண்டைத் தமிழ் நூல்களை முறையாகக் கற்றுவந்தார். தந்தையாரோ சிறந்த தெலுங்குப் பண்டிதரும் அஷ்டாவதானியும் நூலாசிரியருமான திரு இலக்ஷ்மிநாராயண சாஸ்திரி. ஆகவே இராதாகிருஷ்ணசர்மா தெலுங்கு மொழியில் வல்லவராக விளங்கியதில் வியப்பில்லை. எம்.ஏ. பட்டம் பெற்ற திரு சர்மா சுமார் பத்தாண்டுக் காலம் உயர்நிலைப்பள்ளியிலும் கல்லூரியிலும் தெலுங்கு மொழி ஆசிரியராக விளங்கினர். நாளுக்கு நாள் தமது தமிழறிவைப் பெருக்கிக் கொண்டே வரலானர்.

இளமை முதலே தெலுங்கில் நல்ல பேச்சாளரும் எழுத்தாளருமான திரு சர்மா தாம் தமிழில் சுவைத்த இலக்கிய இன்பத்தை ஆந்திரப் பொதுமக்களுடன் பகிர்ந்து அனுபவிக்கத் தீர்மானித்தார். தமிழ் இலக்கியம் பயில்வதோடு தமிழிலக்கிய வரலாற்றையும் தமிழ்நாட்டு வரலாற்றையும் ஆராயலானர். இதன் பயனாகப் பல புத்தகங்களும் கட்டுரைகளும் வரையலானர்.

திரு சர்மா செஞ்சிக்கோட்டையின் வரலாற்றையும் தேசிங்கின் வீரக்கதையையும் தெலுங்கில் சுவையாக எழுதியுள்ளார்; சிலப்பதிகாரக் கதையை வசனமாக எழுதினர். அந்த நூலுக்குக் கிடைத்த நல்ல வரவேற்பே அவர் " தமிழ பஞ்ச காவ்ய கதலு " எழுதத் தூண்டியது. இந்த நூலில் தமிழரின் ஐம்பெரும் காப்பியங்களின் கதைச்சுருக்கத்தையும், நூல் ஒவ்வொன்றையும் பற்றிய பல குறிப்புக்களையும், தமிழர் மரபு பற்றிய விவரங்களையும் காணலாம். அழகிய ஒழுங்கான முறையில் தமிழரின் பண்டை இலக்கியச் செல்வத்தை ஆந்திரருக்கு அறிமுகப்படுத்தியுள்ளார். இந்த நூல் பிறமொழி இலக்கிய அறிமுகத்திற்கு ஒரு நல்ல முன்மாதிரி. இது தெலுங்கிலிருந்து பிற மொழிகளிலும் மொழிபெயர்ப்பதற்கு ஏற்றது.

நாயக்கர் மன்னர்கள் மதுரையை ஆண்ட காலத்தைப் பின்னணியாகக் கொண்டு " தளவாய் ராமப்பய்யா " என்ற ஒரு நாவலையும் தெலுங்கில் இயற்றினர் திரு சர்மா.

இவை அனைத்தையும்விட முக்கியமானது " தமிழ வேதமு ". இந்நூல் திருக்குறளின் தெலுங்கு மொழிபெயர்ப்பு. திருக்குறளையும் நூலாசிரியரையும் பற்றிய விரிவான ஆராய்ச்சிக் கட்டுரையைக் கொண்டது; அறத்துப் பாலையும் பொருட்பாலையும் முழுதும் மொழி பெயர்த்துள்ளார். தொடக்கத்திலும் ஈற்றிலும் எதுகை அமைந்த இரண்டடிப்பாடல்களாகவே சுவைகுன்ருது இயற்றியுள்ளார். ஒவ்வொரு பாலுக்கும், இயலுக்கும், அதிகாரத்துக்கும் விளக்கம் கொடுத்துள்ளார். ஆனல் வசதிக் குறைவால் நூல் முழுதும் இன்னும் அச்சாகவில்லை. முன்னுரைப் பகுதிகளையும், ஐம்பது குறளையுமே ஒரு சிறு நூலாக வெளியிட்டுள்ளார். இதில் திருக்குறள் தமிழ் மூலத்தைத் தெலுங்கு லிபியில் வெளியிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

திரு சர்மா பாரதியின் " ஞானரதத் "தையும், இராஜாஜியின் "ஆத்மசிந்தனை"யையும் தெலுங்கில் பெயர்த்துள்ளார். தற்போது கல்கியின் "பார்த்திபன் கனவு" நாவலை சாகித்திய அக்காதெமிக்காக மொழி பெயர்த்து வருகிருர்.

"தென்மொழிகளுக்குத் தொண்டாற்றிய பிற நாட்டார்" என்ற தலைப்பில் திரு சர்மா ஓர் ஆராய்ச்சிக் கட்டுரைத் தொடர் தயாரித்து வருகிருர். தென் மொழிகளின் இலக்கணம், இலக்கியம், —எழுத்து வடிவம், சொல் பிரயோகங்கள் ஆகியவற்றின் ஒற்றுமை வேற்று

மைகளை நுட்பமாக ஆராய்ந்து வருகிறார். " இரண்டு மூன்று மொழிகளைக் கற்று அவற்றின் இலக்கிய வளர்ச்சியை ஆழ்ந்து ஆராய்ந்தால், எவருக்குமே மொழிவெறி தோன்றாது!" என்கிறார் திரு சர்மா. தமிழ்மொழியால் தெலுங்குமொழியும் இலக்கியமும் பயனடைந்ததையும், அது போலத் தெலுங்குமொழி தமிழுக்குச் செய்த நன்மைகளையும் விளக்கி இரண்டு பெரும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் (Papers) தயாரித்துள்ளார். "தமிழ வாங்மய பரிசயமு" என்ற தலைப்பில் தமிழ் இலக்கிய வரலாறு ஒன்றையும் தயாரித்துள்ளார். இதுவும் அச்சிடத் தயாராக உள்ளது.

திரு சர்மா கவிதையை மொழிபெயர்ப்பதிலும் வல்லவர். பாரதியின் பாடல்களையும் சங்கப் பாடல்கள் சிலவற்றையும் சிலப்பதிகாரப் பகுதிகளையும் தெலுங்கு யாப்பில் மொழி பெயர்த்துள்ளார்.

பாரதியின் ஞானரதத்தையும் சிலப்பதிகாரத்தையும் தெலுங்கில் நாடகமாக்கியுள்ளார் திரு சர்மா. இவை வானொலியில் ஒலிபரப்பாகியுள்ளன. இவை தவிர, இராஜேந்திரச்சோழன் காலத்தைப் பின்னணியாகக் கொண்டு "ஸ்ரீவிஜயம்" என்ற ஒரு கற்பனை நாடகமும் இயற்றியுள்ளார்.

தற்காலத்துச் சிறந்த தெலுங்கு எழுத்தாளரான திரு சர்மா வேறு பல நூல்களும் எழுதியுள்ளார். குழந்தைகளுக்காக இரண்டு கதைப் புத்தகங்களும், ஒரு மொழிபெயர்ப்பு நூலும், 'வியாசமஞ்சுஷா' என்ற இலக்கியக்கட்டுரைத் திரட்டும் அவற்றுள் சில.

இவரது சிறுகதைகள் சுவையும் எளிமையும் மிக்கவை. சுமார் மூன்று ஆண்டுக் காலம் தில்லியில் வேலைபார்த்ததால், தில்லி வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு பல கதைகளைப் படைத்திருக்கிறார். அண்மையில், தற்காலத் தெலுங்குமொழி நாடகங்கள் சிலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்து வருகிறார்.

மதுரை நாயக்கர்மன்னர் வரலாறு, ஞானரதம் ஆகிய மொழிபெயர்ப்பு நூல்களை வெளிக்கொணர்வதில் இப்போது முனைந்துள்ளார் ஆசிரியர் சர்மா. ஆனால் தமது திருக்குறள் மொழிபெயர்ப்பு நல்ல முறையில் வெளிவர வேண்டும் என்பதே இவரது முதல் விருப்பம்.

முப்பத்திரண்டு வயதிற்குள் இவற்றையெல்லாம் சாதித்துள்ள ஆசிரியர் சர்மா தற்போது சாகித்திய அக்காதெமியின் சென்னைக் கிளையில் பணியாற்றுகிறார். தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் தவிர, சமஸ்கிருதம், இந்தி, கன்னட மொழிகளிலும் பயிற்சி உடையவர்.

Books by

O. R. KRISHNA SWAMI,
M. A., M. Com., F. R. E. S. (Lond.)

1. *Essentials of Commerce* for 3 year degree Course 5-50
2. *Elements of Accountancy* 6-00
3. *Commercial Practice* for S. S. L. C. 4-25
4. *Elements of Accountancy and Commerce* for P. U. C. 4-50
5. *The Principles and Practice of Co-op. Audit* Part 1 Part 11 In Print 2-00
6. கூட்டுறவால் நாட்டுயர்வு 0-50
7. *Elements of Economics* 3-00

MARAIMALAI PUBLISHING HOUSE
35. Mannarswami Koil Street,
ROYAPURAM, MADRAS-13

வளர்ந்துவரும் தமிழ் இலக்கியத்திற்கு வாழ்த்துக் கூறுவதோடு அதிலுள்ள உயர்ந்த செல்வங்களைத் தெலுங்கில் மொழிபெயர்க்கும் பணியிலும் ஈடுபடுகிறார். தமது பலமொழி அறிவை மேலும் மேலும் பெருக்கிக் கொள்வதிலும், பயனுள்ள இலக்கியத் தொண்டு புரிவதிலும் தமது ஓய்வுநேரத்தைச் செலவிடுகிறார்.

" செப்பு மொழி பதினெட்டுடையாள்—எனின்
சிந்தனை ஒன்றுடையாள் "

இந்தியத்தாய். இந்தியமொழி எதில் வெளியானால் என்ன ? இலக்கிய மரபில் ஓர் ஒருமைப் பண்பு உண்டல்லவா? எந்த ஓர் இந்திய மொழியில் வரும் நல்ல இலக்கியமும் பிற இந்திய மொழியினர்க்கும் சொந்தந்தான். ஆனால் அதை அனுபவிக்கச் சிறந்த மொழி பெயர்ப்பாளர் உதவி தேவை. இரண்டு மூன்று மொழிகளில் நல்ல பயிற்சியுடைய சிறந்த மொழிபெயர்ப்பாளரின் அவசியம் முன்பு எப்போதையும்விட இப்போது உணரப்படுகிறது. அந்தப் புது மரபில் ஒரு வழிகாட்டியாக விளங்குபவர் திரு சர்மா. அவரது பயனுள்ள பணி சிறந்து வளர்க !

வெண்ணிகுளம் கோபால குறுப்பு

[மூலம்: டாக்டர் எஸ். கே. நாயர் மொழிபெயர்ப்பு: **தாழம்பூ**]

இன்றைய உலகில் அரசியல் சார்பில்லாத ஒரு கவிஞனையோ, எழுத்தாளனையோ பார்ப்பது மிகவும் அருமையாகும். எந்தக் கட்சித் தொடர்பும் இல்லாமல் மனிதகுலத்துக்குமட்டும் தொண்டுபுரியும் ஒரு கவிஞனோ, எழுத்தாளனோ இன்று புகழேணியை எட்ட முடியவில்லை. காரணம் அரசியல்-கட்சிப் பற்றுகக ள சமுதாயத்தை இன்று அந்த அளவு பீடித்திருக்கின்றன. ஆனால் இவற்றையெல்லாம் கடந்து ஒரு மனிதர் வாழ்கிறார் என்றால், அவர் வியப்புக்குரியவர் தானே ? இந்த வியப்புக்குரிய மனிதரில் வெண்ணிகுளம். கோபால குறுப்பு ஒருவராவர்.

திரு. குறுப்பு முழுக்க முழுக்க ஒரு நல்ல மலையாளக் கவிஞராவர். அவர் எந்த அரசியல் கண்ணோட்டத்தோடும் பாப்புனைவதில்லை; பொதுவாக மனிதகுலத்துக்காகவும், சிறப்பாகத் தன்னுடைய மகிழ்ச்சிக்காகவுமே அவர் பாட்டுப் பாடுகிறார். ஆனால் அந்த மகிழ்ச்சியை மற்றவர்களும் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற வேணவா மட்டும் அவருக்கு உண்டு. ஆரவாரமின்றி இலக்கியப் பணி புரிந்தாலும், அவருடைய பெயர் இன்று கேரளம் முழுவதும் அடிபடும் ஒரு பெயராக ஆகியிருக்கிறது. அவர் பக்திக் கரிசனையோடு பின்பற்றும் ஆசிரியர் மாகவி. வள்ளத்தோலாவர்.

திரு. குறுப்பு மத்திய திருவாங்கூரில் உள்ள வெண்ணிகுளம் என்ற அழகிய ஊரில் பிறந்தார். அவருடைய தந்தையார் மலையாளத்திலும், சமஸ்கிருதத்திலும் தேர்ந்த புலமையுடையவராவர். தந்தையாரிடத்திலேயே அவர் முதன்முதல் மலையாளமும், சமஸ்கிருதமும் பயின்றார். அதிகமாகப் பள்ளிக்கூடத்தில் படிக்காவிட்டாலும் அவர் உயர்தர மலையாளத் தேர்விலும், சென்னைப் பல்கலைக்கழகப் புலவர் தேர்விலும், தனிப்பட்ட முறையில் புகழுடன் தேறினார். அதிலிருந்து 25 ஆண்டுகள் அவர் திருவெள்ளம் எம். ஜி. எம். உயர்நிலைப் பள்ளியில் மலையாள ஆசிரியராக இருந்தார். இச்சமயத்தில் அவர் இந்தி மொழி பயின்று அதில் உள்ள ஒரு முக்கியமான இலக்கியமான துளசிதாசரின் 'இராமசரித மானசத்தை' மலையாளத்தில் மொழிபெயர்த்தார்.

ஆசிரியராகப் பணியாற்றியதற்குப் பிறகு திரு. குறுப்பு 7-ஆண்டுகள் திருவாங்கூர்ப் பல்கலைக்கழக ஏட்டுச்சுவடி ஆராய்ச்சிப் பகுதியில் கடமை புரிந்தார். இத்தருணத்திலேயே அவர் தமிழைக் கற்கத் தொடங்கித் திருக்குறளை மலையாள மொழியில் நேர்த்தியாகப் பெயர்த்தார். இம்மொழிபெயர்ப்பு மற்றவர்களுடையதைக் காட்டிலும் இயற்கையழகும், கவித்திறமும், மூலநலமும் கொண்டு மிளிர்கிறது. மலையாள வித்தகர்கள் யாவரும் இவருடைய திருக்குறள் மொழிபெயர்ப்பையே சீரியது என்று போற்றுகின்றனர். இதற்கப்புறம் கேரளப் பல்கலைக்கழகம் தயாரித்துவரும் மலையாளப் பேரகராதிக்கு இவர் கணகாணிப்பாளரானார். இக்கடமையையே அவர் இன்றும் பார்த்து வருகிறார்.

கடந்த 40 ஆண்டுகளாக ஓயாமல் கவிதை எழுதிவரும் கேரளக் கவிஞர் இவர் ஒருவரே என்றும் சொல்லலாம். திருவாங்கூர் கல்விக் கண்காட்சி என்ற ஒன்று நடந்தபோது, அங்கு வைக்கப்பட்ட கவிதைப் போட்டியில் இவர் முதல் பரிசு வாங்கினார். 1949-ல் திருப்புனத்துறையில் நடந்த மாநாடு ஒன்றில் கொச்சி மன்னர் இவருக்கு 'இலக்கிய வல்லுநர்' (சாகித்ய நிபுணர்) என்ற பட்டத்தை வழங்கிய தோடுபதக்கங்களும் கொடுத்துப்பாராட்டினர். 1958-ல் தில்லியில் நடந்த குடியரசு விழாக் கவியரங்கில் இவர் மலையாள மொழிச் சார்பில் கலந்து கொண்டு சிறப்பித்தார். அருகாமையில் இவர் மாகவி. சுப்பிரமணிய பாரதியின் பாடல் தொகுப்பான 'இன்கவித் திரட்டை' மலையாளத்தில் கொணர்ந்து அம்மொழியைப் பெருமைப்படுத்தியிருக்கிறார்.

திரு. குறுப்புக்குத் தமிழ், இந்தி, சமஸ்கிருதம்-ஆகிய மும்மொழிகளிலும் உள்ள புலமை அவரை ஓர் உயர்ந்த எழுத்தாளராகச் செய்திருக்கிறது. ஆங்கிலமும், வங்கமும் இவருக்கு ஓரளவு நன்கு தெரிந்த மொழிகளாகும். பன்மொழிப் பயிற்சி இவருக்குப் பாங்கான கவிதைகளைச் சமைக்க மெத்தவும் உதவியாக இருக்கிறது. இவர் ஏறத்தாழ 20-கவிதை நூல்களை மலையாளத்தில் வெளியிட்டுப் புகழடைந்திருக்கிறார். அவ்விருபது நூல்களும் இருபது மணிக்குவைகளாக ஒளிவிட்டுத் துலங்குகின்றன. அவற்றில் சில சவுந்தரிய பூசை, வசந்தோற்சவம், வெள்ளித் தாலம், வெளிச்சத்தினுடெ அம்மாள், சரோவரம்,

பாலிருக்கும்! பழமிருக்கும்! பசியிருக்காது!

[கவிஞர் கண்ணதாசன்]

பாலிருக்கும் பழமிருக்கும் பசியிருக்காது
பஞ்சணையில் காற்றுவரும் தூக்கம் வராது
நாலுவகைக் குணமிருக்கும் ஆசை விடாது
நடக்கவரும் கால்களுக்கும் துணிவிருக்காது

கட்டவிழ்ந்த கண்ணிரண்டும் உங்களைத்தேடும்—பாதிக்
கனவுவந்து மறுபடியும் கண்களை மூடும்
பட்டுநிலா வான்வெளியில் காவியம் பாடும்—கொண்ட
பள்ளியறை பெண்மனதில் போர்க்களமாகும்

பண்புவந்து பருவம்காக்கும் வேலியானதே—கூடப்
பழகிவந்த தோழியர்க்கும் கேலி யானதே
மண்படைத்த மானம்என்னை அடிமைகொண்டதே—மனம்
மாம்பழத்து வண்டுபோலத் தனிமை கொண்டதே.

காதலுக்கு ஜாதியில்லை மதமுமில்லையே—இரு
கண்கள்பேசும் வார்த்தையிலே பேத மில்லையே
வேதமெல்லாம் காதலையே மறுப்பதில்லையே—அது
வேதம்செய்த குருவைக்கூட விடுவதில்லையே.

சாகுந்தலம், ரோகிணி என்பனவாகும். இவற்றோடு இவர் "கதா நட்சத்திரங்கள்' என்ற சிறுவர்க்கான கதைகளையும், 'காளிதாச கன்மம்' என்ற நாடகமும், 'நீல ஜலத்திலே பத்மம்' என்ற நவீனமும், வஞ்சி இராஜேஸ்வரி என்ற வாழ்க்கைவரலாறும், 'கைராலி கோசம்' என்ற அகராதியும் எழுதி வெளியிட்டுள்ளார். இவை யாவும் கேரளத்தில் இன்றும் போற்றப்படும் நூல்களாகும்.

கவிஞர் குறுப்பின் எழுத்துக்கள் நயமுடையன; எளிமையும், சொற்செட்டும், இசை நலமும் கெழுமியன. அவருக்குக் கவிதையில் ஒரு தனி இடம் உண்டு. இனிமையும், ஒழுங்கும் நிறைவும் அவருடைய பாடல்களை என்றும் அணிசெய்து நிற்கும். இத்தகைய ஒரு மலையாள எழுத்தாளரைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் பாராட்டிப் பதக்கமளிப்பது ஒரு சிறப்பான நிகழ்ச்சியாகும்.

உலகினர்க்குத் திருவள்ளுவர் செய்தி

[டாக்டர் அ. சிதம்பரநாதன், *எம்.ஏ., எம்.எல்.சி.*]

[மாஸ்கோவில் நடைபெற்ற கீழை நாட்டு மொழிப் பேரறிஞர்களின் உலக மாநாட்டில் 12-8-1960-ல் சென்னைப் பல்கலைக் கழக ஆங்கிலத் தமிழ்ப் பேரகராதித் துறைத் தலைவர் டாக்டர் அ. சிதம்பரநாதன் எம். ஏ., எம். எல். சி., ஆங்கிலத்தில் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.]

கி. மு. முதல் நூற்றுண்டுக்கும் கி. பி. முதல் நூற்றுண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த திருவள்ளுவர் என்னும் தமிழ்ப் பேறிஞரும் பெரும் புலவரும் பெருங் கவிஞருமாகிய பெரியார், ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங் குறட்பாக்கள் அடங்கிய திருக்குறள் என்னும் பெருநூலினை உலகத்தார்க்குத் தந்துள்ளார். அது உலக மக்கள் அனைவருக்கும் என்றென்றும் பயன்படக்கூடிய விழுமிய நூலாக உள்ளது. உலக மொழிகளிற் சிறந்த பலவற்றுள் இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. டாக்டர் ஜி. யூ. போப், எல்லிஸ், பாப்ளி போன்ற பேரறிஞர்கள் திருக்குறள் உலகத்தார்க்கு ஒரு சிறந்த வழிகாட்டி என்று கூறி அதனைச் சிறப்பித்துள்ளனர். டாக்டர் ஆல்பர்ட்டு சுவைட்சர் போன்ற மூதறிஞர்கள் இந்நூலினைப் பேரற நூல் எனப்போற்றி, உலக மக்களிடையே அன்பு வளர்தற்கும் அறியாமை அகலுதற்கும் இது எவ்வளவு சிறந்த கருவியாக இருந்து வருகிறது என்பதை எடுத்துக் காட்டி உள்ளனர். ஒருவரையொருவர் நன்கு அறிந்து கொள்ளுதலினுலும், மற்றவர்களுடைய குணத்தைப் பாராட்டிக் குற்றத்தை மறைக்கவும் மறுக்கவும் பழகிக் கொள்ளுதலினுலும், ஒருவரை யொருவர் மதிப்பது உலகத்தில் வளர்ச்சி அடையும். அவ்வளர்ச்சியின் அடிப்படையில் உலகமக்கள் ஒற்றுமையாதல் கூடும். உலக மக்களிடையே உடன்பிறப் பெண்ணத்தையும் அமைதியையும் செழிப்பினையும் நிலைநாட்டுதற்கு ஏற்ற வகையில் திருவள்ளுவருடைய நூல் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னுல் இயற்றப்பட்டதாயினும், இந்நூல் இக்கால உலகத்தார்க்குக்கூட மிக்க கவர்ச்சி உடையதாய் இருக்கிறது. ஈண்டுச் சில சிறப்பான பகுதிகள் மாத்திரம் எடுத்துக் காட்டப்படும்.

இல்லறத்தில் வாழ்கின்ற ஒருவரும் துறவறத்தில் செல்கின்ற ஒருவரும் வீடுபேறு எய்துதல் கூடும் என்பது திருவள்ளுவர் கருத்து. தீரத் துறந்தவர்களே நல்லவர்கள் என்றும், அவர்களுக்கே வீடுபேறு உண்டென்றும் திருவள்ளுவர் கூறினுரென்று சிலர் ஒரு பக்கம் செப்பினும், திருவள்ளுவர் நல்வழியிலே இல்லறம் நடாத்துகின்ற ஒருவரது வாழ்க்கை, நோற்றுத் துறவறத்தில் இயல்வாரது வாழ்க்கையைக் காட்டிலும் வலிமையுடைத்து என்று கூறியுள்ளார் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

" தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர் "

என்று அவர் ஓரிடத்திற் கூறினுராயினும் இன்னேர் இடத்தில்,

" ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து "

என்று கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், நாள்தோறும் ஏதாவதொரு நற்செயலை ஆற்றுகின்ற ஒருவர் இனிப் பிறக்கும் நாள் இல்லாது செய்துவிடுகின்றுர் என்றும், பிறவியாகிய பெரிய குறையைத் தம்முடைய நற்செயலால் அடைத்து விடுகின்றுர் என்றும் அவர் கருதினுரென்பது

"வீழ்நாள் படாஅமை
நன்றுற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்"

என்ற குறட்பாவினுல் தெளிவாகும்.

திருவள்ளுவர் புறவேடங்களுக்கு வைத்த மதிப்பைக் காட்டிலும் அகப் பண்புகளுக்கு நிரம்பிய மதிப்பு வைத்திருந்தார் என்பது பல சான்றுகள்கொண்டு நிறுவக்கூடியது. ஒருவர் மனத்தினுல் மாசற்றவராக இருக்கவேண்டுமென்பதையும், அவ்வாறு இருத்தல்தான் அறமென்பதையும், மற்றவையெல்லாம் வெறும் ஆரவாரத் தன்மையன என்பதையும் அவர் விளக்கியுள்ளார். ஒருவருடைய தலைமயிரை நீக்கிவிடுவதாலோ, நீட்டி வளர்த்து முடிப்பதாலோ ஒருவர் ஒழுக்கம் உள்ளவராக மதிக்கப்

பட்டுவிட மாட்டார் என்றும், உலகத்தாரால் வெறுக்கப்படும் தீயனவற்றை வெறுத்து ஒதுக்கி அகத்தூய்மை கொள்ளுதலே விரும்பத்தக்கது என்றும் அவர் கூறியுள்ளமை

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின்"

என்ற குறட்பாவால் அறியப்படும்.

திருவள்ளுவர் உலகம் இருண்டது என்று கருதியவரல்லர். வாழ்வதற்கு உரியது உலகம் என்றும், வாழப் பிறந்தவன் மனிதன் என்றும் திருவள்ளுவர் கருதினர். இடர்ப்பாடுகளைப் பொடியாக்கி, துயரங்களை எதிர்த்து நின்று போராடி வெல்பவனே சிறந்த மனிதன் என்பது அவரது நம்பிக்கை. "இடுக்கண் வருங்கால் நகுக" என்று கூறிய பெருமைக்குரியவர் திருவள்ளுவர். இயல்பிலேயே சிரிக்க முடியாமல் இருக்கின்ற மாந்தரைக் குறித்து இரக்கப் படுபவர் திருவள்ளுவர். சிரிக்கமாட்டாதவர்களுக்கு, சிரிக்க விரும்பாதவர்களுக்குப் பட்டப்பகல்கூட இருளாகத்தான் தோன்றும் என அவர் விளம்பியுள்ளார் என்பதை எடுத்துக் காட்ட விழைகிறேன். உள்ள உவகையையும் நகை முகத்தையும் கொல்லும் பகையாகச் சினம் இருக்கிறதென்று கூறி, அச்சினத்தினை வெல்ல வேண்டுமென்று விளம்பி, அவ்வகையான் மனிதன் மகிழ்ச்சியோடு உலகில் வாழ வேண்டுமெனத் தெளிவுபடுத்தியவர் அவர்.

விதியின் வெல்லலாகாத தன்மையை வற்புறுத்தியவர் திருவள்ளுவர் என்று கூறிச் சில வேளைகளில் திருவள்ளுவருடைய குறட்பாக்கள் சில எடுத்துக் காட்டப்படுகின்றன.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்"

என்று அவர் கூறியிருப்பது மெய்யேயாயினும்,

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்"

எனக் கூறியிருப்பதும் மெய்யே சிறிதுகூடச் சோர்வு இல்லாமல் குலையாமலும் உலையாமலும் பெருத்த முயற்சி கொள்பவர்கள் ஊழையும் தள்ளிவிட முடியும் என்ற கருத்தினை அழகுறத் திருவள்ளுவர் எடுத்துக்காட்டியுள்ளார். விதியினால் மனிதன் முழுதும் கட்டுண்டவன் என்றும், செயலுரிமை இல்லாதவன் என்றும் கூறுவது பொருந்தாது என்பது அவருடைய நம்பிக்கை போலும். விதி என ஒன்று உண்டாயினும், விதிக்கப்பட்டதே நடக்கும் என்று கருதி மனிதன் செயலாற்றாது அயர்ந்து ஓய்ந்து கிடப்பதைத் திருவள்ளுவர் விரும்பியவரல்லர். விதியினால் ஒரு பொருள் கிடைக்கக் கூடியதாக அமையவில்லை என்றாலும், ஒருவனுடைய முயற்சிக் கேற்பக் கூலி கிடைக்கும் என்றும், பெருமை விளையுமென்றும் அவர் வற்புறுத்தி மக்களை மனவெழுச்சி கொள்ளுமாறு செய்துள்ளார்.

திருவள்ளுவர் இயற்றியுள்ள ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினையுடைமை, இடுக்கண் அழியாமை ஆகிய அதிகாரங்களில் அமைந்துகிடக்கும் குறட்பாக்களின் செறிந்த கருத்துக்கள் உன்னத் தக்கவை. மனத்திலே ஊக்கமுடையவர்கள் தாம் உண்மையில் உடையவர் எனத் தக்கவர் என்றும், மனவெழுச்சி இல்லாதவர் வேறு எதனைப் பெற்றிருந்தாலும் பெற்றில்லாதவரைப் போல மதிக்கப்படுவர் என்றும் அவர் கூறியுள்ளார். ஊக்கத்தை உறுதியாகக் கடைப்பிடிப்பவர்கள் ஏதாவதொன்றினை இழந்துவிட்டாலுங்கூட, அவ்விழப்பிற்காக வருந்தமாட்டார்கள் என்றும், நடுங்காமல் குலையாமல் ஊக்கத்தைக் கடைப்பிடியாகக் கொள்கின்ற ஒருவர் இருக்கும் இடந்தேடி ஆக்கம் பணிந்து வந்துறும் என்றும் அவர் சொல்லியுள்ளமை உலகத்தினருக்கொத்த அருங்கருத்துக்களாக அமைந்துகிடக்கின்றன. ஒருவர் வாழ்க்கையில் கொள்ளும் குறிக்கோள்கள் மிகவும் உயர்ந்தனவாக இருக்க வேண்டுமென்றும், ஒருவேளை அக் குறிக்கோள்கள் நிறைவெய்தாமற் போனாலும் குற்றம் இல்லையென்றும், உயர்ந்ததைப் பெற உன்னியது போதும் என்றும் குறிப்பிட்ட பெரியார் திருவள்ளுவர். சோம்பர், தனி மனிதனிடத்திலாயினும் ஒரு சமுதாயத்தினிடத்திலாயினும் ஒருமக்களிடத்திலாயினும் வந்து குடிபுகுமானால், அந்த மனிதன் அல்லது சமுதாயம் அல்லது மக்களினம் பகைவர்களுக்கு அடிமையாவது உறுதி என்று சொல்லி, மடியை மடியும்படி செய்ய வேண்டுமென்று கூறிய பெருமை திருவள்ளுவருடையது.

"இவ்வுலகில் ஆகாதன இல" என்று கூறி உலகத்தினர்க்கு வழிகாட்டியுள்ள உலகப் பேரறிஞர்களிடையே திருவள்ளுவருக்குச் சிறந்த இடமுண்டு. இவ்வுலகில் ஒருபொருள் அருமையுடையது என்று கருதி அககாரணத்தால் தளராமல் இருகக வேண்டுமென்றும், உண்மை முயற்சி பெருமை தரும் என்றும் அவர் அன்று எழுப்பிய குரல் இன்றும் பல நாடுகளிற் கேட்கப்பட்டுக்கொண்டு இருப்பதால் தான், வானவெளிக் கப்பல்கள் போன்றனவும் உருவாகின்றன எனக் கருதல்கூடும். இடும்பைக்கு இடும்பை படாதவர் இடும்பைக்கு இடும்பை உண்டாக்குபவர் என்று திருவள்ளுவர் கூறியதன் சொல்லழகும் கருத்தழகும் நோக்கத் தக்கவை. துயரத்தையே தமக்கு இன்பமாகக் கொள்ளும் மனப்பண்பினை உண்டாக்கிக் கொண்டு விடுகிற ஒருவர் தம்முடைய

பகைவராலும் விரும்பத்தக்க பெருஞ்சிறப்புப் பெறுவர் என்ற உறுதியை எடுத்துக் காட்டி, வழிவழி மக்களை உரநெஞ்சம் கொள்ளுமாறு செய்த பெருமையுடையவர் திருவள்ளுவர்.

திருவள்ளுவர் இன்று உயிருடன் இருப்பாராயின், போரிட்டு அழிய முற்பட்டு நிற்கும் பல நாட்டினரை நோக்கி, அணுக்குண்டுகளும் நீர் அணுக் குண்டுகளும் இவைபோன்ற பிறவும் ஆகிய அழிப்புக் கருவிகள் மல்கியுள்ள இவ்வேளையில், "நீங்கள் ஏன் ஒருவரையொருவர் இகலித் தினவு தீர்த்துக்கொள்ள விரும்புகிறீர்கள்?" என்றும், "ஒருவருடைய நாட்டை இன்னொருவர் அடிமைப்படுத்திக்கொள்ளவும் சேர்த்து எடுத்துக்கொள்வதற்கும் ஏன் முற்படுகிறீர்கள்" என்றும் கேட்பார் என மதிக்கிறேன்.

"ஒருபொழுதும் வாழ்வதறியார் கருதுப
கோடியும் அல்ல பல"

எனக் கூறிய திருவள்ளுவர் வேறு எப்படித் தான் கேட்பார்? தனித்தனி மனிதரும் சமுதாயங்களும் மனித இனங்களும் முயன்று உழைத்து வருவாய் தேடி வாழ்ந்து மகிழ வேண்டுமென்று அவர் விரும்புவரானாலும், பிறரை அழித்து, பிறரைப் புண்படுத்தி, பிறருக்குத் தீமை விளைத்து ஒருவர் வாழ வேண்டுமென்பதை ஒப்புக் கொள்ளாதவர் அவர். நல்வழியில் வருவதே அறமென்றும், தீய வழியில் கிடைப்பது அறம் அன்று என்றும் எடுத்துப் பறைசாற்றியவர் திருவள்ளுவர்.

"*அறத்தான் வருவதே* இன்பம்; மற்றெல்லாம்
புறத்த புகழும் இல"

எல்லாவற்றிற்கும் மேலாகத் திருவள்ளுவர் தம்முடைய மேன்மையான நூலில் சாதியின் அடிப்படையில் அறங்களை வகுக்காமல் இருப்பது போற்றத்தக்கது. நூலின் பல்வேறு இடங்களில் உலகு என்னும் சொல்லினைக் கையாண்டு, உலகினரின் நன்மையைப் பற்றி எண்ணியுள்ளார். ஒரு நாட்டினர்க்கோ ஒரு தேசத்தார்க்கோ அல்லாமல் உலகத்தார்க்கே ஒத்த ஒரு பெரும் பனுவலாகத் திருக்குறள் திகழ்கிறது. சாதியின் அடிப்படையில் தண்டனைகளையும் பரிசில்களையும் வகுத்துக் காட்டும் பிறமொழி நூல்கள் சிலவற்றைப்போல் அல்லாமல், எல்லாச் சாதியாருக்கும் ஒத்த வகையில் அறத்தை விளம்பிய பெரும்பெருமை திருவள்ளுவருக்குரியது.

திருவள்ளுவரைப் பற்றியும் அவர் இயற்றிய திருக்குறளைப் பற்றியும் மேன்மேலும் அறிந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தை இச் சொற்பொழிவு எழுப்புமானால், மிக்க மகிழ்ச்சியுடையவனாவேன்.

(இச் சொற்பொழிவைக் கேட்ட பேரறிஞர்கள் பலர் இதனை மிகவும் பாராட்டினர். சிறப்பாக, டாக்டர் ஆர்னோ லெகிமன் என்ற ஜெர்மானியரும், டாக்டர் இலக்குமண சாஸ்திரி ஜோஷி என்பவரும் பாராட்டியவருட் குறிப்பிடத்தக்கவர்கள். மாஸ்கோ வானொலி நிலையத்திலும் இது சிறந்ததொரு சொற்பொழிவு என எடுத்தியம்பப் பட்டது. ருசியாவில் வெளியாகும் "பிரவாதா" போன்ற பத்திரிகைகளும் பாராட்டி எழுதின; சொற்பொழிவில் உழவு, ஒழுக்கம் முதலிய அதிகாரங்களின் ஆங்கில மொழிபெயர்ப்பும் அடங்கியிருந்தது.)

சிறந்த தமிழ் நூல்கள்

பகீரதன் எழுதிய

பொன்னி எங்கே	2-00
முல்லைவனத்து மோகினி	1-50
வட இந்திய யாத்திரை	5-00
கைதி சொன்ன கதை	2-00
தேன்மொழியாள்	3-00
அழகப்பரின் அதிசய சாதனைகள்	1-25
உழைப்பால் உயர்ந்த ஏழை	2-25

கி. ரா. கோபாலன் எழுதிய

மாலவல்லியின் தியாகம்	7-50
வேதாவின் காதல்	3-00

லா. ச. ராமாமிருதம்

பச்சைக் கனவு	3-00
இதழ்கள்	3-00

திருமணப் பரிசு நூல்கள்

குறள்தந்த இல்லற இன்பம்	2-00
வாழ்க்கைத் துணைவி	2-00
வாழ்க மணமக்கள்	1-50

கலைஞன் பதிப்பகம்

தியாகராய நகர் :: *சென்னை* - 17.

புதிய மனங்கவர் வெளியீடுகள்

மலே யருவி: ராஜம் கிருஷ்ணன்

மாமன் மகள் காரணமாக அண்ணன் தம்பிகளுக்கு இடையே ஏற்பட்ட போட்டி அண்ணன் தம்பியின்மேல் கொலைக் குற்றம் சாட்டும் வரையில் முன்னேறி விடுகிறது. இந்தச் சிக்கலை ஆசிரியர் வெகு ரசமான முறையில் தீர்த்து நம்மைத் திகைக்க வைக்கிறார்.

முன் இரவு: கி. சந்திரசேகரன்

நொண்டிப் பையன் ஒருவன் ஒரு நாயினிடம் வைத்த அன்பினால் ஏற்பட்ட விளைவு, சங்கீதப் போட்டி ஒன்றில் ஞானமில்லாத பெண் ஒருத்தி பாட நேர்ந்ததால் ஏற்பட்ட சிரமங்கள், சிவாஜியின் தாய் உள்ளத்துக்கும் மனைவி உள்ளத்துக்கும் ஏற்பட்ட போராட்டம் முதலிய பலவகையான இன்ப துன்பக் காட்சிகளை நம் மனக் கண் முன்னே காட்டும் பல சிறு கதைகளின் தொகுதி.

ரூ. 2 50

அழியா அழகு: கி. வா. ஜகந்நாதன்

கம்பராமாயணப் பாடல்கள் சிலவற்றுக்கு இன்ன பொருள்தான் இருக்க வேண்டுமென்று படிப்பவர் மனத்துக்கும் கருத்துக்கும் நிறைவு உண்டாகும்படிக் காட்டும் ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தொகுதி.

ரூ. 3 00

பல்லக்கு: ரா. கி. ரங்கராஜன்

தெய்வம் எழுந்தருளியுள்ள பல்லக்கில் அதற்குப் பக்கத்திலேயே பிணம் ஒன்று சவாரி வருதல், மத யானையின் எதிரே அஞ்சாமல் செல்லும் பெண் போன்ற மனத்தைத் திகைக்க வைத்துத் தெளிவிக்கும் கதைகளையும் நகைச்சுவைக் கதைகளையும் கொண்டு படிப்பவர் மனங்கவர் சிறு கதைத் தொகுதி.

ரூ. 2 00

பானு பரமசிவம்: சங்கர ராம்

ஒன்றுக்கும் உதவாத பழைய சோற்றுப் பரமசிவம் என்று கருதிய ஒருவனிடம் எவ்வாறு சிறந்த மனிதத் தன்மை பிரகாசித்தது என்பதைக் காட்டுகிறது முதல் கதை. எவ்வளவு வெறுப்பும் கசப்பும் வளர்ந்தாலும் ரத்தபாசத்தின் சக்தியே சக்தி என்பதை விளக்குகிறது மற்றொரு கதை. நல்ல குணசித்திர அமைப்பைக் கொண்டவை.

ரூ. 1 75

திரிவேணி சங்கமம்: 'சுருணன்'

தான் காதலித்த பெண்ணை மணம் செய்து கொள்ள முடியாமல் வேறு ஒரு பெண்ணை மணம் செய்துகொள்கிறான் ஒரு படித்த இளைஞன். அவன் காதலித்த பெண்ணும் வேறு ஒருவனை மணக்கிறாள். ஆயினும் அவர்கள் காதல் நினைவு நெஞ்சுக்குள் ஓடிக்கொண்டே இருக்கிறது. ரஸமான முடிவு!

ரூ. 2 00

நிழலும் நிஜமும்: 'சியாமா'

டுமில் டுமில் என்று வெடிக்கும் துப்பாக்கிகள், மறையும் உருவங்கள், விரையும் மோட்டார்கள் எதுவும் இல்லாமலே புது முறையில் எழுதிய சிறந்த துப்பறியும் நாவல். துப்பறிபவள் ஒரு மங்கை நல்லாள்.

ரூ. 2 50

கலைமகள் காரியாலயம்

மயிலாப்பூர் சென்னை-4.

புதுமை இலக்கியம்

[டாக்டர் மு. வரதராசன்]

வாழ்க்கை காலத்திற்குக் காலம் வேறுபடுவது போல், இலக்கியமும் காலத்திற்குக் காலம் வேறுபடும். ஏன் எனில் இலக்கியம் வாழ்க்கையோடு ஒட்டியது; வாழ்க்கையிலிருந்து மலரும் மலர் என்று கூறத்தக்கது. வாழ்க்கை என்றும் ஒரே நிலையாக இருப்பதில்லை. ஆதலின் இலக்கியமும் ஒரே வகையாக இராமல் படிப்படியே மாறி வளர்ந்துவருகிறது. வாழ்க்கையின் அடிப்படை உணர்ச்சிகள் மாறாமல் இருக்கலாம். அவற்றின் காரணங்கள் வெவ்வேறுவகையாக ஏற்பட்டு வருகின்றன. நோக்கங்கள் மாறாமல் இருக்கலாம்; நோக்கங்களை அடைவதற்குவேண்டிய வழிவகைகள் மாறி வருகின்றன. உண்ணல் உடுத்தல் முதலியன மாறாமல் இருக்கலாம்; உணவுவகைகளும் உடை வகைகளும் சிற்சில மாறுதல்களைப் பெற்றுவருகின்றன. இந்த மாறுதல்களின் பயனாக வாழ்க்கையிலிருந்து மலரும் இலக்கியமும் சிற்சில வேறுபாடுகளைப் பெறக்காண்கிறோம்.

இலக்கியம் அமைவதற்கு உணர்ச்சியும் கற்பனையும் வேண்டும்; அழகான வடிவமும் வேண்டும். மனத்தின் அடிப்படை உணர்ச்சி என்றும் ஒரேவகையாக இருப்பதில்லை. இன்ப துன்பங்கள் தோன்றுவதற்குக் காரணமான நிகழ்ச்சிகள், காலத்திற்குக் காலம் வேறுபட்டு வருவதால், இலக்கியத்தில் உணர்ச்சிகளைப் படைத்துக்காட்டும் வகையில் புதுமைகள் இடம்பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, சங்க இலக்கியத்தில் ஒருவனும் ஒருத்தியும் காதல் கொள்வதாகக் கூறப் பெறும்போது, தினைப் புனக் காவல், புனல் விளையாட்டு, மலர் பறித்தல் முதலியன படைத்துக் கூறப்பெற்றன. ஆனால் இன்று காதலைப் பாடும் கவிஞர்கள் தம் தனிப் பாட்டுக்களில் அவற்றைக் குறிப்பது இல்லை. காதல்கொள்வதற்கு இன்றியமையாதனவாகக் கருதப்பட்ட அவை இன்று வேண்டாதனவாக மாறிவிட்டன. பழைய மரபுகளை விடாமல் போற்றிவரும் கவிஞர் பாட்டுக்களிலேயே இந்தநிலைமையினைக் காண்கிறோம். புதிய மரபுகளைப் போற்றி வளர்ந்துவரும் நாடகங்களிலும், நாவல்களிலும், சிறுகதைகளிலும் மாறுதல்கள் ஏற்பட்டு வருவதைக் கூறத் தேவை இல்லை. அவைகளில் படைக்கப்படும் காதலர்களுக்கும் தினைப்புனத்திற்கும் தொடர்பே இல்லை. தொழிற்சாலையிலோ, கல்விக்கூடத்திலோ, அலுவலகத்திலோ, அவை போன்ற பிற இடங்களிலோ காதல் தொடங்குவதாகக் கூறப்பெறுகிறது. மடலேறுதல் முதலிய பழைய இலக்கிய மரபுகள் இன்று போற்றுவாரற்றுப் போயின. நீரும் நிழலும் இல்லாமல், வெப்பம் மிகுந்து வாட்டும் பாலை வனங்களுக்கு இன்றைய காதல் இலக்கியங்களில் இடம் இல்லை. அவற்றிற்கு ஈடாக இரயில் பயணங்களும் வெளியூர் உணவு விடுதிகளும் இடம்பெற்றுள்ளன.

காதல் அல்லாத மற்றவற்றைப்பற்றிய இலக்கியங்களிலும் இத்தகை மாறுதல்களைக் காண்கிறோம். சங்க காலத்தில் காதல் அல்லாத மற்றத் துறைகளை எல்லாம் புறத்திணை என்று வகுத்து, பெரும்பாலும் அரசரின் போர்களைப் பற்றியே பாடி வந்தனர். பகைவர்களுடைய பசுக்களைக் கவர்தல், படை எடுத்துச்செல்லுதல், மதிலை முற்றுகை இடுதல்முதல் வெற்றி பெறுதல், புகழ்ந்து பாடப்பெறுதல்வரை எல்லாப் பகுதிகளையும் இலக்கியமாக அமைத்து வந்தனர். இக்காலத்து இலக்கியங்களில் அவற்றிற்கு இடம் இல்லை. மதில் முற்றுகை போய் விமானக் குண்டுவீச்சு வந்துள்ள காலம் இது. போர்முறை அவ்வாறு வேகமும் ஆற்றலும் உள்ளதாக வளர்ந்துள்ள போதிலும் இன்றைய இலக்கியங்களில் போர்கள் சிறப்பிடம் பெறவில்லை. போர்களைப் புகழ்ந்து பாடுவதற்கு மாறாகப் பழித்து எழுதும் மரபு வளர்ந்துள்ளது. 'போரில்லையே' என்று தினவெடுக்கும் தோள்களைப் போற்றிப் பாடுவது பழைய மரபு. 'போரே நிகழாமல் உலகத்தைக் காக்க வேண்டும்' என்று பாடுபடும் அறவோரின் தொண்டுகளே இன்றைய எழுத்தில் பாராட்டப்படுகின்றன. பகைவர் நாடுகள் அழிந்ததை வருணித்துப் பாடிய பதிற்றுப்பத்து முதலான நூல்கள் இனித் தோன்றமுடியாது. போருக்குத் துணையான அரசியல் தலைவர்களைப் பழித்து, அவர்களின் அஞ்சாத செயல்களை வீரச்செயல்கள் என்று புகழாமல் கொடுமைகள் என்று தூற்றும் முறையே இன்றைய எழுத்தில் மிகுந்து வருகிறது. சமுதாய நாடகங்களிலும் நாவல்களிலும் சிறுகதைகளிலும் பெரியபெரிய அரசியல் நிகழ்ச்சிகளைவிட ஒருசிலரின் இன்ப துன்பங்களே மிகுதியாக எடுத்துரைக்கப் படுகின்றன.

உணர்ச்சியைப் படைத்துக் காட்டுவதில் இலக்கியம் மாறிவருவது போலவே, கற்பனைகளை அமைப்பதிலும் மாறுதல் பெற்றுவருகிறது. முழுதும் இல்லன கூறாமல் உள்ள

வற்றையே சிறிது புனைந்து கூறும்முறை மதிப்புப் பெற்றுவருகிறது. வாழ்க்கையோடொட்டாத வேடிக்கைக் கற்பனைகளைவிட, வியப்பான கற்பனைகளைவிட, வாழ்க்கையோடு ஒட்டிய கற்பனைகள் இன்றைய இலக்கியத்தில் மிகுதியாகி வருகின்றன. பல தலைகளையும் பல கைகளையும் உடைய ஆட்களை இன்றைய எழுத்தாளன் படைத்துக்காட்டுவதில்லை. கடவுள் வழிபாடும் அறத்தின் ஆட்சியும் உள்ளனவே தவிர, தெய்வம் அடிக்கடி வந்து பேசுவதும் மறைந்து போவதும் இன்றைய எழுத்தில் இல்லை. எதிர்பாராத நிகழ்ச்சிகள் உள்ளனவே தவிர நம்பமுடியாத அற்புதங்கள் இல்லை. எதற்கும் காரணங்களை ஆராய்ந்து ஊடுருவிப்பார்க்க முயலும் அறிவியல் வளர்ச்சியால், வாழ்க்கையோடு ஒட்டிய கற்பனைகளுக்கு மட்டுமே மதிப்பு இருந்துவருகிறது.

இலக்கியத்திற்கு உரிய உணர்ச்சியிலும் கற்பனையிலும் மாறுதல்கள் ஏற்பட்டது போலவே, இலக்கியத்தின் வடிவத்திலும் மாறுதல்களைக் காண்கிறோம். வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மாறுதல்களே அதற்கும் காரணம் ஆகும். முன்னோர்க்கு இருந்த அளவு ஓய்வும் அமைதியும் இக்காலத்தார்க்கு இல்லை. அவர்கள் சிலரோடு மட்டும் பழகிச் சில நூல்கள் மட்டும் கற்று அமைதியாக இருந்தனர். நாம் பலரோடு பழகவேண்டிய நெருக்கடியும் பல நூல்களைப் படிக்கவேண்டிய கட்டாயமும் உள்ளவர்களாக வாழ்கிறோம். விஞ்ஞானக் கருவிகளின் வளர்ச்சி போக்குவரவை எளிதாக்கிய காரணத்தால் உலகம் ஒருகுடும்பம் போல் ஆகி எவையும் எவர்க்கும் தெரியும் நிலையில் வாழ்க்கை நடைபெறுகிறது. வாழ்க்கை விரிவுடையதாகப் பெருகி விட்டது. வாழ்வதற்கு உரிய நாட்களும் மாதங்களும் ஆண்டுகளும் விரிவுபெறவில்லை. அவை முன் போலவே கால அளவு உடையனவாக உள்ளன. சுருங்கிய காலத்தில் விரிந்த வாழ்வுவாழ வேண்டி இருத்தலால், இக்கால வாழ்க்கை பரபரப்பும் வேகமும் உடையதாக மாறியுள்ளது. ஆகையால் ஒருசில நூல்களைப் போற்றிப் பாடு பட்டுக் கற்று, அவற்றையே திரும்பத்திரும்பச் சுவைத்து மகிழும் கல்விமுறை இன்று இல்லை. பற்பல கற்றுப் பெரும்பங்கு மறந்து சிறுபகுதி மட்டும் நினைவில் நிற்க, அவற்றைக்கொண்டு அப்பால் கடந்து செல்லும் முறையே இன்று உள்ளது: கரும்புத் தோட்டத்திற்குச் சென்று நுனிமுதல் அடிவரை மென்று மெல்லச் சுவைத்து மகிழ்வது போன்றது பழைய முறை. போகிற போக்கில் கடைத்தெருவில் சில விநாடிகள் நின்று ஒரு குவளையில் கருப்பஞ்சாற்றை வாங்கிக் குடித்து அப்பால் செல்வது போன்றது இன்றைய கல்விமுறை. இன்றும் தோட்டத்தை நாடிச் சென்று கரும்பைச் சுவைப்பவர் உண்டு. அவர்கள் மிகமிகச் சிறுபான்மையோர். இலக்கியக் கல்வியே வாழ்க்கையாகவும் பொழுது போக்காகவும் கொண்டு மகிழும் கலைஞர் இன்றும் ஒருசிலர் உள்ளனர். ஆனால் இன்று படைக்கப்படும் இலக்கியங்கள் அவர்களுக்காக மட்டும் படைக்கப்படுவன அல்ல. எழுதப் படிக்கத் தெரிந்த பலர்க்கும் இலக்கிய நூல்கள் தேவையாக உள்ளன. அவர்களோ கருப்பஞ் சாற்றைக் கடையில் வாங்கிப்பருகுவோர் போன்றவர்கள். அவர்கள்மேல் குற்றம் இல்லை. அவர்களின் வாழ்க்கை, வேகமும் பரபரப்பும் உடையதாக அமைந்துவிட்டதுதான் அதற்குக் காரணம். அவர்களின் கையில் கரும்பைக் கொடுத்துப் பயன் இல்லை; கருப்பஞ்சாறே தர வேண்டும். அருஞ் சொற்களோடு கூடிய அரிய நடையில், செய்யுள் வடிவில், நீண்டு அமைந்த காவியங்கள் இக்காலத்தார்க்குப் பயன்படுவதில்லை. புதிய காவியங்களைப் படைத்துத் தந்தால், இலக்கியமே பொழுது போக்காக உடைய ஒருசிலர் மட்டுமே கற்க முடியும். அந்தப் புலவர்களோ, "பழைய காவியங்கள் போதுமே; இவற்றையும் கற்க வேண்டுமா?" என்று புறக்கணித்து விடுகின்றனர். ஆகவே காவியங்கள் தோன்றுவதற்கும் தோன்றினாலும் பரவுவதற்கும் இடம் இல்லாமல் போயிற்று. ஆகவே புலவர் அல்லாத மற்றவர்களுக்காகப் புது இலக்கியங்கள் தோன்ற வேண்டிய தேவை உள்ளது. காவியத்தில் அமையும் உணர்ச்சிகளையும் கற்பனைகளையும் போராட்டங்களையும் வருணனைகளையும் செய்யுள் வடிவில் எழுதாமல் உரைநடையில் எழுத வேண்டிய தேவை ஏற்பட்டது. அருஞ் சொற்களை அகற்றி எளிய நடையில் எழுதும் திறன் வளர்ந்தது. இங்கிலாந்தில் தோன்றிய புதிய இலக்கிய வடிவுகளே நாவல்கள் என்றும் சிறுகதைகள் என்றும் பெயர் பெற்றன. அச்சுப்பொறியின் வளர்ச்சி, நாவல்களும் சிறுகதைகளும் மிகப் பலவாய் தோன்றிப் பெருகுவதற்குத் துணையாய் அமைந்தது. தடை இல்லாமல் நேரே படித்து உணர்வதற்கு உதவும் எளிய உரைநடை, அந்தப் புதிய இலக்கிய வகைகள் நன்றாகப் பயன்படுமாறு செய்கிறது. வேகமும் பரபரப்பும் உடைய இக்கால வாழ்க்கையில் பலரும் பெறக்கூடிய இலக்கிய விருந்துகளாக அவை உதவிவருகின்றன.

காலத்திற்கு ஏற்ப வாழ்க்கை வேறுபட்டதன் காரணமாக இந்த இலக்கியவகைகள் தோன்றின என்பதைக் கண்டோம். முடியாட்சி முறையிலிருந்து குடியாட்சி முறைக்கு உலகம் மாறிவந்திருக்கிறது. இலக்கியத் துறையிலும் இத்தகைய மாறுதல் நிகழ்ந்துள்ளது. மக்களை ஆண்ட மன்னன் பழங் காலத்தில் சாதாரண மக்களைப் போல் உடுக்காமல் தனிச் சிறப்புடைய ஆடைகளை உடுத்து, முடி முதலியன

அணிந்துவந்தான். பலரோடும் நெருங்கிப் பழகாமல் ஒரு சிலரோடு மட்டும் உறவு கொண்ட தலைவனாக விளங்கிவந்தான். அந்த ஒருசிலர் மட்டுமே அவனோடு நெருங்கிப் பழகினார்கள். பெரும்பான்மையான மக்கள் தொலைவிலிருந்தே அவனைக் கண்டு போற்றினார்கள், அல்லது கேட்டு மகிழ்ந்தார்கள். பழங்காலக் காவியங்களும் அவ்வாறுதான் இருந்தன. காவியங்களின் செய்யுள் நடை அரசர் உடைபோல் கவர்ச்சியும் சிறப்பும் உடையதாக இருந்தது. காவியங்களோடு புலவர் ஒரு சிலர் மட்டுமே நெருங்கிய உறவுகொள்ள முடிந்தது. மற்றவர்கள் தொலைவில் நின்று காவியங்களின் கதைகளை மட்டும் கேட்டு மகிழ்ந்தார்கள். காவியங்கள் இடத்தில் இன்று புதுமையாகத் தோன்றியுள்ள நாவல்களும் சிறுகதைகளும், குடியாட்சித் தலைவர்களைப் போன்றவை. குடியாட்சியில் ஆளும் தலைவர்கள் ஆடம்பர உடை உடுக்கத் தேவை இல்லை. அவர்கள் எளிய உடை உடுத்து மற்ற மக்களைப் போலவே வாழவேண்டும்; பொதுமக்களோடு நெருங்கிய உறவும் கொள்ளவேண்டும். இந்தப் புதிய இலக்கியவகைகளும் எளிய நடையில் அமைந்து வாழ்க்கையோடு ஒட்டியனவாய் நின்று பலரும் கற்கக் கூடியனவாய் விளங்குகின்றன.

வாழ்க்கையில் பழமையானவை மறைந்து புதுமையானவை தோன்றும். பழமை வரலாற்றில் இடம்பெறும்; பொருட்காட்சியில் இடம் பெறும். பழைய வாழ்க்கை இப்படி; பழங்காலத்துப் பொருள்கள் இவை என்று சொல்லக் கூடிய அளவில் முன்னோர் வாழ்க்கை மறைந்து போகும். ஆனால் இலக்கியத்தில் பழைய கலைச்செல்வங்கள் எல்லாம் மறைந்து போவது இல்லை. சிறப்புடையவை கால வெள்ளத்தைக் கடந்து வாழும். மற்றப் பழைய இலக்கியங்கள் மறைந்து போவது இயற்கை. பழைய இலக்கியங்களில் சிறந்த சிலப்பதிகாரம், கம்பராமாயணம் முதலிய சிலமட்டுமே கலைச் செல்வங்களாகப் பயன்பட்டு வருகின்றன. புதிய படைப்புகளாகிய நாவல்களும் சிறுகதைகளும் பற்பலவாய் வளர்ந்து பெருகி வருகின்றன. அவை பழைய காவியங்களோடு போட்டியிடுவதில்லை. இந்தக் காலத்தின் இலக்கியக் குழந்தைகளாக அவை உரிமையோடு தவழ்ந்து விளையாடி வளர்ந்து வருகின்றன. உலகமெங்கும் எல்லா மொழிகளிலும் இந்த நிலை காணப்படுகின்றது. வளர்ந்து வரும் இந்தப் புதிய இலக்கிய வகைகள் பழைய காவியங்களைப் போலவே தமக்கென்று வரம்பு கோலிக்கொண்டு தமக்குரிய பெருமையைக் காத்துக் கொண்டு கலைச் செல்வங்களாகப் போற்றப்பட்டு வருகின்றன. இது மகிழ்வதற்கு உரியதாகும்.

★

சாந்தி நூலகம்,

புத்தக வெளியீட்டாளர், விற்பனையாளர்

2/122 பிராட்வே, சென்னை-1

எழுத்தாளத் தோழர்களே,

வணக்கம். எங்கள் நூலகம் பல சிறந்த நூல்களை வெளியிட்டுவருவதை நீங்கள் அறிந்திருக்கலாம். பல தமிழ்ப் பேராசிரியர்கள் எழுதிய ஆராய்ச்சி நூல்கள், சரித்திர வல்லுநர்கள் எழுதிய வரலாற்று நூல்கள், சிந்தனைச் செல்வர்கள் எழுதிய கட்டுரை நூல்கள், முதிர்ந்த கவிஞர்கள் எழுதிய கவிதை நூல்கள், கருத்து வளமுடையோர் எழுதிய நாடக நூல்கள், கதைத்துறை மேதைகள் எழுதிய புதின நூல்கள் ஆகிய யாவும் எங்களிடம் கிடைப்பதோடு மிகுதியானவை எங்களால் பதிப்பிக்கப்பட்டும் உள்ளன. தமிழ் எழுத்தாளர் மாநாடு நடைபெறும் இந்தருணத்தில் நீங்களும், தமிழ் மக்களும் எங்கள் நூல்களை வாங்கிப் பயனடைவதோடு எங்களுக்கும் ஆதரவளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

எமது நூலகம் விரைவில் காலஞ்சென்ற மேதை சுந்தரம் பிள்ளை அவர்களின் ***மனோன்மணீய நாடகத்தைக்*** கல்வெட்டாராய்ச்சி வித்தகர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களின் அழகிய ஆழம் நிறைந்த முழு உரையுடன் மலிவுப் பதிப்பில் வெளியிடவிருக்கிறது. இதனைத் தமிழகம் நல்லவிதத்தில் பயன்படுத்திக்கொள்ளும் என்று நம்புகிறோம். உங்களுக்கு எங்கள் நன்றி.

இப்படிக்கு,
சாந்தி நூலகத்தார்

Telephone : 84128. *Telegrams :* TARAPORECO.

TARAPORE & CO.

ENGINEERS & CONTRACTORS

175/1, MOUNT ROAD, MADRAS-2.

*

SPECIALISTS IN REINFORCED CONCRETE

*

UNDERTAKE CONSTRUCTIONS OF

ROADS, BUILDINGS, BRIDGES, FACTORIES, DAMS, Etc.

ENSURE SPEEDY AND EFFICIENT WORK

Branch Office at

No. 6, Spencer Road, Bangalore (Mysore State)

Telephone : 4447. *Telegrams :* TARAPORECO.

மலர் அளிக்கும் தீந்தமிழ் நூல்கள்

திருக்குறள்

—மணக்குடவர் உரை	ரூ. 4-00

டாக்டர் ச. சோ. பாரதியார்.

நற்றமிழ்	2-00
பழந்தமிழ் நாடு	2-50

பன்மொழிப்புலவர் அப்பாத்துரையார்

தென்னகப் பண்பு	8-00
தென்மொழி	3-75
தென்னாடு	2-00
தமிழ் முழக்கம்	2-50
இன்பத்துள் இன்பம்	2-50

புலவர் கா. கோவிந்தனார்

குறுந்தொகைக் கோவை	3-50
நற்றிணைக் கட்டுரைகள்	3-50
கழுமலப் போர்	1-50

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

அருள் நெறி	2-00
பேரறிஞர் இருவர்	2-25

தங்கள் தேவைகளுக்கு எழுதுங்கள்

மலர் நிலையம்

133, பிராட்வே : : சென்னை-1.

தமிழகத்தின்

தலை சிறந்த

சினிமாப்

பத்திரிகை

பேசும்படம்

மலாயாவில் தமிழ்மொழியின் செல்வாக்கு

[முருகு சுப்பிரமணியன், *துணை ஆசிரியர், "தமிழ் முரசு", சிங்கப்பூர்*]

மலாயாவில் ஏறத்தாழ எட்டு லட்சம் தமிழர்கள் வாழ்கிருர்கள். மலாயா என்னும்போது சிங்கப்பூர், மலாயா கூட்டரசு என்னும் இரண்டு பகுதிகளையும் சேர்த்தே சொல்கிறேன். சிங்கப்பூர், உள்நாட்டுச் சுயாட்சி மட்டும் பெற்று இன்னும் முழு விடுதலை பெருதிருக்கும் ஒரு சிறிய தீவு. சிங்கப்பூரின் மக்கள் தொகை 16 லட்சம்; தமிழர்கள் எண்ணிக்கை $1\frac{1}{4}$ லட்சம். மலாயா கூட்டரசு அண்மையில் விடுதலை பெற்ற நாடு. மக்கள் எண்ணிக்கை 70 லட்சம். இதில் தமிழர்கள் 8 லட்சம்.

மலாயாவிலும் சிங்கப்பூரிலும் தமிழ் மொழிக்குள்ள செல்வாக்கை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். தமிழகத்தையும் இலங்கையையும் தவிர்த்துத் தமிழர்கள் மிகுந்த எண்ணிக்கையில் வாழும் நாடு மலாயா ஒன்றுதான். பர்மாவில் தமிழர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்தது என்னவோ உண்மை. ஆனல் இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு பர்மாவில் தமிழர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது. ஆகவே உலகத்தில் தமிழர்கள் மிகுதியாக வாழும் நாடுகளில் மூன்ருவது வரிசையில் வைத்தெண்ணத் தக்கது மலாயா. மலாயாவில் தமிழின் செல்வாக்கை உணர்வதற்கு இந்த அடிப்படை உண்மையை அறிந்துகொள்வது இன்றியமையாதது.

முதலில் சிங்கப்பூரில் தமிழின் நிலையைக் காண்போம். சிங்கப்பூரை ஒரு சீன நகரமென்றேசொல்லவேண்டும். மலாய்க்காரர்கள், தமிழர்கள் முதலிய மற்ற இனத்தவர் எண்ணிக்கை சுமார் 4 லட்சம் இருக்கும். எஞ்சிய 12 லட்சம் பேரும் சீனரே! இருப்பினும் சிங்கப்பூர் அரசாங்கம் எல்லாத் துறைகளிலும் ஆங்கிலம், சீனம், மலாய், தமிழ் ஆகிய நான்கு மொழிகளையும் சமமாகவே நடத்தி வருகிறது. ஆட்சிமொழியாக ஆங்கிலமே நீடித்து வருகிறதென்ருலும், மற்ற மூன்று மொழிகளுக்கும் அரசாங்கம் கிட்டத்தட்ட ஆட்சி மொழிக்குள்ள அந்தஸ்தையும் சலுகைகளையும் தந்து வருகிறது. இதில் குறிப்பிடத்தக்க சலுகை பன்மொழிச் சட்டமன்றம். சிங்கப்பூர் சட்டமன்றத்தில் அங்கத்தினர்கள் தமிழில் பேச முடியும்; பேசுகிருர்கள். அது மட்டுமன்று. தமிழ் மட்டுமே தெரிந்தவர்களும், சிங்கப்பூர் சட்டமன்ற நிகழ்ச்சிகளை முழுமையாகச் செவிமடுக்க முடியும். ஏக கால மொழிபெயர்ப்பு மூலம் இது சாத்தியம் ஆகிறது. சீனம், மலாய், ஆங்கிலம் ஆகிய எந்த மொழிகளில் பேசினுலும், அதன் தமிழ் மொழிபெயர்ப்பை அதே சமயத்தில் தமிழில் கேட்கமுடியும். ஐ நா. சபையிலும், இலங்கை சட்டமன்றத்திலும் இத்தகைய ஏக கால மொழிபெயர்ப்பு நடைமுறையில் இருந்து வருகிறது. சிங்கப்பூரில் இந்த முறைக்குக் குறிப்பிடத்தக்க வெற்றி கிடைத்திருக்கிறது. ஒரு காதில் ஆங்கிலத்தில் கேட்கின்ற சொற்களை உடனுக்குடன் விரைந்து தமிழில் மொழி பெயர்க்கும் ஆற்றலுள்ளவர்கள் இங்கு இருக்கிருர்கள்.

சட்டமன்றம் தவிர்த்து அரசாங்கம் தன் முக்கிய அறிவிப்புகளையும், அறிக்கைகளையும் தமிழ் உட்பட நான்கு மொழிகளிலும் வெளியிட்டு வருகிறது. அரசாங்க விளம்பரங்கள், அறிவிப்புக்களில் பெரும்பகுதி நான்கு மொழிகளில் தயாரிக்கப்படுகின்றன. அரசாங்க அலுவலகங்களில் பெயர்ப்பலகைகளிலும் தமிழுக்கு இடம் தரப்படுகிறது. தமிழ் மட்டும் தெரிந்தால் போதும், எந்த அரசாங்க அலுவலகத்திற்கும் போய்வந்து விடலாம். அரசாங்கத்திற்குத் தமிழில் விண்ணப்பங்கள் அனுப்பலாம். இவ்வாறு தமிழுக்கு ஆட்சி மொழிக்குரிய எல்லா உரிமைகளையும் அரசாங்கம் தந்து வருகிறது.

அரசாங்கத்தின் கலாசார அமைச்சில் மொழி பெயர்ப்புப் பகுதியில் தமிழுக்கென்று ஓர் பிரிவு இயங்குகிறது. அந்தப் பகுதியின் வேலை தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும் மொழி பெயர்ப்பதாகும். தமிழுக்கு ஆக்கம் நல்கும் உருவான பல பணிகளை இப்பிரிவினர் செய்து வருகின்றனர்.

தமிழுக்கு வலிவும் வனப்பும் தருகின்ற மற்ருெரு துறை வானெலியாகும். வானெலி நிலயத்தில் மற்ற மொழிகளோடு சம நிலையில் தமிழுக்கு எல்லாம் செய்யப்படுகின்றன. செய்திப் பகுதியில் நாள்தோறும் மூன்று தடவை தமிழில் செய்தி ஒலிபரப்பப்படுகிறது. டில்லியிலிருந்து தமிழக மக்களுக்கு ஒலிபரப்பப்படுகின்ற தமிழ்ச் செய்திகளின் தரத்திற்கு நிகராக இந்த ஒலிபரப்பின் தரம் உயர்ந்திருக்கிறது என்று கூறலாம். வானெலியின் பொதுத்

துறையில் தமிழில் நாள்தோறும் 5½ மணி நேரம் ஒலிபரப்பு நடக்கிறது. இத் தமிழ் ஒலி பரப்பில் நாடகம், இசை, பேச்சு முதலிய எல்லா நிகழ்ச்சிகளும் உண்டு. புதிதாகத் தொடங்கியிருக்கிற வர்த்தக ஒலிபரப்பிலும் தமிழுக்கு இடமளிக்கப்பட்டிருக்கிறது. இது தவிரப் பள்ளிக்கூட ஒலிபரப்பும் உண்டு. இப் பகுதியில் தமிழ்ப் பள்ளிக்கூடங்களுக்காக வாரத்திற்கு 4½ மணி நேரம் நிகழ்ச்சிகள் ஒலி பரப்புகிறார்கள். இந்த நிகழ்ச்சிகள் மலாயாவி லும் சிங்கப்பூரிலுமுள்ள 800சகு மேற்பட்ட தமிழ்ப் பள்ளிக்கூடங்களுக்குப் பயன்படுகின் றன. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஒருங்கே பயன்படும் சிறப்பான நிகழ்ச்சிகளை இப்பகுதி ஒலிபரப்புகிறது. வானொலியின் தமிழ்ப் பகுதியில் 15க்கு மேற்பட்ட ஊழியர்கள் பணிபுரிகின்றனர். தமிழ் வளர்கின்ற குறிப் பிடத்தக்க துறைகளில் ஒன்று சிங்கப்பூர் வானொலி.

அடுத்துத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் தமி ழுக்குத் தரப்படும் ஆக்கத்தைக் கவனிப்போம். தமிழ் உள்ளிட்ட நான்கு மொழிகளுக்கும், நான்கு மொழிப் பள்ளிக் கூடங்களுக்கும் சமத் துவம் காட்டுவது சிங்கப்பூரின் கல்விக் கொள்கை. ஒரே பாடத்திட்டம், ஒரே மாதிரி யான சட்டதிட்டங்கள்; பயிற்று விக்கப்படும் பாட மொழியில் மட்டும் வேறுபாடு. சிங்கப் பூரில் மொத்தம் 15 தமிழ்ப்பள்ளிகள் இருக் கின்றன. எல்லாவற்றிலும் சேர்த்து 1500 குழந்தைகள் படிக்கிறார்கள். உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப்பள்ளி ஒன்று தவிர, மற்றவை யெல்லாம் ஆரம்பப்பள்ளிகள்—அதாவது 6 வது வரை உள்ள பள்ளிகள். ஆரம்பப்பள்ளி களில் இரண்டை அரசாங்கம் தன் மேற்பார் வையில் நடத்திவருகிறது. இராமகிருஷ்ண மடாலயம் சிறுவர்களுக்கொன்றும், சிறுமி களுக்கு ஒன்றுமாக இரண்டு பள்ளிகளை நடத்து கிறது. மற்ற தமிழ்ப்பள்ளிகள், தமிழ்க் கல்விக் கழகம் என்னும் பொது அமைப்பின் மேற்பார் வையில் இயங்குபவை. இப்பொழுது கலைமகள் தமிழ்ப் பள்ளியை உயர்நிலைத் தொழிற் பள்ளி யாக மாற்றுவதற்குப் பெரு முயற்சி செய்யப் பட்டு வருகிறது. தமிழில ஆறுவது வகுப்பு படித்த மாணவர்கள் தொழிற்கல்வி பயில் வதற்குச் செய்யப்படும் முயற்சி இது. தமிழ்க் கல்வியைப் பொறுத்த வரையில் அரசாங்கம் தருகின்ற ஆக்கத்தையும் ஊக்கத்தையும் சிங்கப்பூர் தமிழ்மக்கள் முழுமையாகப் பயன் படுத்திக்கொள்ளவில்லை என்பதுதான் குறை. ஆங்கில ஆரம்பப் பள்ளியில் 10,000 தமிழ்ப் பிள்ளைகள் படிக்கிறார்கள். ஆனால் தமிழ்ப் பள்ளிகளில் 1500 பிள்ளைகளே இருக்கிறார்கள். இவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்குஆண்டு குறைந்து வருகிறது. மலாய்க்காரர்களில் பெரும்பாலோர் தங்கள் குழந்தைகளை மலாய் ஆரம்பப்பள்ளிகளுக்கு அனுப்புகிறார்கள். சீனர்களிடையிலும் இதே நிலைதான். ஆனால் தமிழ்ப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை ஆங்கிலப் பள்ளிகளுக்கு அனுப்புவதையே விரும்புகிறார்கள். ஏழை எளியவர்களும் வசதி குறைந்தவர்களுமே தங்கள் குழந்தைகளைத் தமிழ்ப்பள்ளிகளில் சேர்க்கிறார்கள். இந்தப் போக்கினால் தமிழ்ப்பள்ளிகளின எதிர்காலத் திற்குப் பெரிய மிரட்டல் ஏற்பட்டிருக்கிறது. தமிழ்ப் பெற்றோர்களின் மனப்போக்கு தீவிர மாக மாறவேண்டும்; அதே சமயத்தில் தமிழ்ப் பள்ளிகளின் தரம் பெற்றோர்களைக் கவர்கின்ற அளவு உயர வேண்டும்.

ஆங்கில ஆரம்பப் பள்ளிகளில் 10,000 தமிழ்ப் பிள்ளைகள் படிக்கிறார்கள் என்று சொன்னேன் அல்லவா? அவர்களுக்கும் அர சாங்கம் தமிழ் கற்றுத்தருகிறது. தமிழைக் கட் டாயமாகப் பயிலவேண்டுமென்பது திட்டம். ஆனால் ஆசிரியர் பற்றுக்குறையால் ஆங்கிலப் பள்ளிகளில் தமிழ்கற்றுத்தருவது இப்பொழுது அத்துணைத் திருப்தியில்லை. போகப் போகச் செம்மைப்பாடு ஏற்படுமென்று எதிர்பார்க்க லாம். இது தவிர ஆங்கில உயர்நிலைப்பள்ளி களில் பயிலும் தமிழ் மாணவர்களுக்கும் தமிழ் ஒரு பாடமாகப் போதிக்கப்படுகிறது. பள்ளிக் கூடங்களைப் பொறுத்தவரை தமிழின் நிலை இது.

பல்கலைக் கழகங்களில் தமிழின் நிலை யென்ன? சிங்கப்பூரில் மலாயா பல்கலைக்கழ கம், நன்யாங் பல்கலைக்கழகமென்று இரண்டு பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. நன்யாங் பல்கலைக்கழகம் சீனப் பள்ளி மாணவர்களை மட்டும் ஏற்றுக் கொள்ளும் சீனமொழிப் பல் கலைக்கழகமாகும். ஆங்கிலப்பள்ளி மாணவர் களையும் சேர்த்துக்கொள்ள நன்யாங் இப் பொழுது முன்வந்திருக்கிறது. மலாயா பல் கலைக்கழகம் இதுவரை ஆங்கிலப்பள்ளி மாணவர்களை மட்டும் சேர்த்து வந்தது. இந்த ஆண்டுமுதல் சீனம், மலாய், தமிழ் உயர் நிலைப்பள்ளி மாணவர்களும் குறிப்பிட்ட எண் ணிக்கையில் சேர்க்கப்படுகிறார்கள். இந்த மாறுதலினால் தமிழ் உயர்நிலைப்பள்ளியில் படிக்கும் ஒரு மாணவனுக்குப் பல்கலைக்கழகம் போகும் வாய்ப்பு கிட்டியிருக்கிறது. இது தாய்மொழிப்பள்ளிகளின் அந்தஸ்தில் பெரிய உயர்வைத் தரும்.

மலாயா பல்கலைக்கழகம் இரு பிரிவுகளாகச் சிங்கப்பூரிலும் கோலாலம்பூரிலும் இயங்கி வரு கிறது. முன்பு சிங்கப்பூரில் இருந்த தமிழ்ப் பகுதி இப்பொழுது கோலாலம்பூரில் நடந்து வருகிறது. இப்பகுதியில் ஏற்கனவே தலைமை

விரிவுரையாளர் ஒருவரும், இரண்டு விரிவுரையாளர்களும் இருந்து வருகின்றனர். பேராசிரியர் ஒருவரை இந்த ஆண்டு நியமிக்க இருக்கிறார்கள். மேலும் இரண்டு விரிவுரையாளர்களும் சேர்க்கப்பட இருக்கின்றனர். இந்தத் தமிழ்ப்பகுதி நூல் நிலையத்திற்குத்தான் சென்னை அரசாங்கம் தமிழர் பிரதிநிதித்துவ சபை மூலம் 5000 தமிழ் நூல்களைக் கொடுத்துதவியது. பல்கலைக்கழகத் தமிழ்ப்பகுதி நிறுவப்படுவதற்குத் தமிழவேள் திரு. கோ. சாரங்கபாணி அவர்கள் தலைமையில் இயங்கும் தமிழர் பிரதிநிதித்துவ சபை ஆற்றிய முயற்சி குறிப்பிடத்தக்கதாகும். பல்கலைக்கழக இந்தியப்பிரிவில் வட மொழிக்கே இடமளிக்க வேண்டுமென்று சென்னையிலிருந்து வந்த திருவாளர் நீலகண்ட சாஸ்திரியார் சிபாரிசு செய்தார். தமிழுக்குக் குழி தோண்டும் இம் முயற்சியைத் தமிழர் பிரதிநிதித்துவ சபை முறியடித்தது. அதன் பிறகே பல்கலைக்கழகத்தில் தமிழை முதன்மையாகக் கொண்ட இந்தியப் பகுதி உருப்பெற்றது. இப்பகுதியின் தமிழ் நூல் நிலையத்திற்காகத் "தமிழ் எங்கள் உயிர்" என்னும் நிதி திரட்டும் இயக்கத்தைத் தமிழர் பிரதிநிதித்துவ சபை "தமிழ் முரசு" மூலம் நடத்தி 27,000 வெள்ளியைப் பல்கலைக்கழகத்திற்கு அளித்தது. இந்தத்தொகை 10 காசு, 20 காசு, 50 காசு வீதம் மலாயாத் தமிழ் மக்களிடம் திரட்டப்பட்டதாகும். "தமிழ் எங்கள் உயிர்" என்று சொல்லால் மட்டுமின்றிச் செயலாலும் காட்டியவர்கள் மலாயத்தமிழ் மக்கள்.

பல்கலைக்கழகத் தமிழ்ப் பகுதியில் பி. ஏ., பி. ஏ. ஆனர்ஸ் வகுப்புகளுக்கு இப்போது பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. பல்கலைக் கழக இந்தியப்பகுதி உபகாரச் சம்பளச் சங்கம் ஒன்று நிறுவப்பட்டு ஆண்டுதோறும் 2000 வெள்ளி வீதம் தமிழ் பயிலும் மாணவர்க்கு உபகாரச் சம்பளம் அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்ச் செல்வர்கள் பலர் இத்திருப்பணியைச் செய்து வருகிறார்கள். பல்கலைக் கழகத் தமிழ்ப் பகுதி, ஆராய்ச்சி முதலிய துறைகளில் உருவான பணிகளைச் செய்யவும், மலாயாவுக்குத் தேவைப்படும் தமிழறிஞர்களை உருவாக்கவும் இயலும். சிங்கப்பூர், மலாயா அரசாங்கங்கள் இப்பகுதிக்குப் பெரும் ஆதரவு அளித்து வருவதால், பெருவளர்ச்சிக்கு இடமிருக்கிறது.

சிங்கப்பூரில் தமிழ் வளர்க்கின்ற மற்றொரு துறை தமிழ் மக்கள் நடத்துகின்ற சங்கங்கள். ஏறத்தாழ ஐம்பது சங்கங்களைத் தமிழர்கள் நடத்துகிறார்கள். தமிழர் பிரதிநிதித்துவ சபை என்பது 45க்கு மேற்பட்ட தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பு. சிங்கப்பூரில் தமிழ் மக்களைப் பிரதிநிதிக்கின்ற தலைமை நிறுவனம் என்று இதனைச் சொல்லலாம். ஆண்டுதோறும் தமிழர் திருநாள் என்னும் தமிழர்களின் ஒற்றுமை விழாவை சிங்கப்பூரிலும் மலாயாவிலும் நடத்துகின்ற பெருமை இதனையே சாரும். கடந்த ஒன்பது ஆண்டுகளாக மலாயாவில் நடத்தப்பட்டு வரும் தமிழர் திருநாள் உலகுக்கே புதுமையான ஒற்றுமைத் திருநாள். சாதி, மதம், கட்சி, கொள்கை, தொழில், பொருளாதார நிலை முதலியவற்றால் பிரிந்து கிடக்கும் தமிழ் மக்களைத் தமிழ் என்னும் ஒரே அடிப்படையில் பொது மேடையில் இணைக்கின்ற இன்பத் திருநாள் இது. தமிழ் மக்களுக்குத் தன்னம்பிக்கையையும் முயற்சி ஊக்கத்தையும் இந்தத் திருவிழா தந்து வருகின்றது. தமிழர்கள் எல்லாத் துறைகளிலும் மற்ற இனத்தவரைப் போல முன்னேற வேண்டுமென்னும் எண்ணத்தையும் இது வளர்த்து வருகிறது. தாய்மொழி தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் தமிழ்க் கலைகளையும் பேணுகின்ற உறுதியைத் தமிழ் மக்கள் இத்திருநாள் மூலம் பெறுகின்றார்கள். தமிழர் திருநாள் மூலம் மலாயாத் தமிழர்கள் கட்டுக்கோப்பான ஒரு சக்தியாக வளர்ந்திருக்கிறார்கள் என்றால் மிகையாகாது. தமிழர் திருநாள் தமிழர் பிரதிநிதித்துவ சபையின் அரிய சாதனையாகும்.

சிங்கப்பூரில் தமிழர்களின் மற்றொரு பெரிய நிறுவனம் தமிழர் சீர்திருத்தச் சங்கம். வெள்ளி விழாவைக் கொண்டாடிவிட்ட இச்சங்கம், தனக்கென்று பெரிய கட்டிடத்தைச் சொந்தமாகக் கொண்டிருக்கிறது. எல்லாச் சங்கங்களுக்கும் முன் தோன்றிய தாய்ச்சங்கம் இது. இதில் 2000 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இச்சங்கத்தில் நல்ல தமிழ் விரிவுரைகள் அடிக்கடி நிகழும். நல்ல தமிழ் நூல் நிலையம் ஒன்றும் இச்சங்கத்தில் இருந்து வருகின்றது. இச்சங்கம் உமறுப் புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளி கட்டுவதற்கு ஆயிரம் தொண்டர்கள் மூலம் இருபதாயிரம் வெள்ளி சேர்த்துக் கொடுத்தது. சிங்கப்பூரில் தமிழர்கள் அதிகமாக வாழும் சிராங்கூன் சாலைப்பகுதியில் அமைந்திருக்கிற இச்சங்கம், தமிழர்களின் நடவடிக்கைகளுக்குக் கேந்திரஸ்தலமாக விளங்குவதாகும். தமிழர் பிரதிநிதித்துவ சபையும் தமிழ்க் கல்விக் கழகமும் இந்தச் சங்கக் கட்டிடத்திலே இருந்து வருகின்றன.

இனி மலாயாக் கூட்டரசில் தமிழின் நிலையைக் காண்போம். ஏறத்தாழ எல்லாத் துறைகளிலும் சிங்கப்பூரைப் போன்றே மலாயாவும் தமிழுக்குச் சிறப்பான இடத்தைத் தந்து வருகிறது. மலாயா அரசாங்கம், தேசீய மொழியாக மலாய் மொழியை ஏற்று அதற்கு உயர்வளிக்க எல்லா வகையிலும் ஆவன செய்து வருகிறதென்றாலும், தமிழ், சீனம் ஆகிய

மொழிகளுக்கும் அது ஆக்கம் தந்து வருகிறது. அரசாங்க நடைமுறைகள், விளம்பரங்கள், அறிவிப்புகள், அறிக்கைகள் முதலியவை தமிழ் உள்ளிட்ட 4 மொழிகளிலும் வெளியிடப்படுகின்றன. அரசாங்க நடவடிக்கைகளில் தமிழுக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டுவருகிறது. தகவல் இலாக்காவில் தமிழ்ப் பகுதி ஒன்று இயங்குகிறது. அது "வளர்ச்சி" என்னும் பத்திரிகையை நடத்துகிறது. சிங்கப்பூர் வானொலியைப் போலவே மலாயா வானொலியும் தமிழுக்கு நல்ல ஆக்கம் தந்து வருகிறது. தமிழ்ச் செய்திகளையும் சிறப்பான தமிழ் நிகழ்ச்சிகளையும் அது ஒலிபரப்புகிறது.

மலாயாவின் கல்வித் திட்டப்படி 800 தமிழ்ப் பள்ளிகளில் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. இந்தப் பள்ளிக்கூடங்களில் 50,000 தமிழ்க் குழந்தைகள் படிக்கிறார்கள். இவை அனைத்தும் ஆரம்பப் பள்ளிகள். பெரும்பாலானவை தோட்டப்பள்ளிகள். அரசாங்க உதவி பெறும் பள்ளிக்கூடங்களே மிகுதி. இந்தத் தமிழ்ப் பள்ளிகளின் நிலை சீன, மலாய்ப் பள்ளிகளுடன் ஒப்பிடும்போது திருப்திகரமாயில்லை. அரசாங்கம் சம அந்தஸ்து தந்து வருகிறது. நிதி உதவியும், ஆக்கமும் அளிக்கின்றதென்றாலும் தமிழ் மக்களிடையே அவற்றைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்கின்ற ஆர்வமும் செயலூக்கமும் இல்லை. வசதி படைத்த பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை ஆங்கிலப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பிவிடுகிறார்கள். அதனால் தமிழ்ப் பள்ளிகளின் நிலைமை உயர்வடையாமல் இருந்து வருகிறது. ஒரே ஆசிரியரைக்கொண்ட பள்ளிகள் ஏராளம். ஐந்து, ஆறு வகுப்புக்களுக்கு ஒரே ஆசிரியர் எப்படிப் பாடம் சொல்லித்தர முடியும்? ஆசிரியர் இல்லை, கட்டிடம் இல்லை, சாதனங்கள் இல்லை. இவ்வாறு குறைகள் பல. தமிழ் மக்களின் எண்ணப்போக்கில் மாறுதல் ஏற்பட்டால் ஒழிய இந்த நிலையில் மாற்றம் பிறக்கப் போவதில்லை.

அரசாங்கக் கல்விக் கொள்கையின்படி தமிழ்ப் பள்ளிகளில் 6வது படித்த மாணவர்கள் ஆங்கில உயர்நிலைப் பள்ளிக்குச் செல்ல வழி இருக்கிறது. இவ்வாறு ஆண்டுதோறும் தமிழ் மாணவர்கள் சிலர் ஆங்கிலப் பள்ளிகளில் சேர்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் குழந்தையின் எதிர்காலம் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. மலாயா அரசாங்கம் மலாய் மொழிக்கு முதன்மை தந்து மக்களிடையே ஐக்கிய மலாயா உணர்வை வளர்க்க அரும்பாடு படுகிறது. இச் சூழ்நிலையில் தமிழ் மக்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தாய் மொழி அவசியம் என்பதை உணர்ந்தால் ஒழியத் தமிழ்ப் பள்ளிகளுக்குச் சிறப்பான எதிர்காலமில்லை.

மலாயாவில் தமிழ் உயர்நிலைப் பள்ளிகள் இரண்டு நடக்கின்றன. தமிழைப் பாட மொழியாகக்கொண்ட தமிழ் உயர்நிலைப் பள்ளிகளுக்கு அரசாங்கம் இனிமேல் ஆதரவு தராது. இந்தப் பள்ளிகள் தங்கள் சொந்தப் பலத்திலேயே நிற்கவேண்டும்.

மலாய் மொழியைத் தவிர வேறு மொழிப் பள்ளிகளுக்கு அரசாங்கம் பண உதவி செய்யக்கூடாதென்ற தீவிரக் கருத்து மலாய்க்காரர்களில் ஒரு பிரிவினரிடையே நிலவுகிறது. ஆனால் தற்பொழுது ஆட்சி நடத்தும் கூட்டணி அரசாங்கம் பரந்த நோக்கத்தோடு எல்லா மொழிகட்கும் ஆக்கம் தந்து வருகிறது. இந்த வாய்ப்பைத் தமிழ் மக்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ளவில்லை என்பதுதான் என் கருத்து.

மலாயா மக்கள் சபையில் ஆங்கிலம் மலாய் இரண்டு மொழிகளுக்கே இடமளிக்கப்படுகிறது. 1965-ல் மலாயை ஆட்சி மொழியாக ஆக்குவதென்று தீர்மானித் திருக்கிறார்கள். இதன் விளைவாக ஆட்சித் துறையில் தமிழ் முதலிய மற்ற மொழிகளுக்குள்ள செல்வாக்கு படிப்படியாகக் குறையவே நேரிடும்.

மலாயாவில் தமிழ் வளர்க்கின்ற மற்றொரு துறை செய்தி இதழ்! சிங்கப்பூரில் "தமிழ் முரசு", கோலாலம்பூரில் "தமிழ் நேசன்" இவை யிரண்டும் நாளிதழ்கள். மற்றும் "கலை மலர்" "மனோகரன்", "இந்தியன் மூவி நியூஸ்" "மலைமகள்" முதலிய திங்கள் இதழ்களும், "மலை நாடு" "சங்கமணி" போன்ற வார இதழ்களும் உண்டு. நாள்தோறும் 12 பக்கங்களோடு தமிழகத்தில்கூடத் தமிழ்த் தினசரி எதுவும் வெளிவரவில்லை. இங்கு 12 பக்கங்களோடு "தமிழ் முரசு" சிறப்பாக நடைபெறுகிறது. "தமிழ் நேசன்" எட்டுப் பக்கம் வெளியிடுகிறது.

மலாயாவில் தமிழுக்கும் தமிழர் நல்வாழ்வுக்கும் "தமிழ் முரசு" தந்து வருகிற ஆக்கம் மிகப் பெரிது. வெறும் செய்தி இதழாக மட்டுமின்றித் தமிழர்களின் காவலனாகவே அது நடந்து வருகிறது. மற்ற ஏடுகளும் தமிழர்களின் வாழ்வுக்குப் புறம்பாகச் செல்ல முடியாத ஒரு சூழ்நிலையைத் "தமிழ் முரசு" மலாயாவில் தோற்றுவித்து விட்டது.

"தமிழ் முரசு" கையாளும் நடை நல்ல செந்தமிழ் நடை! அதன் ஞாயிறு பதிப்பு இளம் எழுத்தாளர்களுக்கு ஊக்கமளித்து வருகிறது. சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள் எழுதக் கூடிய இளம் எழுத்தாளர்கள் பலர் மலாயாவில் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். "மாணவர் மணிமன்ற மலர்" என்னும் நான்கு பக்க வார இதழையும்

'தமிழ் முரசு' மாணவர்களுக்கு நடத்தி வருகிறது. இந்த மணி மன்றத்தில் 23,000 மாணவர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள். முற்றிலும் மாணவர் எழுதும் கதை, கட்டுரைகளைக் கொண்டு வெளியிடப்படுவது மாணவர் மணிமன்ற மலர். மாணவர்களுக்கு எழுத்துப் பயிற்சியளிக்கும் அரிய கருவியாக இது திகழ்ந்து வருகிறது.

"தமிழ்முரசு" வெளியிடும் ஆண்டு மலர்களைப் பற்றியும் கண்டிப்பாகக் குறிப்பிட வேண்டும். தமிழகத்தில் உள்ளவர்களும் மலைக்கத் தக்க வகையில் கலைக்களஞ்சியமாகவும் இலக்கியக் களஞ்சியமாகவும் "தமிழ் முரசு" தன் ஆண்டு மலர்களை உருவாக்கிவருகிறது.

"இந்தியன் மூவி நியூஸ்," "கலைமலர்" "மனோகரன்" மூன்றும் சினிமாப் பத்திரிகைகள். இவை மக்களிடையே செல்வாக்குப் பெற்று நடக்கின்ற இதழ்கள். மற்ற துறைகளில் வார இதழ்கள், மாத இதழ்கள் இனிமேல்தான் ஆக்கம் பெறவேண்டும். தமிழ் நாட்டிலிருந்து கப்பல்தோறும் வந்து விடும் அழகிய இதழ்களோடு போட்டியிடுவது அத்துணை எளிதன்று. இத்துறையில் வளர்ச்சி ஏற்படாததற்கு முக்கிய காரணம் இதுதான்.

புத்தக வெளியீட்டின் நிலையும் அப்படியப் படித்தான்; பள்ளிக்கூடப் புத்தகங்கள் தவிர அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில நூல்கள் வெளிவந்துள்ளன. முறையான தொடர்பான வெளியீட்டு முயற்சிகள் இனிமேல்தான் ஆரம்பமாக வேண்டும். இத்துறையில் மலாயாவில் புதிதாகத் தோன்றியுள்ள எழுத்தாளர் சங்கங்கள் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. சிங்கப்பூரில் தமிழ் எழுத்தாளர் கழகமும், கோலாலம்பூரில் மலாயா தமிழ் எழுத்தாளர் சங்கமும், பினாங்கில் வட மலாயா தமிழ் எழுத்தாளர் சங்கமும் அண்மையில் தோற்றம் பெற்றிருப்பவை. இவை தமிழ் வளர்ச்சிக்கு உருவான பணிகளைச் செய்யமுடியும். ஆற்றல் வாய்ந்த பல எழுத்தாளர்கள் இந் நாட்டில் இருக்கிறார்கள். வாய்ப்பும் வசதியும் கொடுத்தால் திறமையைக் காட்டக்கூடிய இளம் எழுத்தாளர்களும் இங்கு உண்டு. மலாயாவில் தமிழ் வளர்க்கும் திருப்பணியில் இவர்களையெல்லாம் இச் சங்கங்கள் ஈடுபடுத்துமென நம்பலாம்.

மலாயாவில் தமிழுக்குள்ள செல்வாக்கு உண்மையிலேயே தமிழர்கள் பூரிப்படையக் கூடியது. இந்தச் செல்வாக்கு நிலைக்கவும், நீடிக்கவும் மலாயாத் தமிழர்கள் விழிப்பாகத் துடிப்போடு செயலாற்ற வேண்டியது இன்றியமையாதது. இத்துறையில் தமிழகமும் எங்களுக்கு எல்லாவித உதவிகளையும் நல்குமென எதிர்பார்க்கிறோம்.

தமிழ் நூல்கள் இலக்கியங்கள்
மலிவான விலையில்
மக்கள் பதிப்புக்களாக வெளியிடுவோர்

அருணா பப்ளிகேஷன்ஸ்

23, கோபதி நாராயணசாமிச் செட்டி ரோடு

தியாகராய நகரம் :: சென்னை - 17

தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்கும்
'பாரதி'க்கும்

எமது வாழ்த்துக்கள்

சுதேசமித்திரன்

மவுண்ட்ரோடு :: சென்னை-2.

இந்த ஆண்டு
அருணோதயம்
தனது 100 வது
புத்தகத்தை
வெளியிட்டுப்
பெருமை
கொள்கிறது.

அருணோதயம்

ராயப்பேட்டை :: சென்னை-14

சிறந்த நூல்கள்

புலியூர்க் கேசிகன்		
1. நாலடியார்		1 50
2. பழமொழி நானூறு		1 50
3. உதய சூரியன்		1 50
எஸ். சங்கரன்		
சுதந்திர நாடுகள்		3 00
இந்திய நாகரிகம்		2 50
உலகத்தின் கதை		1 50
அன்னை		2 50
அறிவுக் கதைகள்	சௌரி	1 00
சமைப்பது எப்படி	சரோஜினி சங்கர்	1 00
பொன் மலர்	சரத் சந்திரர்	2 00
குழந்தைச் செல்வம்	கம்பதாசன்	0 50
பாப்பா பாட்டு	தமிழ் ஒளி	0 50

மல்லிகைப் பதிப்பகம்

2, ராஜா பாதர் தெரு, சென்னை 17.

தமிழில் சிறுகதை இலக்கியம்

[பி. சி. கணேசன் பி.எஸ்ஸி., பி. டி.]

மேனாட்டு மொழிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது சிறுகதை இலக்கியம் தமிழில் வெகு சமீபகாலத்தில்தான் தோன்றியது என்று கூறுவதில் தவறில்லை. வடமொழிப் புனை கதைகளும், குறுந்தொகை, கலித்தொகைப் பாடல்களும் சிறுகதைக்கான வடிவம் கொண்டு இலங்கியவை எனத் தம் மொழிப்பற்றின் காரணமாக ஒரு சிலர் வாதித்நாலும, உண்மையில் 'சிறுகதை' என்று இப்பொழுது நாம் எதை அழைக்கிறோமோ, அது நம் பண்டை இலக்கியங்களில் காணப்படவில்லை என்ற உண்மையை ஒப்புக் கொள்ளுவது நம் மொழிக்கு எந்த வகையிலும் இழுககாகாது. ஐரோப்பிய மொழிகளோடு நமக்கேற்பட்ட தொடர்பின் காரணமாகத்தான், சிறுகதை என்ற ஒரு துறையை நாம் அறிந்து ஈடுபடத் தொடங்கினோம் என்பது மறைக்கத் தேவையில்லாத உண்மை.

சமுதாயத்தில் ஏற்படும் மாறுதல்களை இலக்கியம் என்றும் பிரதிபலிக்கத் தவறியதே இல்லை. ஐரோப்பாவில், குறிப்பாக இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற் புரட்சி, அங்கு வாழ்ந்த மக்களின் கண்ணோட்டத்தில் ஒரு பெரிய மாறுதலையே தோற்றுவித்தது. வாழ்க்கையின் ஒவ்வொரு துறைபற்றியும் புதுப்புது மதிப்பீடுகள் தோன்றலாயின. காலத்தின மதிப்பைப் பொருளாதாரத் தரத்தில் மனிதன் கணக்கிட ஆரம்பித்தான். இயந்திர சாதனங்கள் வளரவளர மனிதனின் ஓய்வு நேரம் மிகுதியாயிற்று. ஓய்வை ரசனையுணர்வோடு செலவழிக்கக் கற்றுக் கொண்டான். அதே சமயத்தில் அந்த ஓய்வை மிகுதியான மூளையுழைப்பில் ஈடுபடுத்தவும் அவன் விரும்பவில்லை. கடினமான காவியங்களை அன்வயப்படுத்திப் பொருளாழம் கண்டு ரசிக்கப் போதுமான பொறுமை அவனிடததில் இல்லாது போயிற்று. விரைவில் படித்துணர்ந்து அனுபவிக்கத்தக்க இலக்கியங்களையே அவனுள்ளம் விழைந்தது. நாவல் இலக்கியங்கள் அவனுடைய தேவையைப் பெருமளவுக்குப் பூாததி செய்தன. தொழில் வளர்ச்சி மிகமிக, பொருளியல் ஆசை அதிகரிக்க அதிகரிக்க, காலத்தைச் செலவழிப்பதிலும் மனிதன் சிக்கனத்தைக் கையாள ஆரம்பித்தான். நாவல் குறுக வேணடிய கட்டம் பிறந்தது. இபபடித் தோன்றிய தேவையின் விளைவே சிறுகதை இலக்கியம்.

நிகழ்ச்சிகளின் கோவையாக ஆரம்பித்த சிறுகதை இலக்கியம் அதன் வளர்ச்சி நிலையில பாத்திரப் படைப்பைமையமாகக்கொண்டு இயங்கத் தொடங்கியது. முழுமையடைந்த பாத்திரங்களைப் படைத்துக் காட்டுவது, சிறுகதையின் வரம்புக்கு மீறிய விஷயமானாலும், பாத்திர குண விசேஷத்துக்குக் கோடியிட்டுக் காட்டாவிட்டால் சிறுகதை தன் ஜீவனை இழந்துவிடும் என்ற மனப்பான்மை வளர்ந்தது. இதற்கு முக்கியமாக ஒரு காரணமும் இருந்தது. தொழில்யுகம் ஆரம்பித்த பிறகு தனி மனிதனின் குண தோஷங்கள் சமுதாயத்தின் கவனத்துக்கு வருவதர்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்திருந்தன. ஒவ்வொரு மனிதனையும் மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்தும் அந்தத் தனித்தன்மை கதைக்குரிய கருப்பொருளாகி, சிறுகதைக்கு விசேஷமான அந்தஸ்தை அளித்தது. சிறுகதை, இலக்கியத்தின் அங்கமாகிவிடவே, அதைப் படைப்பதில் புதுப்புது உத்திகள் கையாளப்பட்டன. சிறுகதைக்கான கச்சாப் பொருட்களாக வாழ்க்கையின் எல்லா விஷயங்களுமே எடுத்துக் கொள்ளப்பட்டன. தனிமையில்கூட மனிதர்கள் பேசக்கூசிய விஷயங்களெல்லாம் சிறுகதைகளாக வடிக்கப்பட்டு மக்களையும் விமர்சகர்களையும், ஏன் இலக்கிய உலகத்தையே, அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. இதற்குச் சிறப்பான உதாரணமாகச் சொல்லவேண்டுமானால் பிரஞ்சு சிறுகதை எழுத்தாளன் மாப்பசானைக் குறிப்பிடலாம்!

இவ்வாறு ஐரோப்பியரின் மொழிகளில் சிறுகதை வளர்ந்து வளம்பெறத் தொடங்கிய நேரத்தில், அவர்கள் இந்தியத் துணைக்கண்டத்தல் அரசியல் செல்வாக்கும் பெற்றதால், ஐரோப்பிய மொழிகளின் இலக்கியபாணி இந்திய மொழிகளிலும் ஊடுருவத் தொடங்கியது. அதன் விளைவாக, இந்தியமொழி இலக்கியங்களில் எழுத்தாளர்கள் இதுவரை செய்து பார்க்கத் தயங்கிய பரிசோதனைகளைத் துணிவோடு செய்ய ஆரம்பித்தார்கள். மறுமலர்ச்சி யுகத்தில் துரிதநடை போட்ட வங்காளி இலக்கியம்தான் முதன்முதலில் இந்தப் போக்கைப் பிரதிபலித்தது. ஆங்கிலப் புலமைமிக்க இரவீந்திரநாத் தாகூர் வங்காளி மொழியில் செப்பம் மிக்க சிறுகதைகளைப் படைத்தார். ஆங்கிலச் சிறுகதையின் வடிவ அமைதியோடு, இந்தியக்

கூட்டு நாகரிகத்தின் ஆன்மீக ஆழத்தையும் அவை செவ்வனே வெளிப்படுத்தின. தாகூரைப் பின்பற்றி வங்கமொழியில் பற்பல சிறுகதை எழுத்தாளர் தோன்றி அம்மொழியை வளப்படுத்தினர்கள்.

வங்கமொழியின் இந்தத் தொடக்கத்தையொட்டி இந்தியத் துணைக்கண்டத்தின் பல்வேறு மொழிகளில் சிறுகதை இலக்கியம் வளர ஆரம்பித்தது. இந்தக் கட்டம் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியில் ஒரு விறுவிறுப்பான கட்டம். இலக்கியமென்பது ஒரு சிலரின் ஏகபோக உடைமை என்ற நிலை மாறி, மக்களின் பொதுச் சொத்தாக அது மாறிக்கொண்டிருந்த நேரம். கவிதை என்ருல் அதையனுபவிக்கப் பெரும்புலமை வேண்டுமென்ற தவருன எண்ணத்தைப் பாரதியார் தன் எளிமையான-இனிமையான-இலக்கியத் தரம் குறையாப் பாடல்களால் உடைத்தெறிந்தார். இலக்கியத்தை இலட்சிய சாதனைக்குரிய கருவியாக அவர் லாவகத்துடன் கையாண்டார். திலகர், பெசன்ட் போன்றவர்களின் ஆவேசப்பேச்சு வடக்கே செய்த காரியத்தைப் பாரதியாரின் பாடல்கள் தெற்கே செய்து கொண்டிருந்தன. கவிதை யுலகில் பாரதி செய்த புரட்சியை, உரைநடையுலகில் தமிழ்த் தென்றல் திரு. வி. க. செய்துகொண்டிருந்தார். தமிழ் உரைநடை எத்தகு ஆற்றல் பெற்றது என்பதை அவரது பேச்சும் எழுத்தும் தெள்ளத் தெளிவாக உணர்த்தின. தமிழ் உரைநடைக்கு அந்தஸ்தும் சிறப்பும் திரு. வி. க. அவர்களின் பேச்சாலும் எழுத்தாலும் ஏற்பட்டன. உரைநடையில் உயரிய எளிமையைப் புகுத்தியவர் தமிழ்த்தாத்தா என்றழைக்கப்படும் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள். உரைநடையில் ஏற்பட்ட இந்த மறுமலர்ச்சி, சிறுகதைக்கான வழியைச் செப்பனிட்டுக் கொடுத்தது என்று சொல்லலாம். இப்படியெழுந்த சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு தமிழில் பல சிறுகதை எழுத்தாளர்கள் தோன்றினர்கள். ஒரு பரம்பரையே உருவாயிற்று. சிறுகதை இலக்கியத்தின் இரு கண்கள்போல் அக்காலத்தில் விளங்கியவர்கள் புதுமைப்பித்தனும், கு. ப. ராஜகோபாலனும் ஆவார்கள்.

உள்ளத்தைத்தொட்டு உணர்ச்சிகளின் தந்தியை மீட்ட வல்லவை கு. ப. ராவின் கதைகள். மனக்கடலின் ஆழத்தில் அவருடைய கற்பனைகள் சஞ்சாரம் செய்யும். குமுறிக் குமுறிக் குமையும் உள்ள உணர்ச்சிகளை வார்த்தை வடிவங்களாக்கிப் படிப்போரைக் குமுறியழவைக்கும் சக்தி அவருடைய எழுத்துகளிருந்தது. அவருடைய கதைகள் தெளிவான வடிவம் பெற்றவை. மூளியான கற்பனைகளை அவரிடத்தில் காணமுடியாது. ஆனல் புதுமைப்பித்தன், கு. ப. ரா.வின் வழியிலிருந்து முற்றிலும் மாறுபட்டவர். சமுதாயத்தின் சந்து பொந்துகளில் நிகழும் சங்கதிகளெல்லாம் அவருடைய கதைகளில் சந்தி சிரிக்கும். பழமையானுலும் புதுமையானுலும் புதுமைப்பித்தன் அதை விமர்சனம் செய்கின்ற பாணியில் இதுவரை நமக்குத் தோன்ருத உண்மைகள் தோன்றி நம்மைப் பிரமிக்கவைக்கும். உண்மைகளை உள்ளபடி காணப் பயப்படும் 'ரசிகர்களு'க்குப் புதுமைப்பித்தன் கதைகளில் வேலையில்லை. இதயத்தில் எழுந்த எண்ணங்களைத் துணிவின் துணைகொண்டு சிறுகதைகளாக்கிய இலக்கிய மேதை புதுமைப்பித்தன். கு. ப. ராவை உணரவேண்டுமென்ருல் அவருடைய 'விடியுமா?' என்ற கதையையும், புதுமைப்பித்தனை உணரவேண்டுமானல் அவருடைய 'பொன்னகரம்' 'மகாமசானம்' ஆகிய கதைகளையும் படித்துப் பார்க்கலாம்.

இந்தக் காலத்தில் 'கல்கி'யும் நிறையச் சிறுகதைகள் எழுதினர். 'வீணை பவானி' 'ஒற்றை ரோஜா' போன்ற சுவையான பல சிறுகதைகளை அவர் எழுதினலும், நாவல் உலகில் பெற்ற வெற்றியைச் சிறுகதையுலகில் அவர் பெறவில்லையென்றே சொல்லவேண்டும். கு. ப. ராவின் வடிவ அமைதியோ புதுமைப்பித்தனின் துணிகர நோக்கோ கல்கியின் சிறுகதைகளில் இல்லை. சொல்லப்போனல் அவருடைய சிறுகதைகளெல்லாம் நாவல்களின் சுருக்கமாகும். சிறுகதை இலக்கிய வளர்ச்சிக்கு நாரண துரைக்கண்ணன் அவர்கள் செய்துள்ள சேவையையும் இங்கே குறிப்பிட வேண்டும். மனவிளிம்பில் நிழலாடும் எண்ணங்களைப் பிடித்துவந்து சிறுகதையாக்குவதில் அவர் கைதேர்ந்த நிபுணர். மனச் சலனங்கள் நிழற்படங்கள்போல் அவருடைய கதைகளில் ஓடி நம் இதயத்தை நெகிழவைக்கின்றன. 'வானம் வெளுத்தது' என்ற சிறுகதை நல்ல உதாரணமாகும். 'பிடில் நாதப்பிரம்மம்' 'மனிதனும் மாயையும்' போன்ற அவருடைய கதைகள் தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தின் அரிய சாதனைகளாகும்.

'தேவன்' சிறுகதையுலகில் பல புது முயற்சிகளைச் செய்து அவற்றில் ஓரளவுக்கு வெற்றி கண்டவர். பி. எஸ். ராமய்யா நிறைய எழுதியிருக்கிருர். வெற்றி பெற்ற சிறுகதைகள் மிகச் சிலவே. ஆனல், தமிழ்ச் சிறுகதையுலகில் அவருக்கு நிரந்தரமான இடம் உண்டு. 'வசந்தன்' 'த. நா. குமாரசாமி' ஆகியோர் சிறுகதை வளர்ச்சிக்குப் பெரும் சேவை செய்தவர்கள். தனக்கென ஒரு பாணி வகுத்துக் கொண்டு, சிறுகதையுலகில் அன்றிலிருந்து இன்றுவரை பீடுநடைபோட்டு வருபவர் லா. ச.

ராமாமிர்தம். மனித வாழ்க்கையின் சாதாரண நிகழ்ச்சிகளெல்லாம் அவருடைய கரம் பட்டுப் புதியவிளக்கம் பெறுகின்றன. அந்த விளக்கங்களின் பின்னணியில் நின்றியங்கும் 'ஆத்ம பரிசோதனே,' கதையைப்படித்து முடித்த பிறகும் நம் இதயத்தில் நிரம்பி ஏதோ ஒருவகையான மனநிறைவை ஏற்படுத்துகின்றது. லா. ச. ராவின் கதைகளுக்குள்ள தனிச்சிறப்பு இது. லா. ச. ராவைப் போலவே ஆழமான சிறுகதைகள் புனைவதில் ந. பிச்சமூர்த்தி வல்லவர். லா.ச.ராவின் கதைகளைவிடப் பிச்சமூர்த்தியின் கதைகள் தெளிவானவை. லா. ச. ராவின் கதைகளில் காணப்படும் தத்துவச் சுழல்கள், பிச்சமூர்த்தியின் கதைகளில் கிடையாது. வாழ்க்கைத் தத்துவங்களை அவருடைய கதைகள் உணர்த்தினாலும், கதாபாத்திரங்கள் அவற்றின் பிரதிநிதிகளாய் உருவாகும் முறையில் கலா சிருஷ்டியின் பூரணத்வத்தைக் காணலாம். இந்த வரிசையில் தி. ஜ. ரவையும் சேர்த்துக் கொள்ளலாம் என்றாலும், கட்டுரை புனைவதில் அவருக்குள்ள ஆற்றலோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவரது சிறுகதை வெற்றியை அவ்வளவு சிறப்பாகச் சொல்லுவதற்கில்லை. என்றாலும் 'நொண்டிக்கிளி' என்ற கதைத் தொகுதியில் உள்ள அவருடைய கதைகள், தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டியவை. கி. சந்திரசேகரன், சிதம்பர சுப்ரமணியம், 'சோமு' ஆகியோரும் தமிழ்ச் சிறுகதை இலக்கிய அந்தஸ்தைப் பெறப் பெரிதும் துணைபுரிந்தவர்கள்.

மேலே குறிப்பிடப்பட்டவர்கள் தமிழ்ச் சிறுகதையுலகின் முதல் பரம்பரை என்று சொல்லலாம். இரண்டாம் பரம்பையில் எண்ணிறந்த சிறுகதை எழுத்தாளர்கள் தோன்றினாலும், நிலைத்து நிற்பவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே! பழைய தலைமுறைக்கும், இரண்டாவது பரம்பரைக்கும் இணைப்பாக விளங்குபவர் கி. வா. ஜகந்நாதன் அவர்கள், கி.வா.ஜ. வின் கதைகளில் கருப்பொருளுக்கு உள்ள விசேஷம் வடிவ அமைதியில் இல்லை. கதையின் லாவகமும், கருத்துச் சிறப்பும்தான் அவருடைய கதைகளில் நம்மை இழுத்துச் செல்லும் சக்திகள். உத்திகளின் சிறப்போ, சிறுகதைக்கான வடிவச் செப்பமோ இல்லாததால் அவருடைய கதைகள் பழங்காலச் சரித்திரச் சின்னங்கள்போல், நம் உள்ளங்களில் சுறுசுறுப்பற்ற ஆவலையே (Passive interest) தூண்டுகின்றன. இரண்டாம் தலைமுறையில் சிறுகதையுலகின் நம்பிக்கைத் தீபமாய் ஒளி வீசித் திகழ்பவர் அகிலன். வாழ்க்கையின் சிறுநிகழ்ச்சியும் அவரது கைவண்ணத்தால் சாகா வரம்பெற்ற சிறுகதையாய்ப் பரிணமித்து விடுகிறது. இல்லாவிட்டால் பருவ உணர்ச்சியின் சிறிய சாயலை 'வெட்கம்' என்ற உயர்ந்த மனோதத்துவ ஓவியமாக அவர் காட்டியிருக்க முடியுமா? மனித உலகின் பித்தலாட்டங்களைக் கேலிச் சித்திரமாய், மிக உயர்ந்த கலைப்படைப்புக்கான உத்திகளோடு 'மனிதர்கள்' என்ற கதையிலும், தத்துவ விசாரணையில் மனிதன் படும் வேதனையை 'நட்டகல்' என்ற கதையிலும், வாழ்க்கை மதிப்பீட்டின் முரண்பாடுகளை 'நல்லவர்—கெட்டவர்' என்ற கதையிலும் அவர் காட்டியிருக்கும் பாங்கு, உலகச் சிறுகதை எழுத்தாளர் என்ற அந்தஸ்துக்கு அவரை உயர்த்தி விடுகிறது. தமிழில் நல்ல சிறுகதை படிக்க விரும்புகின்றவர்களுக்கு அகிலனின் எந்தச் சிறுகதையையும் சிபாரிசு செய்யலாம்.

மார்க்சீயக்கோட்பாடுகள் எந்த அளவுக்குத் தமிழ்ச் சிறுகதையில் ஊடுருவி நிற்கிறது என்பதை உணர விரும்புகிறவர்கள் 'விந்தனி'ன் கதைகளைப் படித்துப் பார்க்கலாம். ஆனால் அவருடைய கதைகள் வெறும் பிரச்சார மேடையல்ல புதுமைப்பித்தனுக்குப் பிறகு சம்பிரதாயங்களைத் துணிவோடு உடைத்தெறியும் உள்ள உறுதி விந்தனிடம் நிரம்ப உண்டு ஆனால் துரதிர்ஷ்ட வசமாக, புதுமைப்பித்தனின் துணிகர முயற்சிகளுக்கு உறுதுணையாக இருந்த வ ரா. போன்ற பெரியவர்கள் விந்தனுக்குக் கிடைக்கவில்லை. தமிழ்ச்சிறுகதைகள் உப்புசப்பற்று வெளிவந்துகொண்டிருந்த நேரத்தில் விந்தனின் கதைகள் வெளியாகி உயிரூட்டமளித்தன. 'முல்லைக் கொடியாள்' 'சமுதாய விரோதி' போன்ற அவருடைய கதைத்தொகுதிகள் மறுமலர்ச்சி இலக்கியத்தின் மைல் கற்களாகும். மேட்டுக்குடி, மத்திய வர்க்கத்தைச் சார்ந்த கதாபாத்திரங்களையே பார்த்துப் பார்த்து அலுத்துப்போனவர்களுக்கு, அவர்கள் காணக்கூசும் சேரிவாழ் மக்களையும், தொழிலாளிகளையும் கதாபாத்திரங்களாக்கி, வெற்றிகரமாக உலவவிட்டு, சமுதாயத்தில் உறங்கிக்கிடந்த மனச்சான்றைத் தட்டி எழுப்பிய பெருமை விந்தனுக்கே உரியது.

சமூக சீர்திருத்த நோக்கோடு கதைகளைப் பிரச்சாரக் கருவியாக்கி, அதில் பெரும் வெற்றி கண்டவர் அறிஞர் அண்ணா அவர்கள். அவருடைய கதைகளில் பிரச்சாரம் வெற்றிபெற்ற அளவுக்கு, கதையம்சம் வெற்றி பெறவில்லை. இலக்கியத்தையும் பிரச்சாரத்தையும் பிரித்துணர முடியாத தன்மையில், சிறுகதையிலக்கியதுக்கு இலக்கணமாக விளங்கும் வகையில் ஒப்பற்ற கதைகளைப் படைத்தவர் நண்பர் டி. கே. சீனிவாசன். 'உலக அரங்கில்' என்ற கதைத் தொகுதியில் அவர் உலவவிட்டிருக்கும் கதாபாத்திரங்கள் பல தமிழ்ச் சிறுகதையுலகின் சிரஞ்சீவிக் கதாபாத்திரங்கள்! சமூக சீர்

திருத்த நோக்கோடு ஒரு காலத்தில் உயரிய சிறுகதைகளைப் படைத்த கோ. த. சண்முக சுந்தரம் அவர்களும் இங்கே குறிப்பிடப்பட வேண்டியவர்.

தஞ்சையின் மண் வளத்தையும், அதன் சூழலில் வாழும் மக்களின் குணதோஷங்களையும் சிறந்த சிறுகதைகளில் படைத்துக் காட்டியவர் தி. ஜானகிராமன். நல்ல பல சிறு கதைகளை எழுதியவர்கள் என்ற முறையில் கு. அழகிரிசாமி, சுந்தரராமசாமி, சி. சு. செல்லப்பா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமிழ்ச் சிறுகதையுலகின் எதிர்காலத்தைப் பற்றிப் பயப்படுவதற்கு ஒன்றுமே இல்லை. யாரோ சிலர், பொறுப்பற்ற முறையில், விமர்சனம் என்ற பெயரால் எழுதி வருவதைப் போல, நல்ல சிறு கதைகளுக்கும், எழுத்தாளர்களுக்கும் அப்படி யொன்றும் இங்கே பஞ்சம் வந்துவிடவில்லை. உண்மையிலேயே அப்படி யாருக்காவது சந்தேகம் இருக்குமானால், சற்று மனத் தெளிவோடு நண்பர் ஜெயகாந்தனின் சிறு கதைகளையும், ஜெகசிற்பியனின் சிறு கதைகளையும் (அவருடைய வார்த்தைப் பிரயோகங்களில் சறுக்கி விழாத மன வுறுதிமட்டும் வேண்டும்) அ. வேதாசலத்தின் 'நட்சத்திரப் பூ' என்ற கதைத் தொகுதியையும், அடியேனுடைய 'பாவ மன்னிப்பு' என்ற கதைத் தொகுதியிலுள்ள சிறு கதைகளையும் படித்துப் பார்க்கும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன். ந. பார்த்தசாரதி, ஆர். சூடாமணி, ராஜம் கிருஷ்ணன், பிலஹரி, ஸ்ரீரங்கம் ராமகிருஷ்ணன், வையவன், வேணுகோபாலன், ஜ. சாமிநாதன் போன்ற நல்ல எழுத்தாளர்கள் நம்மிடையே உருவாகி, தமிழ்ச் சிறுகதையின் எதிர்காலத்தில் அசையாத நம்பிக்கையை ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

அரிய விஷயங்கள்;

அழகான பதிப்புக்கள்;

ஏராளமான பக்கங்கள்;

மலிவான விலை!

★

1.	முதல் உதவி	2 00
2.	இந்தியாவின் கதை	2 00
3.	ஈசாப் நீதிக் கதைகள்	1 25
4.	ஷை இரண்டாம் பகுதி	1 25
5.	புறநானூற்றுச் சிறு கதைகள்	1 00
6.	ஷை இரண்டாம் பகுதி	1 00
7.	ஓர் குலம்	1 00
8.	புதுச்சேரியைப் பாருங்கள்	1 00
9.	விடை தெரியுமா?	1 00
10.	பல ரக விளையாட்டுகள்	1 00
11.	கதைக் கடல்	1 50

★

தமிழகம்

59, பிராட்வே, :: சென்னை-1.

"கு. ப. ராவும் புதுமைப்பித்தனும் மறைந்து போனது தமிழ்ச் சிறுகதை உலகத்துக்குப் பெரிய நஷ்டம். இதில் சந்தேகமில்லை. ஆனால் செத்துப்போனவர்களுக்கு இது உண்மையில் இலாபம்! உயிரோடிருந்தால் இப்போது அவர்களுடைய புகழ் பாடத் தொடங்கி யிருப்பவர்களில் ஒருவர்கூடத் துணிந்து முன் வந்திருக்க மாட்டார்கள். போனபிறகு புகழ் ஏணியைத் தூக்கிப் பிடிப்பது நம் சம்பிரதாயம். இந்த அளவுக்காவது நிலைமை வந்திருக்கிறதே என்று நான் பெருமைப்படுகிறேன். ஆனால் அவர்கள் இருவரும் தங்களோடேயே சிறு கதை வளர்ச்சியையும் மூட்டை கட்டிக் கொண்டு போய்விட்டார்கள் என்ற சொல்லில் தான் வினையின் வித்து இருக்கிறது......இந்த நாட்டில் எத்தனையோ இடர்களுக்கு மத்தியில், இலக்கிய ஏணியின் முதல் படியை எட்டிப் பிடிக்க விரும்பும் இளைஞர்களுடைய கால்களை வாரிவிடும் திருப்பணி இது. தங்களால் ஒரு சிறுகதைகூட எழுத முடியாவிட்டாலும், களைகளுக்கு மத்தியில் தலை தூக்கிப் பார்க்கும் சின்னஞ் சிறு பயிர்களை முளையிலேயே கிள்ளி எறியாமல் இருந்தால், அதுவே அவர்கள் செய்யும் சிறந்த இலக்கிய சேவையாகும்!" என்கிறார் நண்பர் அகிலன்.

உண்மை! இருப்பதைப் போற்றி வளர்ப்பதில்தான் இலக்கியத்தின் வளமும் வாழ்வும் எதிர்காலமும் இருக்கிறது.

For all construction jobs
be they BIG or small
always use

SANKAR BRAND

PORTLAND CEMENT

for Soundness, Strength and Stability

Now, with the installation of an additioeal unit at our factory at Sankarnagar our production capacity has increased and we have reached the target of 5 lakhs tons per annum as envisaged in our expansion programme.

***Manufacturers*:**

THE INDIA CEMENTS LTD.,

***Factory*:**

Sankarnagar, Tirunelveli District

***Regd. Office*:**

"DHUN BUILDING," 4th FLOOR,
175/1, MOUNT ROAD :: MADRAS-2

***Sold and Distributed by*:**

The Cement Marketing Company of India Private Ltd.,

எழுத்தாளர் யாவர்?

[டாக்டர் மா. இராசமாணிக்கனார்]

எழுத்தாளர்

திருவை ஆள்பவர் ***திருவாளர்***. அதுபோல் எழுத்தை ஆள்பவர் ***எழுத்தாளர்***. ஈண்டு 'எழுத்து' என்பது எழுத்தாலாகிய சொற்களை யும், சொற்களாலாகிய இலக்கியத்தையும் குறிப்பது. "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்னும் ஆன்றோர் வாக்கில், 'எழுத்து' என்பது இலக்கண இலக்கியத்தையே குறிக்கி றது. எனவே, இலக்கண இலக்கிய அறிவு கொண்டு அதனைத் தம் நூல்களில் ஆளும் தகுதி பெற்றவரே எழுத்தாளர் எனப்படுவர்.

நமது நாட்டில் 'எழுதுவோர்' பெருத்து விட்டனர்; 'எழுத்தாளர்' பெருகவில்லை. எழுத்தாளர் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றிருப்பர்; தொன்று தொட்டு வரும் தமிழ் மரபு பிறழாதவர்; தம் நூல்களில் இலக்கிய உயிர்நாடி ஊடுருவிச் செல்லும்படிப் பார்த்துக் கொள்வர். இவரே உண்மையில் 'எழுத்தாளர்' என்னும் சொல்லுக்குத் தகுதியுடையவர்.

எழுத்தாளர் யாப்புமுறை பிறழாமல் செய் யுள் இயற்றுவர்; இலக்கண முறை பிறழாமல் சொற்றொடர்களை அமைப்பர்; இயலும் வரை யில் தமிழ்ச் சொற்களையே தம் நூல்களில் பயன் படுத்துவர்; நல்ல தமிழ்ச் சொற்கள் இருக்கப் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத் தார்; இன்றியமையாத தேவை ஏற்படும்போது மட்டுமே பிறமொழிச் சொற்களைப் பயன் படுத்துவர். இந்த இலக்கணங்கள் பொருந்தப் பெற்றவரே '***எழுத்தாளர்***' என்று அறிஞரால் கருதப்படுவர்.

எழுத்தாளர் மரபு

மேலே சொல்லப்பெற்ற இலக்கணத்தோடு கூடிய எழுத்தாளர் யாவர்? இன்றுள்ள தமிழ் நூல்களுள் காலத்தால் பழைமையானது என்று பலராலும் போற்றப்படும் தொல்காப்பி யம் என்னும் பெரிய இலக்கண நூலைச் செய்த ***தொல்காப்பியரை***யே, இன்று தமிழ் நூல்கள் உள்ள நிலையில், ***முதல் எழுத்தாளர்*** எனக் கூறலாம். அவருக்கு முன்னர் எண்ணிறந்த எழுத்தாளர் இலக்கண இலக்கிய நூல்களைச் செய்து மறைந்தனர் என்று தொல்காப்பி யரே ஒப்புக்கொள்கிறார். புறநானூறு போன்ற தொகை நூல்களில் உள்ள செந்தமிழ்ச் செய் யுட்களை எழுதிய எழுத்தாளர் நானூற்றவர்க்கு மேற்பட்டவராவர். எந்நாட்டவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க அறநூலைச் செய்த திருவள்ளு வரும், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகளும், கவிதை மணம் கமழும் செஞ்சொற்களால் மணிமேகலை என் னும் காவியத்தைச் செய்த மதுரைக் கூல வாணிகன் சாத்தனாரும் சங்ககால எழுத்தாளர் ஆவர்.

பல்லவர் காலத்தில் (கி. பி. 300—900) பிற மொழிக் கலப்பு ஏற்பட்டது. அது அக்கால நிலையைப் பொறுத்தது. அக்காலத்தில் ஆண்டவன் மீது அருட்பாடல்கள் பாடிய நாயன்மார்களும் ஆழ்வார்களும் தலைசிறந்த எழுத்தாளர் ஆவர்.

பல்லவர்க்குப் பிற்பட்ட சோழர் காலத்தில் (கி. பி. 900—1300) சிந்தாமணி பாடிய திருத் தக்க தேவரும், பெரிய புராணம் பாடிய சேக் கிழார் பெருமானும், இராமாயணம் பாடிய கம்பர் பெருமானும் தலைசிறந்த எழுத்தாளர் ஆவர்.

பின் நூற்றாண்டுகளில் திருவிளையாடற் புரா ணம் பாடிய பரஞ்சோதி முனிவரும், காஞ்சிப் புராணம் பாடிய சிவஞான முனிவரும், கந்த புராணம் பாடிய கச்சியப்ப சிவாசாரியாரும் *சீறாப் புராணம்* பாடிய உமறுப் புலவரும், தேம்பாவணி பாடிய வீரமாமுனிவரும் போற் றத்தக்க எழுத்தாளர் ஆவர்.

அருட்பா பாடிய இராமலிங்க அடிகளும், இரண்டாம் கம்பர் என்று போற்றப்பெற்ற மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர் களும் 19-ஆம் நூற்றாண்டின் எழுத்தாளருள் குறிக்கத்தக்கவராவர்.

உரைநடை எழுத்தாளர்

தமிழில் இன்று காணப்படும் பழைய உரை நடை சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ளது. அடுத்துத் தனி உரை நடையை இறையனார் களவியலுள் காணலாம். இது கி. பி. 7 அல் லது 8-ஆம் நூற்றாண்டின் உரைநடையை உணர்த்துவது. அக் காலத்தில் வாக்கியங்கள் மிக நீண்டு இருந்தன என்பதை இவ்வுரை நடை உணர்த்துகிறது.

தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய இளம் பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர், தெய்வச் சிலையார், பேராசிரியர் என்பவர் சோழர்கால உரைநடை ஆசிரியரா வர். திருக்குறளுக்கு உரை வகுத்த பரிதியார், மணக்குடவர், காளிங்கர், பரிமேலழகர் என்ப வர் போற்றத்தக்க உரைநடை எழுத்தாளர் ஆவர்.

செய்யுள் நூல்களும் உரைநடை நூல்களும் மக்கள் படித்துப் பயன் பெறவே எழுதப்படு கின்றன. இப்பொழுது படிப்பவர் எளிய நடையை விரும்புகின்றனர். எனவே, எளிய நடையில் நூல்கள் எழுதப்படுகின்றன. மக் கள் எளிய நடையை விரும்புவதற்கு, அழுத்த மான மொழியறிவு இன்மையே காரணமாகும். சங்ககாலத்தில் தமிழ் அறிவு சிறந்திருந்தது. எனவே, அரசர்க்கும் பொதுமக்களுக்கும் புரி யக்கூடிய நடையில் அக்காலப் புலவர்கள் செய்யுட்களைப் பாடினர். அவ்வாறே புலமை அழுத்தம் பெற்ற ***நச்சினார்க்கினியர்*** போன்ற பிற்காலத்தார் தமிழை விரும்பி அழுத்த மாகப் படிப்பவர்களுக்கே (செய்யுட்களுக்கு) உரை எழுதினர். அவ்வுரைநடையை இன்றும் புலவர் வகுப்பு மாணவர் படிக்கின்றனர். ஓரளவு தமிழ் அறிவு இருப்பவரே அவ்வுரை களைப் புரிந்துகொள்ள முடியும். மேலும் அவை பல நூற்றுண்டுகளுக்கு முன் எழுதப்பட்டவை. தமிழறிவு குறைந்துள்ள நாம், அவற்றை எடுத்தவுடனே படிக்க முடியவில்லை என்பதற் காக, 'அத் தொல்லாசிரியர் உரை நடை உரை நடையா?' எனக் கேட்பதோ, அவர்களை இழித்துப் பேசுவதோ தமிழ் மரபுக்கும் வர லாற்று அறிவுக்கும் மாறுபட்டதாகும். ***காலந் தோறும் படிப்பவர் நிலைக்கேற்ப மொழிநிலை வேறுபடும்*** என்பது மொழிநூல் அறிஞர் ஒப் பும் உண்மையாகும்.

பிற்காலத்தில் சிறு வாக்கியங்களாக உரை நடை எழுதிக் காட்டிய பெருமை வீரமாமுனி வரையே சேர்ந்தது. அவர்க்குப் பின்பு இராம லிங்க அடிகள் உரை நடை நூல்களையும் கடி தங்களையும் கட்டுரைகளையும் எழுதினர்.

இருபதாம் நூற்றுண்டு

சோழர் ஆட்சிக்குப் பின்பு ஆட்சி முறை மாறுபாட்டால் தமிழ் நன்கு வளர்ச்சி பெற வில்லை. தமிழ்க் கல்விக் கூடங்களும் தமிழைச் சிறந்த முறையில் கற்பிக்கவில்லை. எனவே, பண்டைய இலக்கிய இலக்கணங்கள் கற்பா ரும் கவனிப்பாருமின்றிக் கிடந்தன. ஆதலால், தமிழன் தன் இலக்கியப் பழமையையும், மொழிப் பெருமையையும் மறந்துவிட்டான். வெள்ளையர் ஆட்சியில் ஆங்கிலமே அரசு செலுத்தியது. புலவர் தேர்வு வைக்கப்பட்ட பின்னரே பழைய நூல்களைப் படிப்பவர் தொகை பெருகியது. செந்தமிழ்ச் செல்வி, செந்தமிழ், தமிழ்ப் பொழில் என்ற திங்கள் இதழ்கள் தொல்லாசிரியர் நெறி பற்றி இயங் கத் தொடங்கின. அவை நாட்டில் நல்ல தமி ழைப் பரப்பின. ***மறைமலையடிகள், திரு. வி. க., டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை*** போன்ற நற் றமிழ் அறிஞரும் செந்தமிழைப் பேசியும் எழுதி யும் வந்தனர். டாக்டர் சேதுப்பிள்ளை அவர்கள் இன்றும் அத் தமிழ்த் தொண்டினைச் செய்து வருகிறார்கள்.

நற்றமிழை வாழ்விக்க வேண்டும் என்ற நல்ல எண்ணம் கடந்த இருபது ஆண்டுகளாக இளைஞர் உலகில் மேலோங்கி வருகிறது. டாக்டர் மு. வ., கி. வா. ஜகந்நாதன் போன்ற தமிழ்ப் பேராசிரியர்களும் புலவர்களும் நல்ல தமிழை நாளும் வளர்த்து வருகின்றனர்.

காலஞ் சென்ற கவிஞர் பாரதியாரைப் பின் பற்றிக் கவிமணி, நாமக்கல் கவிஞர், பாரதி தாசன் முதலியோர் இந்த நூற்றுண்டில் தமிழ்ச் செய்யுட்களைப் பெருக்கி வருகின்றனர்.

வேண்டுகோள்

"உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி யுண்டாகும்"

என்று கவியரசர் பாரதியார் கூறியபடி, **உள் ளத்தில்** தமிழ்ப் புலமை இருப்பின், அது வாக்கினிலே வெளிப்படும். பின்பு அது நாம் எழுதும் எழுத்தில் காட்சியளிக்கும். அத் தகைய காட்சியைக் காட்டவல்லவரே எழுத் தாளர். அத்தகைய எழுத்தாளர் மரபு இத் தமிழகத்தில் வாழையடி வாழையாக வந்து கொண்டிருக்கின்றது. அம்மரபு மேலும் வளர்ந்து வரவேண்டும் என்பதே நமது விருப்ப மாகும்.



சிறந்த மலிவுப் பதிப்புகள்

பாரதியார் கவிதைகள் ரூ. 1.75

(மகாகவி பாரதியார் கவிதைகள் முழுவதும் அடங்கிய அழகிய நூல்.)

பக்தி வயல் 2.00

(ராஜாஜி அவர்களின் ஆசிபெற்று சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீட்சதர் அவர்களின் முகவுரையுடன் பௌராணிகர் எழுதியது. முதல் பதிப்பு வெளி வந்து ஒரே மாதத்தில் விற்பனையான அருமையான நூல்.)

சமையல் கலை 1.00

(சமையல் பக்குவ முறைகள் அனைத்தும் அடங்கிய நூல். ஒவ்வொருவர் இல்லத்திலும் இருக்க வேண்டியது.)

வியாசர் விருந்து	ராஜாஜி	1·50
வள்ளுவர் வாசகம்	,,	1.00
சக்கரவர்த்தித் திருமகன்	,,	1.50
கண்ணன் காட்டியவழி	,,	1.00
கற்பனைக்காடு	,,	1.00
பாற்கடல்	,,	2.50
ஆற்றின் மோகம்	,,	2.50
மாணவருக்கு	காந்திஜி	1.50
பெண்களுக்கு	,,	1.50
அநுபவ ஆங்கில வைத்தியம்	ராஜாஜி குமாரர் ராமு	2.00

பாரதி பதிப்பகம்

தியாகராயநகரம் — சென்னை-17

சிறந்த வெளியீடுகள்

*

பண்டித நா. பார்த்தசாரதி

குறிஞ்சி மலர்	7	50
பிறந்த மண்	5	00
கோபுர தீபம்	5	00
வலம்புரிச்சங்கு	3	00
காலத்துக்கு வணக்கம்	3	00
மூவரை வென்றான்	2	00

கோவி. மணிசேகரன்

செம்பியன் செல்வி	7	50
தேவதேவி	4	00
முகிலில் முளைத்த முகம்	2	50

வள்ளுவர் பண்ணை

137, பிராட்வே :: சென்னை-1.

மொழித் துணை

[சாலை இளந்திரையன், எம்.ஏ., எம்.லிட்.,]

நம் கருத்துக்களைப் பிறருக்குச் சொல்லவும் பிறர் கருத்துக்களை அறியவும் துணைசெய்வது மொழி. பிறரின் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளவும் நம் இன்ப துன்பங்களில் பிறர் பங்கு கொள்ளவும் துணையாயிருப்பதும் மொழியே. பன்னூறு நூற்றாண்டாக வாழ்ந்து மறைந்துள்ள பல பெருந்தகையாளர்களின் உயர்ந்த உணர்ச்சிகளும் சிறந்த எண்ணங்களும் மொழியில் (இலக்கியங்களாகத்) தேக்கி வைக்கப் பெற்றுள்ளன. அப்பெருஞ் செல்வத்தை அறிந்து மகிழத் துணை செய்வதும் மொழியே.

உலகம் மிகப் பெரிது. அதில் வாழும் மக்களோ எண்ணிறந்தவர். ஒவ்வொரு மனிதனும் எத்தனைதான் விரும்பினாலும் முயன்றாலும் அத்தனை மனிதருடனும் பழகி மகிழ்வதென்பது இயலாத காரியம். இப் பெருந்தோல்வியைக் கண்டு மனம் வருந்தி நிற்கும் மனிதனுக்கு ஆறுதல் துணையாக வருகிறது மொழி.

ஒரு மொழிச் சமூகத்தின் வாழ்வையும் வாழ்க்கை நோக்கங்களையும் அம்மொழிக்குரிய இலக்கிய ஆசிரியர்கள் பிரதிபலிக்கின்றார்கள். அம்மொழியைக் கற்பதன் மூலம், அல்லது அவ்விலக்கியத்தைத் தன்மொழியில் பயில்வதன் மூலம், அந்த மக்களோடெல்லாம் அளவளாவி மகிழும் இன்பம் எளிதாகக் கிடைக்கிறது.

மற்றவர் சொல்லும் அன்புரை அறிவுரைகளைமனிதன் அப்படியேஏற்றுக்கொள்ளுகிறானா என்பது ஒருபுறம் இருக்க,-அந்த உரைகளைக் கேட்பதில எல்லா மனிதர்களுக்கும் ஒருவகையான திருப்தி ஏற்படுகிறது என்பது உண்மை. அதுபோலவே நம் இன்ப துன்பங்களைப் பிறர்க்குச் சொல்லுவதிலும் இனமறியாத ஒரு மன நிறைவு ஏற்படுகின்றது. இந்த நிறைவும் திருப்தியும் இல்லாவிட்டால் மனிதர் ஒருவரோடு ஒருவர் பேசவே மாட்டார்கள்! ஆமாம், வம்புபேச்சு என்றும் வெட்டிப் பேச்சு என்றும் சொல்லி அலுத்துக் கொள்ளுகிற பேச்சுக்களிலும், அவைகளில் ஈடுபடுவோர் ஒருவகை இன்பத்தைக் காணுகின்றனர். நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ, குறைவாகவோ மிகுதியாகவோ பயன்தராத எந்தச் செயலையும் செய்யும் இயல்பு உள்ளவனல்ல மனிதன். இவ்வகையில் பேச்சு, எளிதாக எதையும் கொள்ளவும் கொடுக்கவும், அதன் மூலம் மன அமைதி பெறவும் துணைசெய்யும் சிறந்த கருவியாக விளங்குகின்றது.

வாழ்க்கை என்னும் கரும்பின் பிழிவே இலக்கியம் என்பர். அப்பிழிவு, தொடர்ந்துவரும் வாழ்க்கைப் பண்ணையைச் செழிப்புறச் செய்கின்றது. அதே சமயம், பொங்கி வளரும் புது வாழ்வுக்கு அணியும் அரணுமான கரைகளாகவும் அமைகின்றது. புதுமை வெறியே உருவாகி வந்தவர்களாகத் தம்மைக் கூறிக் கொள்வோரும்கூடப் பலவகைகளில் தம் முன்னோரின் கடைப்பிடிகளை மேற்கொண்டொழுகுவதைப் பார்க்கிறோம். முன்னோர் என்னென்ன எண்ணினார்கள்,-எப்படி எப்படி வாழ்ந்தார்கள் என்பதை எல்லாம் செவிவழிச் செய்தியாக உணர்கிறோம்; அல்லது இலக்கியங்களின் மூலம் தெரிகிறோம். இவ்விரண்டுக்குமே துணையாக இருப்பது மொழி.

நெடிய குடிப்பிறப்பு உடையவர்களுக்குப் பண்பு நிறைவு உண்டு என்பது பெரியோர் கருத்து. காரணம், தம் குடும்பத்தின் பலப்பல பெரியோர்களின் அருமை பெருமைகளை நினைந்து நினைந்து தம்மைச் செம்மையும் சீர்மையும் படுத்திக் கொள்ளும் வாய்ப்பு இவர்களுக்குக் கிடைக்கிறது. நீண்ட வாழ்வும் நிறைந்த இலக்கியமும் உள்ள மொழியும் தன் மக்களுக்கு இச்சிறப்பை அளிக்கிறது. நம் குடும்பத்தின் முன்னோர்களைப் பற்றிப் பேசும்போது, பொதுவாக அவர்களின் சிறப்புக்களையே எடுத்துப் பேசுகிறோம். சிறுமைகளும் உள்ள உலகிலேயே நாம் வாழ்ந்தாலும், பெருமைகளையே சிந்திக்கவும் அவ்வழியில் செயல்படவும் இது துணையாக நிற்கிறது. இப் பெருஞ்சிறப்பு இலக்கியத்துக்கும் உள்ளது. குறைக்கலப்பில்லாத செய்திகளை இலக்கியம் நமக்கு எடுத்தளிக்கிறது. அவற்றைத் துணைக்கொண்டு நம் இதயம் உயர்ந்த நினைவுகளில் படர்கின்றது.

நமது தமிழ்வாழ்வு, காலப்போக்கில் எத்தனையோ மாறுதல்களை ஏற்று வளர்ந்து வந்துள்ளது. ஆயினும்—,

> "இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
> அன்பொடு புணர்ந்த ஐந்திணை"

என்று வரும் குடும்பவாழ்வு இலக்கணத்தின் மீதே இன்றும் நம்வாழ்வு இயங்குகின்றது. இன்பம் சிதையினும், பொருள் குறையினும்,

அறம் சரியினும் இத்தொல்காப்பியக் குரல் நம் உள்ளத்தில் எழுகிறது; குறையை நிறை செய்ய நம்மை ஊக்குகின்றது.

நமக்குள்ளே சண்டைகள் பல. சாதிகள் சமயங்கள் என வந்து முளைத்த களைகள் பல. இவற்றால் எழும் சினம், சிலபோது ஆற்றத் தக்க சினமாக இருப்பதில்லை. இவை செய்யும் நோய் நம்மைப்பல சமயங்களில் வெறியராக்கி விடுவதும் உண்டு. ஆயினும் எல்லாரும் வெட்டிக் கொண்டு சாகாமல், விட்டுவிட்டு ஓடாமல் தமிழ்க்குலமாய், ஓரினக் கூட்டமாய்ச் சேர்ந்து வாழ்கிறோம். இப்பெருவாழ்வை இன்னும் கட்டிக் காத்து வருவது எது? அதுதான்—

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா!"

என்னும் மொழி. நம் முன்னோர் தந்து வைத்த இம்மொழித் துணையே நம் வாழ்க்கைத்துணையாக நம்மோடு வந்து, கல்லில் இடருமலும் கருங்குழியில் வீழாமலும் நம்மைக் காத்து வருகிறது.

நாம் எலும்பும் தோலும் மூச்சும் முயற்சியும் உள்ள மனிதர்கள். எல்லை மீறிய தொல்லைகள் வரும்போது சோர்ந்து விடுவது மனித இயல்பு. ஓர் இனத்தின் ஒரு சிலர் சோர்ந்தால் பிறராயுள்ளோர் தேற்றலாம். இனம் முழுதுமே அடிமைப்பட்டுக் கிடக்க நேர்ந்தால், அறிவு மறுக்கப்பட்டுக் கிடந்தால், யாரை யார் தேற்றுவது? வாழ்வோரெல்லாம் வதங்கி நிற்கையில், வாழ்ந்தோர் மொழி ஒலிக்கிறது—

" மெல்ல வந்துஎன் நல்லடி பொருந்தி
'ஈ' என இரக்குவராயின் சீருடை
முரசு கெழுதாயத்து அரசோ தஞ்சம்?—
இன்னுயி ராயினும் கொடுக்குவன் இந்நிலத்து!
ஆற்றல் உடையோர் ஆற்றல் போற்றாது, என்
உள்ளம் எள்ளிய மடவோன், தெள்ளிதின்
துஞ்சுபுலி இடறிய சிதடன் போல
உய்ந்தனன் பெயர்தலோ அரிதே!..."

(புறம். 73,)

"'ஈ' என இரந்து கேள்;— என் அரசையும் என் உயிரையும் வேண்டுமானாலும் தருகிறேன்; போரென்று புகன்று எழுந்தாயோ, நீ பொன்றுவது திண்ணம்!"

இவ்வீர உரை, இவன் வழிவந்தாரின் தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றுவதிலும், வீழ்ந்த இதயத்தைத் தட்டி எழுப்புவதிலும், வியப்பு ஏது? அது போலவே—

" வாய்வாள் ஆண்மையின்
வண்தமிழ் இகழ்ந்த
காய்வேல் தடக்கைக்
கனகனும் விசயனும்
ஐம்பத் திருவர்
கடுந்தே ராளரொடு
செங்குட்டு வன்தன்
சினவலைப் "

பட்ட செய்தி, வீழ்ச்சியுற்ற தமிழர்க்கு எழுச்சியும் விசையொடிந்த அவர் உள்ளத்திற்குப் புதுமலர்ச்சியும் ஊட்டுமென்பதில் ஐயமில்லை.

எழுச்சி வீழ்ச்சி ஒருபுறம் இருக்க,-நெருங்கி எழுந்த கட்டிடங்களுக்குள்ளேயும் நிரம்பி வழியும் தெருக்களுக்குள்ளேயும் அகப்பட்டுக் கொண்டு, விண்ணையும் மீனையும் விரிந்த இயற்கை வனப்புக்களையும் கண்டு உள்ளம் பசுமை பெற இயலாது, வறண்டு சுருங்குகின்றனர் மக்கள். அவர்கள் காண்பனவும் கேட்பனவும், அரசியல் முரண்பாடுகளும் முறிவுபாடுகளுமே. இவற்றாலெல்லாம் பசையின்றிப் போகின்றது உளளம். அங்கே பிறக்கும் எண்ணங்கள பொன் தளிராகவோ பூந்துணராகவோ இருப்பதில்லை; இருக்க இயல்வதில்லை. தூர்ந்துபோகும் இதய ஊற்றின் தூரை வாரிப் புதுமை செய்பவர் யார்? எங்கோ ஒரு சில சொற்கனிவாளர் இருக்கலாம். அவர்களைத தேடி எல்லோராலும் போக முடிகிறதா? எனவே நமது முன்னையோர் மொழி மக்களின் இதயக்காலில் இனிமை பாய்ச்ச வேண்டும்; பாய்ச்சுகின்றது:

" வானரங்கள் கனிகொடுத்து
மந்தியொடு கொஞ்சும்;
மந்திசிந்து கனிகளுக்கு
வான்கவிகள் கெஞ்சும்!
கானவர்கள் விழிஎறிந்து
வானவரை அழைப்பார்;
ககனசித்தர் வந்துவந்து
காயசித்தி விளைப்பார்.
தேனருவித் திரைஎழும்பி
வானின்வழி ஒழுகும்;—
செங்கதிரோன் பரிக்காலும்
தேர்க்காலும் வழுகும்!
முழங்குதிரைப் புனலருவி
கழங்கென முத்தாடும்;
முற்றமெங்கும் பரந்துபெண்கள்
சிற்றிலைக் கொண்டோடும்!
செழுங்குரங்கு தேமாவின்
பழங்களைப்பந் தடிக்கும்;
தேனலர்செண் பகவாசம்
வானுலகில் வெடிக்கும்!...
............................."

அழகும் அருவியும் தழுவிக் கிடக்கும் குற்றால மலையின் வருணனை இது. இரும்புச் சுவர்களெடுத்த ஏழடுக்கு மாளிகையினுள்ளிருந்து இதைப் படித்தாலும், அத்தனையும் மறைந்து மறந்து போக, வளமையும் இனிமையும் நவழும் ஒரு குற்றாலப் பேரெழில் நம்மைச் சுற்றி விரிந்து விடுகிறது. நெஞ்சம் அதில் நீந்தி நீந்தி

இளமையும் வளமையும் பசுமையும் பெறுகிறது!

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே' என்னும் இன்குரலை,—நம் வீட்டுச் சண்டை, தெருச் சண்டை, ஊர்ச்சண்டை, மொழிச்சண்டை, நாட்டுச் சண்டை எனப் பல பூசல்கள் அமுக்கி விடுகின்றன. இந்தப் பளுக்களை அகற்றி உலகமெலாம் ஒன்றே என்று எட்டிப் பார்ப்பது எங்கே? அதற்குரிய தெம்பைப் பெறுவது தான் எங்கே?

அதோ! உறைந்த இந்தப் பனியின் மேல் இளவெயில் பரவுகிறது.

"தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுலக மக்களெலாம் ஒன்றே!' என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே
சண்டையில்லை, தன்னலந்தான் தவிர்ந்த தாலே!"

சண்டை உள்ளங்களே மலிந்த உலகுக்குத் தாயுள்ளம் பற்றிய செய்தியையும் அதன பெருமையையும் அளிக்கிறார் கவிஞர். அந்த உள்ளம் அவ்வளவு எளிதில் உருவாகிவிடுமா? அதற்கு வழியும் சொல்கிறார்.

"உன்வீடு—உனது பக்கத்து வீட்டின்
இடையில் வைத்த சுவரை இடித்து,
வீதிகள் இடையில் திரையை விலக்கி
நாட்டொடு நாட்டை இணைத்து, மேலே
ஏறு! வானை இடிக்கும் மலைமேல்
ஏறு விடாமல்! ஏறு மேன்மேல்!
ஏறி நின்று பாரடா எங்கும்;
எங்கும் பாரடா இப்புவி மக்களை;
பாரடா உனது மானிடப் பரப்பை;
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்!
என்குலம் என்றுனைத் தன்னுடன் ஒட்டிய
மக்கட் பெருங்கடல்;—பார்த்து மகிழ்ச்சிகொள்
அறிவை விரிவுசெய்! அகண்ட மாக்கு!......
மானிட சமுத்திரம் நானென்று கூவு!
பிரிவிலை, எங்கும்—பேதமில்லை!"

ஏறுத மலைச் சிகரத்தில்—எண்ணச் சிகரத்தில் நம்மை ஏற்றிவிடுகிறது கவிதை. பிளவும் பூசலும் தாங்கி நடைபெற்றுவரும் சண்டை உலகு மறைந்து விடுகிறது; உயர் பேரெழில் கொண்ட ஒரு பேருலகு உருவாகிறது, இதய ஆழத்தில்!

இப்பெரிய மாறுதலை அருளோ பொருளோ செல்வமோ— இவை எல்லாமோ செய்ய முடியவில்லை. நமது மொழி—அதிலே தேங்கியுள்ள இதயம் செய்து காட்டுகிறது. எண்ணத்தில் இப்பெரும் பேருலகம் உருவாக வழியும் துணையும் செய்கிறது மொழி. அதுவே, அவ்வுலகம் செயலில் முகிழ்க்கவும் ஊக்க மூட்டுகின்றது.

தனி மனித இதயத்துக்கு, குடும்ப ஒருமைக்கு, சமூக நலனுக்கு—என்று யாவற்றுக்கும் உரிய நெறிகளை மேற்கொள்ள ஏற்ற துணையாகவும் தூண்டுகோலாகவும் அமைகிறது மொழி—அது வழங்கும் இலக்கியச் செல்வம். ஆகையினால்தான், மொழித் துணையே வாழ்க்கையின் சிறந்த வழித்துணை என்று உலகம் கொள்ளுகின்றது.

எங்கள் புதிய வெளியீடுகள்

ஜெகசிற்பியன் எழுதியவை

ஆலவாயழகன்	7 00
மண்ணின் குரல்	7 50
அருள்மொழி நங்கை	3 50

சாண்டில்யன் எழுதியவை

வசந்த காலம்	1 50
செண்பகத் தோட்டம்	4 00

ஆர்வி எழுதியவை

இன்ப மணம்	2 00
கிளையில் இரு கிளிகள்	3 50

தமிழ் ஒளி

அறிவூட்டும் நூறு கதைகள்	1 50

எஸ். கே. சாமி

தமிழ் நாட்டுப் பழமொழிகள் (பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பழமொழிகள்)	3 50

வானதி பதிப்பகம்
82/11 பாண்டி பஜார், சென்னை-17.

எழில் மிக்க
அழகு கண்ணிற்கு விருந்து
இனிமை மிக்க கானம்
செவிக்கு விருந்து
பொருள்மிக்க
காவியம் கருத்திற்கு விருந்து
சுவை மிக்க உண்டி
நாவிற்கு விருந்து
மணம் மிக்க
'ரத்தினம் பொடி'
நாசிக்கு நல்விருந்தாமே!
T·A·S
ரத்தினம்
பட்டணம் பொடி
தயாரிப்பாளர்:
T.A.S. ரத்தினம் பிரதர்ஸ்
தபால் பெட்டி 1151, மதராஸ்-21
S.R. ஞானம் பட்டணம் பொடியும் எமது தயாரிப்பே

மலாயா நாட்டுத் தமிழ் இதழ்கள்

[ந. சஞ்சீவி, எம். ஏ.]

மலாயா நாட்டுத் தமிழ்மக்கள் ஆண்டுதோறும் வலிவோடும் பொலிவோடும் கொண்டாடும் திருநாள் தமிழர் திருநாள். தை பிறந்தால் மலாயா நாட்டில் தமிழர் திருநாளும் பிறக்கும். அலை அருகிலும் மலை முகட்டிலும் இத் திருநாளை அந்நாட்டுத் தமிழர்கள் கலையுணர்ச்சியோடும் கடமைப் பற்றோடும் கொண்டாடுகிறார்கள்.

சென்ற தைத்திங்களில் மலாயா தமிழர்கள் மாண்புடன் கொண்டாடிய தமிழர் திருநாளில் கலந்து தொண்டாற்ற சிங்கப்பூர் தமிழர் பிரதிநிதித்துவ சபை என்னையும் மதுரை தியாகராயர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. மெ. சுந்தரம் அவர்களையும் அழைத்திருந்தது. அருள் நிறைந்த தமிழர் பிரதிநிதித்துவ சபையாரின் வேண்டுகோளை ஆர்வமுடன் ஏற்றுக் கொண்டு இலக்கியத் தொண்டு புரிய மலாயா சென்ற எனக்கு அந்நாட்டில் வளர்ந்துவரும் தமிழ்ப் பத்திரிகை உலகை ஆராய்வதற்கும் வாய்ப்பு கிடைத்தது. ஓயாத கடமைகட்கு இடையே கிடைத்த ஓய்வில் யான் திரட்டியும் தொகுத்தும் வந்த குறிப்புக்களின் துணை கொண்டே இக்கட்டுரை எழுதப் பெறுகின்றது.

சிங்கப்பூர் தொடங்கி பெர்லிஸ் வரை நேர்ந்த மலாயா சுற்றுச் செலவில் என் கைக்கும் கண்ணுக்கும் கிட்டிய தமிழ் இதழ்களுள் நாளிதழ்கள்: 'தமிழ் முரசு'ம் 'தமிழ் நேச'னும், திங்கள் இதழ்கள்: 'மலைநாடு', 'மலைமகள்', 'மாதவி'.

இவ்விதழ்களில் இக்கட்டுரை எழுதும் நேரத்து என்னிடம் உள்ளவை 'மலைநாடு' பொங்கல் மலரும், 'மலைமகள்' 1959-ஆம் ஆண்டு மலரும், 'மலைமகள்' 1960-ஆம் ஆண்டு பிப்ரவரி இதழும், 'மாதவி' 1960-ஆம் ஆண்டு மலரும் ஆகும். இவை பற்றிய குறிப்புக்கள் சில வருமாறு:

மாதவி :

'மாதவி' ஆண்டு மலர் 108 பக்கங்கள் கொண்டது. இதன் ஆசிரியர்: ஐ. உலகநாதன். இதன் தனிஇதழ் விலை 30 காசு. ஆண்டுச் சந்தா 4 வெள்ளி. சிங்கப்பூரிலிருந்து இவ்விதழ் வெளிவருகிறது. ஆண்டு மலரில் தமிழக எழுத்தாளர் சிலரும் மலாயா நாட்டு எழுத்தாளர் பலரும் சொல்லோவியங்கள் வரைந்துள்ளனர். இம் 'மாதவி' 1960-தைத் திங்கள் வரை அரங்கு 1-ல்-ஆடல் 10-ல் ஆடினாள்.

'மலைமகள்' (ஆண்டு மலர்) :

மலைமகள் ஆண்டு மலர் 114 பக்கங்களைக் கொண்டது. கண்ணைக் கவரும் வண்ண ஓவியங்களுடைய இம் 'மலைமகள்', ஈப்போவில் அச்சாகி வெளிவருகிறது.

'மலைமகள்' பிப்ரவரி இதழ் :

34 பக்கங்களைக் கொண்ட இவ்விதழ் ஆசிரியர்: ஜி. சி. இளங்கோவன். கௌரவ ஆசிரியர்: அ.மு.சு. பெரியசுவாமி. இவ்விதழில் இடம் பெற்றுள்ள ஒரு குறிப்பால் '*மலாயா எழுத்தாளர் சங்கம்*' என்ற ஒன்று *மலாயா தமிழர்*களால் ஏற்பட்டது என்றும்; அது இன்னும் செம்மையாக உருப்பெறவில்லை என்றும் தெரிகிறது. இத்திங்கள் இதழ் 'மலை-2-குன்று-5.

'மலைநாடு' பொங்கல் மலர் :

ஓராண்டு நிறைந்த இவ்விதழ் திரு. வி. எம். சுந்தரம் அவர்களால் சுங்கை சிபுட்டிலிருந்து அச்சிட்டு வெளியிடப் பெறுவது.

திரைப் படச் செய்திகட்கும் சிறப்பிடம் தந்துள்ள இம் 'மலைநாட்'டில் திருவான்மியூர் பற்றிய அழகிய கட்டுரை ஒன்றும், சுங்கைப் பத்துப் பாட்டில் உள்ள பழந்தமிழ் ஆலயம் பற்றிய அரிய கட்டுரை ஒன்றும், சிறந்த படங்களுடன் வெளியிடப் பெற்றுள்ளது.

பொதுவாக இம்மலர்கள் தமிழகத்தினின்றும் வெளிவரும் மலர்களை நோக்க எந்த வகையிலும் தரக்குறைவுடையனவாய்த் தோன்றவில்லை. பல்சுவையும் பாலிக்கும் வன்மையும் வண்மையும் வாய்ந்தனவாகவே இம்மலர்கள் உள்ளன. இம்மலர்களுள் 'மாதவி'யும் 'மலைமக'ளும் தமிழகத்திலிருந்து இலக்கியப் பணி புரியச் சென்றிருந்த எங்கள் படங்களை முறையே முன்புற அட்டையின் அகத்தும் புறத்தும் வெளியிட்டு அன்பு கலந்த பாராட்டு மொழிகளைப் பொழிந்திருந்தன. இவ்வகையில்

'மாதவி'க்கும் 'மலைமகளு'க்கும் நாங்கள் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழ் நேசன் :

மலாயா கூட்டரசின் தலைநகராகிய கோலாலம்பூரிலிருந்து வெளிவரும் இந்த நாளிதழ் ஆசிரியர் : திரு. எம். சேதுராமன். எட்டுப் பக்கங்கள் கொண்ட இந்நாளிதழ் விலை 15 காசு. இது தொடங்கப் பெற்ற ஆண்டு 1924.

தமிழ் முரசு :

மலாயா நாட்டுத் தமிழ் இதழ்களுள் பல்லாற்றானும் தலைமை சான்றது 'தமிழ் முரசு' நாளிதழே என்பதில் எவர்க்கும் கருத்து வேறுபாடு இராது. இவ்விதழ் மலைநாட்டில் தோன்றி 25 ஆண்டுகள் ஆகின்றன. 1959 ஆம் ஆண்டு—ஜூலை—6-ஆம் தேதி 'தமிழ் முரசு' தனது வெள்ளி விழா மலரை வெளியிட்டுள்ளது.

'தமிழ் முர'சின் முதல் இதழ் 1935-ஆம் ஆண்டு ஜூலை—6-ஆம் தேதி ஒரு காசு விலையில் வெளிவந்தது. அவ்விதழின் முதல் பக்கம் முழுவதும் பாரதியின் பாமணமே கமழ்கிறது. சிங்கப்பூரில் சிறந்து விளங்கும் 'தமிழர் சீர்திருத்தச் சங்க'த்தின் திறப்பு விழா அழைப்போடு இப்பக்கம் காட்சி அளிக்கிறது. இவ் வழைப்பில் கையெழுத்திட்டுள்ள பெரியார் 'தமிழ் முரசு' ஆசிரியர் கோ. சாரங்கபாணி அவர்களே.

இந்த முதல் இதழ் (முரசு 1 ஒலி 1) 'ஒன்றென்று கொட்டு முரசே' என்ற பாரதியின் பாட்டோடும் அதற்கு ஏற்ற படத்தோடும் காட்சி அளிக்கிறது. மேலும் அவ்விதழில் உள்ள வாசகம் வருமாறு :

"ராஜசிங்கம் வசித்த பட்டணத்தையும் சிங்கத்தின் பட்டணமெனப் பெயரிட்டு அழைத்து வந்தது ஆச்சர்யமன்று. அதைப்போலவே சோழ மன்னர்களின் புலிக்கொடி இன்னும் மலாய் நாட்டின் அடையாளமாக இருந்து வருகிறது. இத்தகைய விண்முட்டச் சென்ற புகழ்படைத்த தமிழன் இன்று மண்வெட்டிக் கூலி தின்னலாச்சே.........இதற்கு விடுதலை இல்லையா என்று கலங்காதீர்கள்.

அறிவை வளர்த்திட வேண்டும்—மக்கள்
அத்தனை பேருக்கு மொன்றாய்
சிறியரை மேம்படச் செய்தால்—பின்பு
உலகம் எல்லோரையும் வாழ்த்தும்.
வயிற்றுக்குச் சோறிட வேண்டும்—இங்கு
வாழு மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பல்கல்வி தந்து—இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்.

நிலச்சுமையென வாழாமல் இன்றே இப்பொழுதே இதைச் செய்ய முனையுங்கள். சுடுதலும் குளிரும் உயிர்க்கில்லை. சோர்வு வீழ்ச்சிகள் தொண்டர்க்கில்லை என்பதை மறந்து விடாதீர்கள்"

பாரதியின் உணர்ச்சியில் திளைத்து எழுந்துள்ள இவ் வீர மொழிகள் எந்தப் 'பாரதி'யின் ஆண்டு மலர்க்கு இக்கட்டுரை எழுதப் பெறுகின்றதோ அப் 'பாரதி'க்கு உவப்பு ஊட்டுவது அன்றோ ?

இருபத்தைந்து ஆண்டுகட்குமுன் தோன்றிய இத் 'தமிழ் முரசு', செய்தி இதழாகவும் கருத்து இதழாகவும் கால் நூற்றாண்டுக் காலம் சிறந்த பணியாற்றி இன்று மலாயாத் தமிழர்கள் 'கூலிகள் அல்லர்; கொள்கை வீரர்கள்' என்று போற்றப் பெறும் நிலையை அந்தத் தீப கற்பத்தில் ஏற்படுத்தியுள்ளது.

எட்டு லட்சம் மலாயா தமிழர்களின் உரிமைக்கும் ஒற்றுமைக்கும் ஓயாமல் உழைக்கும் நாளிதழ் இத் 'தமிழ் முர'சே !

இவ்விதழின் ஆசிரியர் சான்றாண்மை மிக்க கோ. சாரங்கபாணி அவர்கள். தமிழ் நாட்டுத் திருவாரூரிலிருந்து மலாயாவில் சென்று குடியேறிய இவர் ஒரு குறிக்கோள் மனிதர். மணி விழாக் கொண்டாடப் பெறும் நிலையில் உள்ள இவர்தம் உழைப்பால் மலாயா தமிழர் சமுதாயம் பெற்றுள்ள நலங்களை ஒரு பெருநூலில் தான் கூறமுடியும்.

ஒருகாசு விலையில் வார இதழாகத் தோன்றிய 'தமிழ் முரசு' சிறிய அளவிலும் பெரிய அளவிலும் வாரம் மும்முறையாக வளர்ந்து, 1, 3, 5, 10 காசு விலைகளில் விற்று, இன்று 12 பக்கங்கொண்ட நாளிதழாய் 15 காசு விலையில் வெளிவருகிறது. மலாயா கூட்டரசிற்குக் காலைப் பதிப்பும் சிங்கப்பூருக்கு மாலைப் பதிப்பும் வெளியாகிறது. பல்லாயிரம் பிரதிகள் விற்பனையாகின்றன. ஞாயிறுதோறும் சென்னைக் கடிதத்தையும், திரைப்படச் செய்திகளையும், அறிவு ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், இலக்கிய ஓவியங்களையும், சிறுகதை நெடுங்கதைகளையும் தாங்கி 'ஞாயிறு மலர்' வெளிவருகிறது. இதில் உள்ள 'மாணவர் மணிமன்றம்' பகுதி, மலாயா நாட்டு இளம் எழுத்தாளர்கட்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுக்கும் ஒப்பற்ற கருவியாக விளங்குகிறது. பல்லாயிரம் உறுப்பினர்களை உடைய இம் 'மாணவர் மணிமன்ற' உறுப்பினர் எண்ணங்களும் எழுத்துக்களும் படங்களும் படைப்புக்களும் ஞாயிறுதோறும் இம்மலரில் இடம்பெறும். இப் பகுதி வாயிலாக மாலயா தமிழ் மாணவர் உல

கம் ஒரு பெரும் ஆக்கவேலைப் படையாகவே திரண்டுள்ளது.

இவ்வளவு பொலிவும் வலிவும் வாய்ந்த 'தமிழ் முரசு' நாளிதழின் தனிச் சிறப்புக்கள் இரண்டு. ஒன்று: 'தமிழ் முரசு' இதழின் மொழித்தூய்மையும் திறமும். இரண்டு: தரக் குறைவின்றி உள்நாட்டுச் செய்திகளையும் உலகச் செய்திகளையும் தரும் பான்மை.

'தமிழ் முரசு' வெறும் வாணிப வாழ்க்கை நடத்தாமல் அக்கரையிலும் இக்கரையிலும் உள்ள தமிழ் மக்கட்குச் செய்துள்ள பணிகள் போற்றற்குரியன. தமிழ் இனத்தவரைப் பிற இனத்தவர் மதிக்குமாறு பல களங்களைக் கண்டு வாகைகள் சூடியது 'தமிழ் முரசு.' தமிழ் நாட்டு மக்கள் புயல் முதலியவற்றால் அவதியுற்றபோது பொருளுதவி புரிவதில் முன்னின்றது 'தமிழ் முரசு.' மலாயாப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை கண்டது 'தமிழ் முரசு.', 'தமிழர் திருநாள்' மேம்படச் செய்வதும் 'தமிழ் முரசே'.

ஏறத்தாழ ஒரு திங்கள் அளவு மலாயாவில் சுற்றுச் செலவு மேற்கொண்டபோது நாங்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளில் எடுக்கப் பெற்ற படங்களை அழகிய முறையிலும், எங்கள் பேச்சுக்களைச் சுவை குன்றாத வகையிலும் வெளியிட்டு ஆக்கம் செய்த 'தமிழ் முரசு' இதழின் ஆற்றலை நினையுந்தோறும் நன்றியுணர்ச்சியால் கண்கள் நனைகின்றன.

உ

போன்: 4491 தந்தி: "TANDRIGHT"

தி இந்தியா லெதர் கார்ப்பரேஷன் பிரைவேட் லிட்.

"இந்தியத் தோல் மாளிகை"

தபால் பெட்டி எண் 1516

சென்னை - 1

- சென்னைத் துறைமுகத்திலிருந்து வெளிநாடுகளுக்குக் கிழக்கிந்திய பதனிடப்பட்ட ஆட்டுத் தோல் மாட்டுத் தோல்களின் ஏற்றுமதியில் முதன்மை வகிக்கும் ஸ்தாபனம்.
- தென் இந்தியப் பிராந்தியத்திலேயே அதிகமான அளவில் அன்னிய நாணயச் செலாவணி சம்பாதிக்கும் தனிப்பெரும் ஸ்தாபனம்.

: நிருவாகஸ்தர்கள் :

திரு. மு. நாராயணன் செட்டியார் (சேர்மன்)

திரு. ஆ. நாகப்ப செட்டியார் (மானேஜிங் டைரக்டர்)

வெளிநாடுகளில் தமிழ்க் கல்வி

"சோமலெ"

'தேமதுரத் தமிழோசை' உலகெலாம் பரவ வேண்டுமென்று கவியரசர் சுப்பிரமணிய பாரதியார் கனவு கண்டார். அந்தக் கனவு அடுத்த தலைமுறைக்குள் நனவாகிவிடும் என்பதற்கான அறிகுறிகள் பல இந்நாளில் ஏற்பட்டுள்ளன. அவற்றைச் சுட்டிக்காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கம்.

பிரிட்டன் : பாரதியார் பாடலிலுள்ள 'தமிழோசை" என்ற இனிய சொற்றொடரைத் தமிழ் நிகழ்ச்சிகளுக்குத் தலைப்பாக வைத்து ஒலி பரப்பிவரும் பிரிட்டனை முதலில் எடுத்துக் கொள்ளுவோம். இந்த நாட்டின் ஆட்சிக்குள் இந்தியாவும் தமிழகமும் இருந்தமையால் பிரிட்டிஷார் பலர் தமிழ்நாட்டிற்கு வந்து தமிழ் மொழியைக் கற்றுப் பல்வேறு துறைகளில் மிகச் சீரிய பணியை ஆற்றி நமது இலக்கிய வரலாற்றில் நிலைத்த புகழை நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றனர். அவர்களைப் பற்றி இங்கே கூற வேண்டுவதில்லை. ஒரு சிறு கட்டுரையில் அவர்தம் தொண்டினைத் தொகுப்பதும் இயலாதது.

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் 1884இல் தமிழறிஞர் ஜி. யு. போப் தமிழாசிரியராக நியமிக்கப்பட்டு இறுதிநாள் வரை அங்குப் பணியாற்றினார். ஆனால் அவருக்குப் பிறகு ஆக்ஸ்போர்டுக்குத் தமிழ்த் தொடர்பு அறுந்து விட்டது.

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் இப்போது வடமொழிப் பேராசிரியராக உள்ள அறிஞர் பர்ரோ (Professor T. Burrow, Boden Professor of Sanskrit, Oxford) திராவிட மொழிகளின் அகராதி ஒன்றைத் தொகுக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளார்.

பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களில் தமிழுக்குச் சிறப்பிடம் தந்துவருவது இலண்டன் பல்கலைக் கழகமே. அப்பல்கலைக் கழகத்துக் கீழை நாட்டு மொழிகள்—ஆப்பிரிக்க மொழிகள் ஆகியவற்றுக்கான கல்லூரியில் (School of Oriental and African Studies, University of London). இண்டர்மீடியட், பி.ஏ.,பி.ஏ. ஆனர்சுப் படிப்புகளுக்குத் தமிழையும் ஒரு பாடமாக எடுத்துப் பயில வசதி இருந்துவருகிறது. சில மாணவர் இங்கே தமிழ் மொழியைக் கற்றுவருகின்றனர்.

சிவஞானபோதத்தை மொழிபெயர்த்த ரெவரண்டு கார்டன் மத்தியூசு, டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரின் மாணவரும் ஆராய்ச்சியாளருமான எம். எஸ். எச். தாம்சன், நெடுங்காலம் இங்கிலாந்தில் வாழ்ந்த சி. எஸ். கே. பதி, மொழி நூல் அறிஞரான டாக்டர் ஆஷர் ஆகியோர் இங்கே தமிழ்த் துறையில் பணியாற்றிப் புகழ் பெற்றுள்ளனர். இப்போது தமிழ் விரிவுரையாளராக இருக்கும் 'ஜான் மார்' என்ற இளைஞர் தமிழ்மொழிப் புலமையோடு தமிழ் இசையறிவும் நிறைந்தவர். 1954-55இல் தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் வந்து பயின்றவர் ; தமிழ்ப் பற்று மிக்கவர். ரகுவீரர் என்ற இந்தி மொழி அறிஞர்—மொழி வெறியர்—தமிழின் ஆற்றலைக் குறைப்படுத்திக் கூறிய போது, அவருக்குச் சவால் விடுத்தவர் இவரே. தமிழ் வினைச் சொல்லில் நன்வினை பிறவினை என்னும் இரு கூறுகளும் இருப்பதால் புதிய சொல்லாக்கத்துக்கு ஏற்ற மொழியாகத் தமிழ் இருக்கிறது என்பதையும் உறுதியாகக் கூறியவர் இந்த ஜான்மார்தான்.

பிரிட்டிஷ் மியூசியம், இந்தியா ஆபீஸ், ராயல் ஏஷியாட்டிக் சொஸைட்டி ஆகியவற்றின் நூலகங்களில் அரிய தமிழ் நூல்கள் உள்ளன. பிரிட்டிஷ் மியூசியத்திலுள்ள தமிழ் நூல்களின் பட்டியலை டாக்டர் பார்னட் என்பார் வெளியிட்டுள்ளார்.

அமெரிக்கா : கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்து மொழிநூற் பேராசிரியர் மர்ரே எமனோ, (ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்து அறிஞர் பரோவுடன் சேர்ந்து) திராவிட மொழிகளின் சொற் பிறப்பு (Etymological) அகராதியை உருவாக்கி வருகிறார்.

வெளி நாடுகளில் வேலைபார்க்கும் அலுவலர்களுக்குப் பிற மொழிகளில் பயிற்சி தரும் திட்டம் ஒன்றுக்கு அமெரிக்க வெளிவிவகார இலாகா ஊக்கமளித்து வருகிறது. வாஷிங்டன் நகரத்திலுள்ள வெளிநாட்டுப் பல்கலைக் கழகத்திலும் சென்னையிலுள்ள அமெரிக்க அலுவலகத்திலும் தமிழ்ப் பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன.

மொழி இயல், ஒலி முறை, சொற்பிறப்பு பற்றிய வரலாறு ஆகிய ஆராய்ச்சிகள் இப்போது தமிழ் மொழியில் தொடங்கியுள்ளன.

இதற்குக் காரணமாக உள்ளவர்கள் அமெரிக்க நாட்டு ராக்பெல்லர் அறநிலையக் குழுவின் முயற்சியால் இந்தியாவுக்கு வந்துள்ள அறிஞர் களும், அக்குழுவின் உதவியால் அமெரிக்கா சென்று பயிற்சி பெற்றுள்ள தமிழ்ப் பேராசிரி யர்களும் ஆவர்.

போர்டு அறநிலையக் குழுவினர் உதவி யால் திராவிட மொழிகளில் நூல் வெளியிடும் ஒரு நிறுவனம் அமைந்திருக்கிறது. இதன்விளை வாக, தமிழிலிருந்து மலையாளம், தெலுங்கு, கன்னட மொழிகளுக்கு நேரே பல நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. இதற்கு முன்னர் ஆங்கில மொழியின் வாயிலாகவே மொழிபெயர்ப்பு வேலை நடந்துவந்தது. இந்தி யானு, சிகாகோ, பென்சில்வேனியா போன்ற சில பல்கலைக் கழகங்களில் 1955க்குப் பின் தமிழ்த்துறை தொடங்கப் பெற்றிருக்கிறது.

மேற்கு ஜெர்மனி: தொல்காப்பியத்திலுள்ள சொல்லாக்க முறை, எழுத்தொலி ஆகியன பற்றி இருபது ஆண்டுகளாக ஆராய்ந்துள்ள டாக்டர் சி. ஆர். சங்கரன் என்னும் பேரறிஞர் 1959 முதல் பான் பல்கலைக் கழகத்து Institute of Phonetics and Communications Research என்னும் பகுதியில் (Richard Merton Visiting Professor) பணிபுரிந்து வருகிறார். தொல்காப்பியத்தி லுள்ள ஆயுத ஒலி வடிவத்திலிருந்து வளர்ச்சி யடைந்த கணித முறைதான் இப்போது கணி தப் பேரறிஞர்கள் கூறும் Alpha Phnoid Theory of Mathematics என்பதை அவர் நிலைநாட்டியுள்ளார். இது ஒரு பெரிய புதையல் என ஜெர்மானியர் வியக்கின்றனர்; சங்கர னைப் போற்றுகின்றனர்; தொல்காப்பியத்தைப் பேணுகின்றனர். ஹெர்மான் பேதன் (Hermann Beythen) என்னும் ஜெர்மன் பாதிரி யார் தமிழ் இலக்கணம் ஒன்றை எழுதியுள் ளார். அவர் தயாரித்த தமிழ் நூல்கள் யாவும் பெர்லினிலுள்ள பல்கலைக்கழகத்து செமினரில் வைக்கப்பட்டுள்ளன.

மார்பர்க் பல்கலைக் கழகத்து வடமொழிப் பேராசிரியர் நோபெல் என்பவரிடம் பயிலும் மாணவர் சிலர் அவரிடமே தமிழ் மொழியைக் கற்று வருகின்றனர்.

ஹாலந்து: லெய்டன் பல்கலைக் கழகத்து வடமொழிப் பேராசிரியராகிய (F. B. J. Kuiper) கூய்பர் என்பவர் தமிழ் மொழியிலும் ஈடு பாடுடையவராயிருக்கிறார். தமிழ் ஒலி முறை யைப்பற்றி அவர் ஆராய்ந்து வருகிறார்.

செக்கோசுலவாகிய: டாக்டர் கமீல் சுவ லெபில் என்ற தமிழறிஞர் பிராஹா நகரிலுள்ள ஓரியண்டல் இன்ஸ்டிட்டியூட் என்னும் கீழை நாட்டு மொழித்துறை நிலையத்தில் திராவிட மொழிப் பிரிவின் தலைவராகப் பணியாற்றி வரு கிறார். தமிழ் ஒலியே வழங்காத ஒரு நாட்டில் இருந்தவாறே தமிழ் மொழியைக் கற்று அதன் நுட்பங்களை உணர்ந்துள்ளார். தொல்காப்பியம் போன்ற நூல்களைப் பயின்றும், சிலப்பதிகாரம் போன்ற தமிழ் நூல்களை செக் மொழியில் மொழிபெயர்த்தும் இவர் புகழ்பெற்றவர். 1958 இல் தமிழ்நாட்டுக்கு வந்திருந்து தமிழில் முழங் கினார். தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்று பல மேடைகளில் பாடினார். இப்போது இவர் நற் றிணைச் சொற்றொடர் அமைப்பு ஆராய்ச்சி யிலும் கம்பராமாயணச் செய்யுட்களைச் செக் மொழியில் தருவதிலும் முனைந்துள்ளார். அக நானூறு, நற்றிணை, குறுந்தொகைப் பாடல் களைத் தொகுத்து மொழி பெயர்த்து வெளியிட் டுள்ளார். பாரதி பாடல்கள் சிலவற்றை செக் மொழியில் ஆக்கியுள்ளார்; சுவையான நாட் டுப் பாடல்களைச் சேகரித்து வைத்திருக்கிறார்.

ரஷ்யா: ரஷ்யாவில் திராவிட மொழி ஆராய்ச்சியின் தந்தை ஏ. மொவார்த்தே என்பவர். இவர் பெஸ்கியின் பரமார்த்த குரு கதைகளை ரஷ்ய மொழியில் மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கிறார். 'பேச்சுத் தமிழ் இலக்க ணம்' என்ற நூலையும், 'தமிழ் மொழியில் உயிர் மெய் எழுத்துக்கள்' என்ற கட்டுரை யையும் ரஷ்ய மொழியில் எழுதியுள்ளார். திருக்குறளின சில பகுதிகளை மொழி பெயர்த் துள்ளார். இவரும் இவரது மனைவியார் எஸ். ரூதீன், ஏ. பியதி கோர்ஸ்கி ஆகிய மூவரும் தமிழ்-ரஷ்ய மொழி அகராதியை உருவாககி வருகின்றனர். மைக்கேல் ஆந்திரனேவ் என் பவர் ரஷ்ய-தமிழ் அகராதியை 1960 இறுதிக் குள் வெளியிடுவாரென்று எதிர்பார்க்கப்படு கிறது. 'தமிழ் மொழியில் வினைச்சொற் களின் வடிவ அமைப்பு' என்னும் ஆய வுரையை இவர் வெளியிட்டுள்ளார். தமிழ் எழுத்தாளரும் இப்போது ரஷ்யாவில் பணிபுரி பவருமான பூர்ணம் சோமசுந்தரமும் ஒய். கிரா ஜோவ் என்ற ரஷ்யரும் தமிழ் இலக்கண நூல் ஒன்றை உருவாக்க முயன்று வருகின்றனர். நாலடியாரை எ. பியதிகோர்ஸ்கி என்பாரும், சுப்பிரமணிய பாரதியாரின் நூல்களை ஐ. ஸ்மிர் னேவா என்ற பெண்மணியும் மொழி பெயர்த் துள்ளனர். பொதுவாக ரஷ்யாவில் இப்போது ஒரு சிறு அளவில இலக்கிய வட்டாரங்களில் தமிழ் மணம் கமழத் தொடங்கியிருக்கிறது. லெனின் கிராடு பலகலைக் கழகத்தில் தமிழுக்கு ஒரு துறை இருக்கிறது.

பிரான்ஸ்: ஐரோப்பிய நாடுகளில் வட மொழிக்கு ஒரு பேராசிரியக் கட்டில் ஏற்படுத் திய முதல் நாடு பிரான்ஸ். 1814இல் பாரிசி

லுள்ள College De Francais என்ற கல்லூரியில் வடமொழி ஆராய்ச்சி நடைபெற்றது. அதற்குப் பிறகு அங்குப் பேராசிரியராக வந்த பர்னோ (Burnouf) என்ற அறிஞரும் அவருடைய மாணவரான அரில் (Aril) என்பவரும் தமிழ் மொழியைப் பற்றியும் சிந்திக்கத் தொடங்கினர். அதன் விளைவாகக் கீழை நாட்டு மொழிகளுக்கான தேசீயக் கல்லூரியில் தமிழுக்கு ஒரு துறை ஏற்பட்டது. இங்கு ஜூலியன் வின்சன் (Julien Vinson) என்பார் சிறந்த தமிழறிஞராக விளங்கினர். இந்திய மொழிகளின் தலைவராக இப்போது இருக்கும் மீல் (P. Meile) என்பார் "தமிழிலக்கியத்தில் யவனம்" என்பதுபற்றி ஆராய்ந்துள்ளார். இக் கல்லூரியில் பல்லாண்டுகள் தொடர்புகொண்டிருந்தவரும் இப்போது புதுச்சேரியில் பணியாற்றி வருபவருமான பிலியோசா (Filliozat) என்பார் திருக்குறளையும் திருவாய் மொழியையும் பிரெஞ்சு மொழியில் தந்துள்ளார். தமிழ் இலக்கியம்பற்றி அறுபது ஆராய்ச்சிக் கட்டுரைகள் வரைந்துள்ளார். Biblotheque Nationale என்பது பாரிசிலுள்ள மிகப் பெரிய நூலகம். அங்கே காணப்படும் இந்தியச் சுவடிகளின் பட்டியலொன்றைப் பிலியோசா வெளியிட்டுள்ளார்.

பிரெஞ்சுக்காரரும் ஆப்பிரிக்க நாட்டில் அமைதியாக அரும்பணிபுரிந்து வருபவருமாகிய டாக்டர் ஸ்வைட்சர் என்னும் உலகப் பேரறிஞர் திருக்குறள் கீதையிலும் சிறந்தது என்ற கருத்தைத் தெரிவித்துள்ளார். ஆழ ஆய்ந்தும் நுணுகி உணர்ந்தும் கருத்துக் கூறும் இப்பெரியார் இதன் மூலம் தமிழுக்குப் பெருமையைத் தேடித் தந்துள்ளார்.

மலேயா : மலேயாப் பல்கலைக் கழகத்தில் தமிழுக்கு ஒரு பேராசிரியக் கட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தமிழ் நூல்கள் அனைத்துமே வாங்கிவைக்கப் பெற்றிருக்கின்றன. தமிழ், மலாய் இருமொழிகளுக்கும் பொதுவாக உள்ள சொற்கள் தொகுத்தல், தமிழ்-மலாய் அகராதி உருவாக்குதல், மலாய் மொழியில் திருக்குறளை மொழி பெயர்த்தல் ஆகிய வேலைகளை இப்பகுதி செய்யத் தொடங்கியுள்ளது. தமிழ்த் துறையை ஏற்படுத்த சிங்கப்பூர் தமிழர் பிரதிநிதித்துவ சபையும் அதன் தலைவர் கோ. சாரங்கபாணி (தமிழ்முரசு ஆசிரியர்)யும் காரணமாவர். தமிழ்ப்பகுதி இப்போது கோலாலம்பூரில் இருக்கிறது. சிங்கப்பூரையடுத்த ஜோஹூரிலும் (பல்கலைக் கழகத் தலைமையிடம்) தமிழ்ப்பகுதி ஒன்றைத் தொடங்க முயற்சி நடைபெற்று வருகிறது.

PHILIPS
LAMPS RADIOS

FITTINGS & ELECTRICAL ACCESSORIES

Electrical Wiring Contractor
Radio Servicing Undertaken

★

Contact :

R. S. M. & Co.

236/237. Devaraja Mudaly St.,
MADRAS - 3.
Phone 5504

சிங்கப்பூரிலுள்ள நாங்யாங் என்ற சீனப் பல்கலைக்கழகத்திலும் தமிழ்த்துறை அமைக்க முயற்சி நடைபெற்று வருகிறது.

முடிவுரை : இவ்வாறு பல நாடுகளில் நடைபெற்று வருகின்ற தமிழ்க்கல்வி தமிழாராய்ச்சி வேலைகளைப்பற்றி நமக்குத் தெரிவிக்கவும், அவர்களுக்குத் துணையாக இந்தியாவிலிருந்து தமிழ்ப் புலமையுடைய இளைஞர்களை அனுப்பி வைக்கவும், ஒரு நிறுவனம் அரசாங்க ஆதரவில் உடனடியாக ஏற்படவேண்டும். இந்த முயற்சியை நம் மாநில அரசியலார் செய்ய வேண்டும். தமிழும் இந்தியாவின் தேசீய மொழிகளுள் ஒன்று என்று ஒப்புக்கொள்ளப் பட்டிருப்பதால் இந்த நிறுவனத்திற்கு ஏற்படும் செலவை இந்திய அரசியலாரே தரவேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது நியாயமேயாகும்.

தமிழ் எழுத்தாளர் சங்கம் தோன்றிய வரலாறு

["மைவண்ணன்"]

நம் தமிழகத்தில் எழுதுவதைத் தொழிலாக வுடைய எழுத்தாளர்கள் முதன் முதலாகத் தங்களுக்கென ஒரு சங்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் 1944-ம் ஆண்டில் ஏற்பட்டது. அதற்குமுன் சென்னை யில் சில எழுத்தாளர்கள் பாரதி சங்கம் போன்றவற்றைத் தோற்றுவித்துச் சிலகாலம் நடத்தினர். பத்திரிகை நிருபர்களும் எழுத் தாளர்களும் சிலர் சேர்ந்து இரண்டு மூன்று முறை தஞ்சை, திருச்சி போன்ற ஊர்களில் எழுத்தாளர் மாநாடு, பத்திரிகையாளர் மாநாடு நடத்தியதோடு நின்றனர். கோயம்புத்தூரில் 'வீரசக்தி' என்ற பத்திரிகையின் ஆசிரியரா யிருந்த திரு. கோ. நீ. அண்ணாமலை, அதன் உரிமையாளரான திரு. வெ. ரங்கசாமியின் துணை கொண்டு தமிழ் எழுத்தாளர் சங்கத்தை ஏற்படுத்த முதல் முயற்சி எடுத்துக் கொண் டார். இவருக்கு 'வசந்தம்' ஆசிரியர் திரு. ஆர். திருஞானம், திரு. ஆர். சண்முகசுந்தரம் ஆகிய வர்களின் ஒத்துழைப்பு கிடைத்தது. இவர்கள் அனைவரும் சென்னைமாநகருக்கு வந்து, அச் சமயம் 'தினசரி' ஆசிரியராயிருந்த திரு. டி. எஸ்.சொக்கலிங்கம், 'இந்துஸ்தான்' ஆசிரியர் ரா. நாராயணன், 'பிரசண்டவிகடன்' ஆசிரியர் திரு. நாரண-துரைக்கண்ணன், சென்னைமா நிலக் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியராயிருந்த திரு. கே. சுவாமிநாதன், 'கலைமகள்' ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் முதலியவர்களைச் சந்தித்துப் பேசினர். அவர்களின் யோசனைப் படி, கோவை நண்பர்கள் சென்னைமாநகரி லுள்ள எழுத்தாளர்கள் அனைவர்க்கும் அழைப்பு விடுத்து, 'வஸந்தவிஹார்' என்ற ஒரு பெரிய ஓட்டலில் கூட்டத்தைக் கூட்டி, தமிழ் நாடு முழுவதிலுமுள்ள எழுத்தாளர்கள் அனைவரையும் ஒன்று சேர்ப்பதற்கான முறை யில் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஒன்றை ஏற் படுத்துவதென்று முடிவு செய்தனர். இதற் கான நல்லதொரு சூழ்நிலையை உண்டுபண்ண வும், தமிழகம் அனைத்திலும் பரவியுள்ள எழுத் தாளர் எல்லோரையும் ஒன்று திரட்டி அவர் களுடைய யோசனையையும் கோரவும்முதலாவ தாகத் தமிழ் எழுத்தாளர் மாநாடு ஒன்றைக் கூடிய சீக்கிரம் கூட்டுவதெனவும் இக் கூட்டத் தில் முடிவு செய்யப்பட்டது. திரு. அண்ணாமலை, திரு. திருஞானம் ஆகியோரின் யோசனைப்படி இம் முதல் மாநாட்டைத் தங்கள் ஊரான கோயம்புத்தூரில் நடத்த அனுமதிக்குமாறு திரு. ரங்கசாமி கேட்டுக்கொண்டார். எழுத் தாளர் சங்கம் ஏற்பட வேண்டுமென்று முதல் முயற்சி செய்யும் அவர்களே மாநாட்டை முத லில் நடத்தட்டும் என்று சென்னை எழுத்தாளர் கள் விட்டுக்கொடுத்து விட்டனர்.

1944-ம் ஆண்டு நவம்பர் மாதம் நாலாந் தேதியன்று கோயம்புத்தூரில் பிரபல தொழில் விஞ்ஞானியான திரு. ஜி. டி. நாயுடு அவர் களின் 'கோபால்பாக்' மாளிகையில் முதலா வது தமிழ் எழுத்தாளர் மாநாடு நடைபெற் றது. பழம்பெரும் பத்திரிகாசிரியரும் எழுத் தாளருமான திரு. டி. எஸ். சொக்கலிங்கம் அவர்கள் தலைமை வகித்தார். பிரபல எழுத் தாளர் திரு. வ. ரா. அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். இம் மாநாட்டுக்குத் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் எழுத்தாளர் கள் வந்து கலந்துகொண்டனர். மாநாட்டு நிகழ்ச்சிகளில் திருவாளர்கள் ரா. நாராயணன், நாரண - துரைக்கண்ணன், எஸ். எஸ் சுப்பிரமணியஐயர், டி. கே. சண்முகம், ப. நீல கண்டன், கே. அருணாசலம், ஆர். திருஞானம் முதலியோர் முக்கிய பங்கு கொண்டனர். இம் மாநாட்டில் தமிழ் எழுத்தாளர் சங்கம் என்ற பெயரில் அமைப்பு ஒன்றை ஏற்படுத்திச் சட்டப்படிப் பதிவு செய்ய வேண்டுமென்றும், அதற்குத் தலைமை அலுவலகம் சென்னை நகரில் இருக்கவேண்டும் என்றும், மாநாட்டுத் தலைவரான திரு. டி. எஸ். சொக்கலிங்கமே முதல் ஆண்டுக்குத் தலைவராக இருக்கவேண் டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. சங்கத் துக்கான சட்டதிட்டங்களை அமைக்க ஒரு குழு வும் நியமிக்கப்பட்டது. அத்துடன் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் சம்பந்தமாக ஆராய்ச்சி செய்து ஓர் அறிக்கை தயாரிக்க மற்றொரு குழு ஏற்படுத்தப்பட்டது. நல்ல ஆங்கிலத் தமிழ் அகராதியும் சொல் பொருள் தமிழ்ப் பேரகராதியும் தயாரிக்க வேண்டும் என்றும், ஆண்டுதோறும் சங்கத்துக்கு அனுப்பப்படும் தமிழ் நூல்களில் சிறந்தவைகளுக்குப் பரி சளிக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சென்னை மாநகரில் நடந்த இரண்டாவது தமிழ் எழுத் தாளர் மாநாட்டிலும் மேற்படி தீர்மானங்கள் உடனடியாகச் செயல்படுத்த வேண்டிய அவசி யம் வற்புறுத்தப்பட்டது.

இரண்டாவது மாநாட்டை முன்னின்று நடத்துவதற்காக, 24-8-46-ல் சென்னை மகா ஜன சபையில் திரு. நாரண-துரைக்கண்ணன் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டங்கூடி நகரத் தமிழ் எழுத்தாளர் சங்கம் என்றொரு அமைப்பை நிறுவிக் கொண்டனர்.

திரு. ரா. நா. வரவேற்புக் கழகத் தலைவரா யிருந்து நடத்திய இம்மாநாடு இராமகிருஷ்ண வித்யாலயத்தின் தலைமையாசிரியராயிருந்த திரு. ம. பெரியசாமித்தூரன் அவர்கள்தலைமை யில் சென்னை நகரில் சிறப்பாக நடைபெற்றது. திருவாளர்கள் அவினாசிலிங்கம் செட்டியார், ப. ஜீவானந்தம், ம. பொ சிவஞானம், சி. என். அண்ணாதுரை போன்ற அரசியல் எழுத்தாளர் கள் வேற்றுமையின்றிக் கலந்து கொண்டனர். இதன் பயனாக இம் மாநாட்டில் நிறைவேற்றப் பட்ட முக்கிய தீர்மானங்களைத் திரு. அவினாசி லிங்கம் செட்டியார் தாம் பின்னர் ஏற்படுத்திய தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் முக்கிய வேலைத் திட்டங்களாக எடுத்துக்கொண்டு செயலாக்கி வருகிறார் என்பதை இங்கு முக்கியமாகக் குறிப் பிட வேண்டும். இம் மாநாட்டில்தான் தமிழ் மொழியைப் போதனா மொழியாக்க வேண்டு மென்று திரு. துரைக்கண்ணனும் மொழிவழி மாநிலம் ஏற்படவேண்டு மென்று திரு. ம. பொ. சி.யும் தீர்மானங் கொண்டுவந்து நிறைவேற்றி னர்.

திரு தூரன் தலைவராகவும் திரு நாரண-துரைக்கண்ணன் பொதுச் செயலாளராகவும் இருந்த இரண்டாவது ஆண்டில்தான் தமிழ் எழுத்தாளர் சங்கம் சில நல்ல காரியங்களை அமைதியாகச் செய்து, கல்வி யமைச்சரைக் கொண்டு தமிழ் வளர்ச்சிக் கழகம் வாயிலாக, கலைக் களஞ்சியம் தயாரிப்புக்கான திட்டங்களை யும் நல்ல நூல்களுக்குப் பரிசளிப்புத் திட்டங் களையும் செய்ய வைத்தது.

மூன்றாவது தமிழ் எழுத்தாளர் மாநாடு திரு. ப. ஜீவானந்தத்தின் அழைப்பின்படி, நாஞ்சில் நாட்டின் தலைநகரான நாகர்கோயிலில் நடை பெற்றது. தலைவர் பதவிக்குத் திருவாளர்கள் வ. ரா., பி. கோதண்டராமன், நாரண-துரைக் கண்ணன், திரிலோக சீதாராம் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன. ஆனால், வ. ரா. அவர்கள், செயலாளராக இருந்து சிறப்பாகச் செயலாற்றிய திரு. நாரண துரைக் கண்ணனை தலைவராக வேண்டுமெனக் கூறி, அவர் சார்பில் தம் பெயரைத் திருப்பி வாங்கிக் கொண்டதுடன், மற்றவர்களையும் திருப்பி வாங்கிக்கொள்ளச் செய்து ஏகமனதாகத் தேர்ந்தெடுக்க வைத்துவிட்டார்.

நாகர்கோயிலில் நடைபெற்ற மூன்றாவது தமிழ் எழுத்தாளர் மாநாடு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததொன்று. பாரத தேசத்துக்கு ஆட்சி சுதந்தரம் கிடைத்ததை அடுத்து, தென் திருவிதாங்கூரிலுள்ள தமிழ்ப் பகுதிகளைத் தமி ழகத்துடன் சேர்த்துவிட வேண்டுமென்று அங்குள்ள 16 லட்சம் தமிழர்கள் நடத்திவந்த உரிமைக்கிளர்ச்சி இம்மாநாட்டு நடவடிக்கை களில் எதிரொலித்தது. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, தென் திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் திரு. நதானியல் பி.ஏ., பி.எல்., சதாவதானி ஷெய்குதம்பிப் பாவ லர், 'தியாகநாடு' தினசரி ஆசிரியர் டி. வி. ஜோசப், டி. வி. ராமசுப்பையர், 'தேவி' ஆசிரி யர் பி. மகாலிங்க முதலியார், திருவிதாங்கூர் தமிழர் சங்கச் செயலாளர் வே. நாராயணன் முதலியோர் வரவேற்புக் குழுவிலிருந்து மாநாட் டைச் சிறப்பாக நடத்தினர். கவிமணி தமது வரவேற்புரையில் தென்குமரி யுள்ளிட்ட நாஞ் சில் நாடு அனைத்தும் தமிழகத்தைச் சேர்ந் தது என்று தக்க வரலாற்றுக் குறிப்புகளுடன் ஆதாரங் காட்டிப் பேசினார். திரு. நாரண-துரைக்கண்ணன் தமது தலைமைப் பேருரை யில் தென் திருவிதாங்கூர் தமிழர் உரிமைக் கிளர்ச்சிக்குத் தமிழ் எழுத்தாளர்கள் தக்க ஆதரவு காட்டி வெற்றிபெறச் செய்வார்கள் என்று உறுதி கூறி, சமுதாயத்தில் எழுத்தா ளர்களுக்குள்ள தகுதியையும் மதிப்பையும் விளக்கமாகச் சொல்லி அவர்களுடைய வாழ்க்கை நலம் பாதுகாக்கப்பட வேண்டிய தன் அவசியத்தை வற்புறுத்தினார். தமிழ்ப் பேரறிஞர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை மாநாட் டைத் தொடங்கி வைத்துச் சிறந்ததொரு சொற்பொழிவு நிகழ்த்தினார். பெரியசாமித் தூரன், கி. வா. ஜகந்நாதன், ம. பொ. சிவ ஞானம், சா. கணேசன், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், டி. கே. ஷண்முகம், அகிலன் முதலியோர் நிகழ்ச்சிகளில் முக்கிய பங்குஎடுத் துக் கொண்டனர். இம் மாநாட்டில் எழுத்தாளர் நலனுக்கான நல்ல பல தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன. இசைவாணர் சி. எஸ். ஜய ராமனின் இசையரங்கும், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி குழுவினரின் நாடகமும் மாநாட்டை இனிதாக்கின. இம் மாநாட்டில் இலக்கியப் படைப்பாளர்கள் எழுப்பிய சங்க நாதம் பட்டம் தாணுப்பிள்ளை மந்திரி சபையை அதிர்ச்சியுறச் செய்தது என்றால் மிகை யாகாது. தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளி லிருந்தும் இலங்கையிலிருந்தும் எழுத்தாளர் பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

1948-49-ம் ஆண்டுகளில் திரு. நாரண-துரைக்கண்ணன் தலைமையின்கீழ் தமிழ் எழுத் தாளர் சங்கம் நல்ல முறையில் இயங்கி வந் தது. இவர் காலத்திலேயே மதுரை, கோவை, திருச்சி, புதுக்கோட்டை, பொள்ளாச்சி முத

லிய மாவட்டங்களில் கிளைச்சங்கங்கள் ஏற்படலாயின. இலங்கையிலும் ஒரு கிளைச்சங்கம் ஏற்படுத்துவதற்கான முயற்சி நடந்து கொண்டிருந்தது. பாரதி பாடல்களைப் பொதுவுடைமையாக்கும் காரியம் வெற்றிபெற்றது. புதுமைப்பித்தன் குடும்பத்துக்கு நிதி திரட்டும் வேலையும் தொடங்கப்பட்டது.

செயலாளர்களான ஆர். திருஞானமும் திரிலோக சீதாராமும் சங்க வேலைகளை ஒழுங்காகச் செய்துவந்தனர். ஆனாலும், திருச்சியிலும் கோவையிலுமாக இருந்துகொண்டிருந்த அவர்களால் இரண்டாம் ஆண்டில் தொடர்ந்து சரிவர ஊக்கமாகக் கவனிக்க முடியவில்லை; ஆதலால் ஒரு தேக்கம் ஏற்பட்டது. அத்துடன், நான்காவது மாநாடு திருச்சியில் நடத்த ஏற்பாடாயிருந்தது. ஆனால், திருச்சி அன்பர்கள் உரிய காலத்தில் மாநாட்டை நடத்த முன் ஏற்பாடு எதுவும் செய்யாமல் காலங் கடத்தி வந்தனர். இந்நிலையில் தாம் மேலும் தலைவராக இருக்க விரும்பாது திரு. துரைக்கண்ணன் தம் பதவியிலிருந்து விலகிக் கொண்டார்.

1950-ம் ஆண்டில் திருவாளர்கள் ரா. நாராயணனும், பி. கோதண்டராமனும் 'ஆர்.வி'யும் சாண்டில்யனும் சேர்ந்து திரு. கல்கியைத் தலைவராக்கிச் சென்னைக் கிளைச்சங்கத்தைமட்டும் இயங்கச்செய்ய முயற்சி எடுத்துக்கொள்ளலாயினர். இவர்கள் தங்களுடைய இம் முயற்சிக்குத் திரு. நாரண-துரைக்கண்ணன் அவர்களின் ஒத்துழைப்பைக் கோரினர். அவர் தலைமைச் சங்கத்தையே எடுத்துக்கொண்டு தேர்தல் நடத்தி திரு. கல்கி தலைமைப் பொறுப் பேற்று நடத்தட்டுமே என்று யோசனை கூறினார். ரா. நா. குழுவினரோ, கல்கியோ, தேர்தல் வாயிலாகப் பொறுப்பைப் பெற என்ன காரணத்தாலோ தயங்கினர். முதலில் சென்னை நகரில்மட்டும் கிளைச்சங்கம் இயங்கட்டும்; பின்னால் தலைமைச் சங்கத்தை நடக்கச் செய்யலாம் என்று சமாதானம் கூறினர். எப்படியோ எழுத்தாளர்கள் அடிக்கடி கூடி அளவளாவுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படட்டும் என்ற கருத்தோடு திரு. நாரண-துரைக்கண்ணன், அவர்கள் விருப்பப்படி நடக்க விட்டுவிட்டார். ஆனாலும் எழுத்தாளர் சிலரிடமிருந்து இவர்கள் முயற்சிக்கு எதிர்ப்பு இருந்தது.

சென்னைக் கிளைச்சங்கத்தை இயங்கச் செய்யலாம் என்று முதலில் கூறிய ரா. நா. குழுவினர் பின் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் என்ற பெயரில் தனிச் சங்கம் ஒன்றை நிறுவலாயினர். அதற்கான சட்டதிட்டங்களை வகுக்க, திருவாளர்கள் ஏ. ஜி. வேங்கடாச்சாரி, நாரண-துரைக்கண்ணன், கி. சந்திரசேகரன் ஆகியோர் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டது. சட்டதிட்டம் தயாரானதும் சங்கம் உடனே பதிவு செய்யப்பட்டது. *1951*-ம் ஆண்டிலிருந்து சட்டரீதியான முறையில் இயங்கத் தொடங்கிய இச் சென்னைச் சங்கம் படிப்படியாக வெளியூர் எழுத்தாளர்களையும் உறுப்பினராக்கிக் கொண்டு வளரலாயிற்று. திரு கல்கி தலைவராக வந்ததும் எழுத்தாளர்களிடையே ஒற்றுமையை நிலவச் செய்ய மிகவும் பாடுபட்டார். அதுவன்றி, தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காகப் பெருந்தொண்டு புரிந்தவர்களுக்குக் கேடயம் அளித்துக் கௌரவம் அளிக்கவேண்டும் என்ற ஒரு நல்ல பழக்கத்தையும் ஏற்படுத்தினார்.

திரு. ஆர். மகாதேவனும் திரு. கல்கி அவர்களைப் பின்பற்றி எல்லா எழுத்தாளர்களுடனும் அன்பாகப் பழகினார். எழுத்தாளர் சங்கத்துக்குக் கட்டிடம் ஒன்று கட்ட அவர் காலத்தில்தான் முயற்சி தொடங்கப்பட்டது. இச் சங்க நடவடிக்கை சென்ற ஆண்டு மலரில் ஒருவாறு விவரிக்கப்பட்டுள்ளது. பம்பாய், கல்கத்தா, இலங்கை முதலிய பகுதிகளில் எழுத்தாளர் சங்கங்கள் ஏற்பட உதவிவந்துள்ள இச்சங்கம் முறையே திருவாளர்கள் கல்கி, கி. சந்திரசேகரன், ம.பொ. சிவஞானம், ஆர். மகாதேவன், ஏ. ஜி. வெங்கடாச்சாரி, வெ. சாமிநாதசர்மா, மீ. ப. சோமசுந்தரம், பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை ஆகியோர் தலைமையில் அமைப்பு முறையில் நன்கு வலுவுற்று இன்று நானூற்றி ஐம்பத்தொன்பது உறுப்பினர்களைத் தன்னகத்தே கொண்டு உயர்ந்து விளங்கி வருகிறது.

வாழ்க தமிழ் எழுத்தாளர் சங்கம் !
வளர்க தமிழ் எழுத்தாளர்கள் !!

எமது சிறந்த வெளியீடுகள்

உலக சரித்திரம்—நேருஜீ
தமிழாக்கம்: ஒ. வீ. அளகேசன் 15-00

சுய சரிதை—நேருஜீ
தமிழாக்கம்: ஜெயா அருணாசலம், B.A. 5-00

ஸ்ரீமத் பகவத்கீதை காந்திஜீ
தமிழாக்கம்: க. சந்தானம் 2-00

காந்திஜி வாழ்க்கையில் ரசமான சம்பவங்கள் ஜி. ராமச்சந்திரன்
தமிழாக்கம்: டி. ஆர். அருணாசலம் 1-50

நான் கண்ட காந்தி
லூயி பிஷர் ,, 2-00

சாகுந்தலம்—மேகதூதன்
க. சந்தானம் 3-00

செல்வமும் சுதந்திரமும் ,, 1-00

பொதுமக்களும் பொருளாதாரமும் ,, 1-25

செங்கோலும் ஜனநாயகமும் ,, 1-00

கம்ப ராமாயணம்
பால, அயோத்யா, ஆரண்ய காண்டங்கள் 3-00

கம்ப ராமாயணம்
கிஷ்கிந்தா-சுந்தர காண்டங்கள்
மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை 3-00

பஞ்சதந்திரப் பாடல் ,, 2-50

நளவெண்பா ,, 3-00

கலிங்கத்துப்பரணி
ஆ. முத்துசிவன் 3-00

அசலும் நகலும் ,, 3-00

சிறுகதைக் களஞ்சியம்
(சாஹித்திய அகாடமி) 4-00
அ. சிதம்பரநாதன் செட்டியார் தொகுத்தது

காமராஜ் (வரலாறு)
டி. எஸ். சொக்கலிங்கம் 2-00

காப்டன் கல்யாணம் வசுமதி ராமசாமி 6-00

மிருணாலவதி (சரித்திர நவீனம்)
கே. எம். முன்ஷி 3-00

டாம் சாயர் மார்க் ட்வெய்ன் 4-00

தத்துவ சாஸ்திரம் புனரமைப்பு
ஜான் ட்யூயி 2-50

எட்கார் அல்லன் போவின் கதைகள்
எட்கார் அல்லன்போ 2-50

பீட்டர் ஜெங்கர் டாம் கால்ட் 2-00

ஜார்ஜ் வாஷிங்டன்
கிளாரா இங்க்ரம் ஜட்ஸன் 2-50

தாமஸ் ஆல்வா எடிஸன்
கிளென்வுட் கிளார்க் 2-00

லெனின் முதல் மாலங்கோவ் வரை
ஹியூலெட்டன் வாட்ஸன் 5-00

அரசின் அடிப்படைத் தத்துவங்கள் தாமஸ் பெயின் 0-62

புக்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை-1

தமிழ் நாட்டில் உள்ள

ஜோசியர்களும், ஜோசியத்தில் நம்பிக்கை உள்ள ஆஸ்திகர்களும், தங்கள் முகவரிகளை எங்கட்கு அனுப்பி வைக்கக் கோருகிறோம்.

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,

புத்தக வியாபாரிகள்,

சென்னை - 17.

எல்லாவிதமான பேப்பர்களும், போர்டுகளும் எம்மிடம் எப்போதும் கிடைக்கும்

ராஜா பேப்பர் மார்ட்,

3, மலையப் பெருமாள் தெரு,

சென்னை - 1

P. P. 3804

இலக்கியங்களின் ஒருமைப்பாடு

[மூலம் : டாக்டர் கே. எம். ஜியார்ஜ்
மொழிபெயர்ப்பு : பகவதி ஜயராமன்]

இந்தியா 15 மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பினும் அது ஒருமைத்தன்மை வாய்ந்த ஒரு நாடாகும். 15 மொழிகளில் எழுதப்பட்டிருப்பினும் இந்திய இலக்கியம் ஒருமையுடைய ஒன்றேயாகும். கதக்கு, கதைகளி, மணிபுரி, பரத நாட்டியம் என்று பல்வேறு வகையாகப் பிரிந்திருப்பினும் இந்தியக் கலை என்பது ஒன்றுனதேயாகும். ஆனல் இந்தப் புறவேற்றுமைகளைக் கடந்து சென்று இந்தியாவின் ஒருமையைக் காண்பது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. மற்றத் துறைகளில் எப்படி இருப்பினும், இலக்கியத் துறையில் இது மிகுதியும் கடினமானதாயிருக்கிறது.

இந்திய இலக்கியம் என்பது இந்தியாவின் பல்வேறு மொழிகளிலும் எழுந்த இலக்கியங்களின் ஒரு கூட்டுத் தொகை என்னலாம். இந்திய அரசியலமைப்பு 14 மொழிகளை இந்நாட்டு மொழிகளாக ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனல் ஏற்றுக்கொள்ளப்படாத மொழிகளில் சிந்தி போன்ற சில வளர்ச்சியுற்ற மொழிகளும் உண்டு. இம்மொழிகளில் பல கி. பி. ஐந்திலிருந்து ஏழு நூற்ருண்டுவரை பழமை வாய்ந்தனவாக உள்ளன. இந்திய இலக்கியத்தை உருவாக்க ஆங்கிலமும் ஓரளவு பயன்பட்டு வந்திருக்கிறது. இவையனைத்தையும் சேர்த்தே நாம் 'இந்திய இலக்கியம்' என்று பேசுகிருேம். ஆனல் இந்திய இலக்கியத்தை உண்மையாக உணர்ந்தவர்களோ, அதன் ஆழத்தையும் அகலத்தையும் கண்டவர்களோ எவருமே இல்லை. நம்மில் சிலர் இமயமலைச் சரிவுகளுக்குப் போயிருக்கலாம்; ஆனல் அவைகளைக் கடந்தவர்கள் யாருமில்லை. அவை மனிதனுக்கு எப்போதும் ஒரு சோதனையாகவே இருந்துவருகின்றன. பூகோளப் புத்தகங்கள் மட்டுமே இமயமலையைப் பற்றி ஒரு முழுமையான கருத்தைத் தெரிவிக்கின்றன. ஆனல் இந்திய இலக்கியத்துக்கோ அவ்வகைத் துணையும் கிடையாது. இந்திய இலக்கியத்தைக் குறித்துத் தெரிந்து கொள்ள ஓர் ஒழுங்கான வரலாறு நமக்கு இல்லை. ஆனல் அவற்றைத் தனித்தனியாகப் பார்த்தால் நமக்கு நல்ல தகவல்கள் கிடைக்கின்றன. இதுவே இந்திய இலக்கியத்தின் துன்பகரமான ஒரு நிலையாகும்.

இந்திய இலக்கியத்தை ஓர் ஒருமையுணர்வுடன் நாம் தெரிந்துகொள்வது எப்படி? ஒரு மாநிலத்தின் இலக்கியத்தை இன்னெரு மாநிலம் உணர்ந்து கொள்ளாமைக்குக் காரணம் என்ன? இந்திய மொழிகளுக்கிடையே உள்ளவிரிந்த வேற்றுமையே ஒன்றை இன்னென்று புரிந்துகொள்ள முடியாமல் தடுக்கிறது. இம்மொழிகள் ஒவ்வொன்றுக்கும் தனக்கென்று ஓர் வரிவடிவும், சொல்தொகுதியும், இலக்கணமும் இருக்கின்றன. இதனல் ஒரு மொழியாளன் மற்ருெரு மொழியின் இலக்கியத்தைக் கற்பது என்பது கடினமாக இருக்கிறது. ஒருவன் தன் வாழ்நாள் முழுவதையும் கழித்தால் தான் வேருெரு மொழியின் இலக்கியத்தை ஓரளவாவது உணரமுடியும். தமிழுக்கும் மலையாளத்துக்கும், மராத்திக்கும் இந்திக்கும், ஒரியாவுக்கும் வங்கத்துக்கும் நெருங்கிய தொடர்புகள் இருந்தாலும், அவை ஒன்றையொன்று சரியாகப் புரிந்து கொள்வது கடினமாயிருக்கிறது. இதுவே நாம் இந்திய இலக்கியத்தைத் தெரிந்து கொள்ள முடியாமைக்கு உள்ள இடையூருகும். இவ்விடையூற்றைப் போக்குவது எப்படி என்பதே இன்று நம்முன் உள்ள பிரச்சினை என்னலாம்.

இந்தியாவின் மொழிச்சிக்கல்களைத் தீர்க்க இந்நாட்டுக்கு ஒரு பொது மொழியை ஏற்படுத்துவதே தக்க வழி என்று சிலர் நினைக்கிருர்கள். அப்படிப்பட்ட ஒரு பொதுமொழி எது என்னும்போது மறுபடியும் சிக்கல் விளைகிறது. இந்தியாவில் பண்டைக் காலத்தில் சமஸ்கிருதம் பொதுமொழியாக இருந்து அதன் ஒருமைப்பாட்டைக் காத்தது என்று சிலர் சொல்கிருர்கள். பிற்காலத்தில் ஆங்கிலம் பொதுமொழியாகி அதன் ஒற்றுமையைப் பேணியது என்று வேறு சிலர் சொல்கிருர்கள். இவ்விரு தரப்பினர் கருத்திலும் உண்மை இருக்கலாம். ஆனல் சமஸ்கிருதம் இன்று ஓர் இறந்த மொழியாகவும், ஆங்கிலம் ஓர் வெளியேற்றப்பட வேண்டிய மொழியாகவும் ஆகிவிட்டன. இந்நிலையில் இந்தியின் உதவியைச் சிலர் நாடுகின்றனர். ஆனல் இந்தியோ சரியாக வளர்ச்சியுருத ஒரு மொழியாக இருந்து வருகிறது. இத்தகைய சூழலில் பிரச்சினையைத் தீர்க்க ஒரே ஒரு வழிதான் உண்டு. அவ்வழியே இந்திய மொழிகளுக்குள்ளேயே ஓர் புரிந்துணர்வை (Understanding) வளர்ப்பது என்பதாகும். இதற்கு ஒரு மொழியில் உள்ள சீரிய இலக்கியங்களை இன்னெரு மொழியில் பெயர்ப்பதே முதல் படியாகும்.

ஒரு மொழியில் உள்ள சீர்மைகளை இன்னெரு மொழிக்குக் கொண்டுவருவது அவ்வளவு எளிதான செயலல்ல. நம் நாட்டில் 15 முக்கிய மொழிகள் இருந்தால், அப்பதினைந்து மொழி

களுக்கும் 210 மொழிபெயர்ப்பாளர்கள் தேவைப்படுவர். என்றாலும் இத்தனை மொழிபெயர்ப்பாளர்களையும் அமர்த்தி ஒரு மொழியில் உள்ள செல்வத்தை இன்னொரு மொழிக்குக் கொண்டு வந்தால்தான் இந்தியாவின் ஒருமைப்பாடு நிலைக்கும். அரசியல் ஒற்றுமை என்பது ஒரு குறிப்பிட்ட காலம்வரைதான் நிற்கும். பண்பாட்டு ஒற்றுமையோ என்றுமே நின்று ஓர் சக்தியை வழங்கிக்கொண்டிருக்கும். உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட ஒற்றுமையும், பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட ஒற்றுமையுமே இந்தியாவைக் காக்கவல்லனவாகும். இவ்வொற்றுமைகளுக்கும் இலக்கியப் பரிமாற்றங்கள் ஆக்கமளிப்பவை என்னலாம். முதலில் நாம் நம்மோடு கூடப்பிறந்த மொழிகளை மதிக்கத் துவங்கவேண்டும். ஒரு மாநிலத்தார் தம்முடைய இலக்கியங்களில் உள்ள பெருமையையே சிறக்கப் பேசிவிட்டு மற்ற மொழிகளின் இலக்கியங்களில் உள்ள மேன்மையை உணராவிட்டால், மக்களுக்குத் துன்பமே விளையும்.

இந்தியாவை மொழியின் அடிப்படையில் பிரித்ததைக் குறித்துப் பல்வேறு கருத்துக்கள் இன்றும் நிலவிவருகின்றன. இப்பிரிவினை நியாயமானது என்று சிலரும், இது நாட்டைப் பிளவுபடுத்திவிடும் என்று சிலருமாகக் கூறி வருகின்றனர். இவ்விரு சாராரின் கருத்துக்களிலும் உண்மை இருந்தாலும், இன்று நாம் உடனடியாகச் செய்ய வேண்டியது இந்தியாவின் பண்பாட்டு ஒற்றுமையை வளர்க்க வேண்டியதேயாகும். பண்பாட்டு ஒற்றுமையைக் கோலாத அரசியல் ஒற்றுமை நீண்ட காலம் தாங்காது. உணர்ச்சி மயமான இணைவும், பண்பாட்டு மயமான சேர்க்கையும் இன்று நமக்கு அவசியம் தேவைப்படும் கூறுகளாகும். இக்கூறுகளை உண்டாக்கவல்லன இலக்கியங்களே என்பது மறுக்கமுடியாத உண்மை. அவ்விலக்கியங்கள் ஒரு மாநிலத்திற்கு மறுமாநிலம் தொடர்புள்ளவையாக வளர்ந்தால், இந்திய நிலப்பரப்பு அமைதி மிகுந்த ஒரு பகுதியாக ஓங்கமுடியும். அதாவது ஒரு மாநிலத்தின் இலக்கியப் படைப்புகளை மறு மாநிலம் நன்கு புரிந்து கொண்டு பணியாற்ற அரசாங்கமும் மக்களும் வழிவகுக்க வேண்டும். இத்தன்மை இந்திய இலக்கியத்தைப் பொதுவாக ஓம்புவதோடு தனிப்பட்ட இலக்கியங்களையும் சீரிய விதத்தில் மலரச் செய்யும்.

இலக்கிய-கலைப் பரிமாற்றங்கள் தழைப்பதற்கு இடையூறுகள் நிறைய ஏற்படலாம். ஆனால் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் நாம் காரியத்தைத் துவக்கவேண்டும். நம் பக்கத்து மொழிகள், இலக்கியங்களைக் குறித்துச் சிறிதும் தெரிந்துகொள்ளாமல் நம் இலக்கியத்துக்குமட்டும் தொண்டுபுரிவது என்பது இயலாத காரியம். மற்ற மொழிகளில் உள்ள சிறந்த எழுத்தாளர்களையும், சிறந்த நூல்களையும் எப்பாடாவது பட்டுத் தெரிந்து கொண்டு அவற்றைப் போற்ற நாம் முனைய வேண்டும். இன்னொன்றைத் தெரிந்துகொள்ளும்போது அது நன்றாக இருந்தால் போற்றுவது என்கிற பண்பு மனிதர்களுக்குள்ளே ஒரு சமுகப் பான்மையை வளர்க்கும். இச்சமுகப் பான்மை மனிதனின் மேலான வாழ்வுக்கு இன்றியமையாததாகும். பொது இலக்கிய அரங்குகளும், கருத்தரங்குகளும் இவ்வகையில் நமக்கு மிகுதியும் உதவக்கூடியன. ஒவ்வொரு வட்டார மொழி மாநாடும் இது போன்ற அரங்குகளை ஏற்படுத்திக் கொடுத்தால் அம்மொழி எழுத்தாளர்கள் மன விரிவு பெறமுடியும்.

அனைத்திந்திய எழுத்தாளர் மாநாடுகளும், கவிஞர்-கட்டுரையாளர்-கதையினர் (P.E.N.) மாநாடுகளும் உலக எழுத்தாளர்களுக்கிடையே ஓர் ஒற்றுமையை வளர்த்துவருகின்றன. இவ்வொற்றுமை இலக்கியங்களின் ஒருமைப்பாட்டுக்கு வழிவகுக்கவல்லது என்று சாதாரணமாகப் புகலலாம். இவ்வொருமைப்பாடுகளை மொழிபெயர்ப்புக்கள் மிகுதியாகப் பேணக்கூடியன என்ன வேண்டும். சிறந்த இலக்கியங்கள் எதுவும் அவ்வப்போது ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்குச் சென்றவண்ணம் இருக்கவேண்டும். இலக்கியக் கழகங்களும் (Sahithya Akademie), புத்தகப் பொறுப்பகங்களும் (Book Trusts) இவ்வகையில் நன்கு உழைத்து வருகின்றன. ஆனால் காலத்தின் தேவையைப் பார்க்கும்போது, இவையெல்லாம் போதுமானவை அல்ல என்றே தோன்றுகிறது. மேலும் மேலும் மிகுதியான மொழிபெயர்ப்பாளர்களை நம் நாடு உண்டுபண்ணிக்கொண்டேயிருக்க வேண்டும். அம்மொழிபெயர்ப்பாளர்கள் நல்ல புலமையும், இயற்கைத் திறனும், எளிய மனப்போக்கும் கொண்டவர்களாக விளங்கவேண்டும். அப்போது அவர்கள் புரியும் தொண்டு தகுந்த பயனுடையதாக இருக்கும். இலக்கியக் கருவூலங்களின் இடைப்பாய்ச்சல் (Inter-flow) ஒரு நாட்டின் சிந்தனையை வளப்படுத்துவதாகும். காவல் துறையோ, படைவலிமையோ ஒரு நிலப்பரப்பை இணைத்துவிட முடியாது; எழுத்தாளர்களும், அவர்கள் எழுத்தைச் சுவைப்பவர்களுமே ஒரு நாட்டை ஒன்றுபடுத்தக் கூடியவர்களாவர். எழுத்தாளத் தோழர்களே! இவ்வகையில் பணிபுரிய முந்துவோம் வாரீர்!!

தென் மொழிகள் புத்தக டிரஸ்டு

3, வீட் கிராப்ட் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை - 31.

அன்புமிக்க எழுத்தாளர்களே,

தென்மொழிப் புத்தக டிரஸ்ட் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு தென்னிந்திய மொழிகளிலும் நூல்களை வெளியிட உதவுவதோடு, நூல் வெளியீட்டுத் துறையில் ஈடுபட்டுள்ள அனைவரைப் பற்றிய செய்திகளையும் சேகரித்துத் தொகுக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளது. இதற்கென, செய்திப் பணிமனை (Information Bureau) ஒன்றையும் துவக்கத் திட்டமிட்டுள்ளது.

ஏற்கெனவே அனுப்பாத எழுத்தாள நண்பர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை எழுதி 31-10-60க்குள் அனுப்பக் கோருகிறோம்.

இணைப்பு அலுவலர்

எழுத்தாளர்

1. எழுத்தாளர் பெயர்.
2. பிறந்த தேதி.
3. பிறந்தவூர்.
4. நிலையான முழு முகவரி.
5. எம்மொழிகளில் நல்ல தேர்ச்சியுண்டு.
6. தென்னிந்திய அல்லது பிறமொழிகளில் இதுவரை உங்களால் எழுதி வெளியிடப்பட்ட ஒவ்வொரு நூலின் விவரம்: நூலின் பெயர், பொருள், மொழி, நூல் வெளியிடப்பட்ட ஆண்டு, நூலின் பக்கங்கள், விலை.

A உங்களுடைய நூல்களில் எவையேனும் பிறமொழிகளில் பெயர்க்கப்பட்டிருந்தால், அவற்றின் பெயர், எம்மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன, வெளியிடப்பட்ட ஆண்டு.

7. சிறுகதைகள், நவீனம், தத்துவம், விஞ்ஞானம், குழந்தை நூல்கள் முதலியவற்றில் எவ்வகை நூல்கள் எழுத உங்களுக்குப் பிடித்தம் அதிகம்.
8. நீங்கள் எந்நூல்களையேனும் மொழிபெயர்த்திருந்தால், மொழி, நூலின் தன்மை முதலிய விவரங்கள்.
9. புத்தக வடிவில் வெளியிடுவதற்குத் தயாராகவுள்ள கையெழுத்துப் பிரதிகள் முதலியன இருப்பின் முழு விவரம்.
10. உபயோகமுள்ள பிற விவரங்கள் இருப்பின் குறிப்பிடலாம்.

குறிப்பு:—தேவையாயின் அதிகப்படியான தாள், அல்லது தாள்களைப் பயன்படுத்தி விவரங்கள் கொடுக்கலாம்.

தரும் ஏடு! கலை கதை கவிதை கற்பனை கருத்து

செப்டம்பர் 15 முதல் வெளிவருகிறது!

திருவள்ளுவர்

(மாதம் இருமுறை)

கலை ஏடு! கருத்துக்களின் வீடு! கற்பனைக்காடு!
காவியத் தேன்கூடு!
திருக்குறள் எழிலோவியங்கள்
விழிகளுக்கு விருந்தளிக்கும்!
திருக்குறள் எண்ண ஓவியங்கள்!
சிந்தனைக்குச் செந்தமிழ் மழை பொழியும்!
சினிமா உலகக் கவர்ச்சிப்படங்கள்!
சினிமா உலகைப் பற்றி இனி அறிந்தே தீர
வேண்டிய மர்மச் செய்திகள்!
திரைப்படங்கள் பற்றிப் பொதுமக்கள் வாயால்
புதுவகை மதிப்புரை!
சங்க இலக்கியச் சோலையில் கண்ட புத்தம்
புதிய கனிகள்!
வீட்டிலும், நாட்டிலும், உலகிலும் வீசும்
அரசியல் அலைகள்!
குழந்தைகளைக் குதூகலத்தால் குதிக்க வைக்க
மூவண்ணங்களில் படத்தொடர்கதை
குடும்பப் பெண்களுக்கு அறிவும் இன்பமும்
அளிக்கும் உணவுகள், இவை கொண்டு

அறம், பொருள், இன்பம்
ஆகிய தமிழ் நெறி பரப்
பும தலைசிறந்த,
கலை நிறைந்த ஏடு.

நாள் இதழ் அளவு
விழிநிறைந்த அமைப்பு
தமிழகத்திலேயே
மூவண்ணத்தில் அச்சாகும்
இதழ் இது ஒன்றே

பிரதி ஒன்றிற்கு 50 புதிய காசுகள் கட்டக்கூடிய
ஏஜண்டுகள் விண்ணப்பிக்கவும்.
ஒரு வருட சந்தா ரூ 3.50
அரை வருட சந்தா கிடையாது

'திருவள்ளுவர்' 131, தாயார்சாகிபு தெரு, சென்னை 2.

சினிமா நாடகம் அரசியல் குறள் தரும் ஏடு. கலை கதை கவிதை கற்பனை கருத்து

கலை கதை கவிதை கற்பனை கருத்து சினிமா நாடகம் அரசியல் குறள்

சினிமா நாடகம் அரசியல் குறள் தரும் ஏடு.

விலை 13 காசுகள்

பன்மொழிப் புலவர்

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

[கவிஞர் புத்தனேரி ரா. சுப்பிரமணியம்]

கல்வி நிலையங்களில் தமிழ் அறிஞர்கள் ஏனைய அறிஞர்களுக்கு நிகராகவும் உயர்வாகவும் பீடுநடைபோடும் சிறப்பை நாம் இன்று கண்டு மகிழ்கிறோம். நமது நாடு விடுதலை பெற்றதன் விளைவாகத் தமிழ் மொழிக்கும் தமிழ் வழிக்கும் ஆக்கமும் ஊக்கமும் ஓங்கி வருகின்றன. இதன் பயனாகத்தான் தமிழ் அறிஞர்களின் நிலையும் உயர்வடைந்து வருகின்றது.

ஆனால், ஆழ்ந்த புலமை பெற்ற தமிழ் அறிஞர்களை ஏனைய அறிஞர்கள்-ஏன், மாணவமணிகள்கூட - ஏதோ "கிள்ளுக் கீரை" என்று எள்ளி நகைத்த காலம் ஒன்று இருந்தது என்பதை நாம் மறந்துவிட முடியாது. ஆங்கில அறிவு பெற்ற செருக்கிலே ஏனைய அறிஞர்கள் "உயர்வு மனப்பான்மை" கொண்டிருந்ததுபோலவே, ஆங்கிலம் அறியாததைக் குறையாக எண்ணித் தமிழ்ப் புலவர்கள் "தாழ்வு மனப்பான்மை" கொண்டிருந்த காலம் அது. உயர்வும் தாழ்வும் ஊதியத்தை வைத்தே மதிப்பிடப்பட்டன. அந்தக் காலத்தில் '*ஊதியம்*' என்பது பிற மொழிகளுக்கென்றால் பெருகும்! தமிழுக்கு என்றால் சுருங்கும்!!

அப்படிப்பட்ட இருட் காலத்தில் ஆங்கிலத்தில் பட்டம் ஏந்தித் தமிழிலும் புலமை வாய்ந்து, தமிழுக்குத் தொண்டுசெய்ய முன்வந்தார்கள் புலமை வீரர்கள் சிலர். இவர்களுடைய பெருமையாலும் திறமையாலும் தமிழ்ப் புலவர்களின் தன்மதிப்பு உயர்ந்தது. ஆங்கிலப் புலமையை அரணாகக் கொண்ட அருந்தமிழ்க் காவலர்களாக இவர்கள் வீறு கொண்டார்கள். இவ்வாறு தமிழ் காக்க முன்வந்த பேரறிஞர்களில் ஒருவரே திரு. ***தென்பட்டினம் பொ. மீனாட்சிசுந்தரனார்*** அவர்கள்.

மணி விழாக் காணும் பருவத்தில் உள்ள இப்பேரறிஞர் ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளாகத் தமிழ் இலக்கியப் பணியில் திளைத்து வருகிறார்.

1901-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ஆம் நாள் திரு. ***பொன்னுசாமி கிராமணி***யாருக்கும் திருமதி **ருக்மணி** அம்மையாருக்கும் புதல்வராகத் தோன்றினார் திரு. மீனாட்சிசுந்தரம்.

நாடகக் கலை வீரர் திரு. ***தெ. பொ. கிருஷ்ணசாமிப் பாவலர்*** அவர்களின் அருமைத் தம்பியே திரு. மீனாட்சிசுந்தரம் என்பது குறிப்பிடத்தக்கது. பாவலருக்கு இளையார்; அறிவிலும் துணிவிலும் அவருக்குச் சற்றும் இளையார் நம் மீனாட்சிசுந்தரம்! தமையனாரின் தூண்டுதலினால்தான் தமிழில் பெரும்புலமை பெறவேண்டுமென்ற ஆவலும், கீழ்த்திசை மொழிநூல்கள் அனைத்தையுங்கற்றுத் தேர்ச்சி பெறவேண்டுமென்ற துடிப்பும் திரு. மீனாட்சிசுந்தரத்திடம் வளர்ந்தன.

பள்ளிப் பருவத்தில் தம் தந்தையாரின் ஆணைக்குப் பயந்து ஆங்கிலப் புத்தகம் படிப்பதுபோல் பாவனை செய்துகொண்டே தமது மடியில் ஒரு தமிழ் நூலை வைத்துக் கள்ளத்தனமாகப் படித்து மகிழ்வது இவருடைய வழக்கம் என்று இவரோடு பழகிய நண்பர்கள் சொல்வார்கள். தமிழிலே அவ்வளவு ஆர்வம் இவருக்கு!

எனவேதான் இவர் பி.ஏ. பட்டம் பெறுவதற்குள்ளாகவே ஏறக்குறைய எல்லாத் தமிழ் இலக்கியங்களையும் படித்து முடித்துவிட்டார். 1923-ஆம் ஆண்டுக்குள் - அதாவது தமது 22-ஆம் வயதிற்குள்-பி.ஏ., பி.எல்., எம்.ஏ. என்னும் பட்டங்களோடு பொருளாதாரக் கலையன்பர் (Diploma in Economics) என்னும் பெருமையும் பெற்றுவிட்டார் திரு. மீனாட்சிசுந்தரம்.

1923-ல் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகத் தம்மைப் பதிவு செய்துகொண்டார். வக்கீல் தொழிலில் ஏறத்தாழ இருபது ஆண்டுகள் திறமையோடு பணியாற்றினார்.

புலமைக் களஞ்சியங்களாக விளங்கிய கோ. வடிவேலு செட்டியார், இராமலிங்கத் தம்பிரான், வைணவம் திருப்புறம்பயம் இராமசாமி நாயுடு ஆகியோரிடம் முறையாகப் பாடங் கேட்டுத் தமிழறிவையும் சமய நூற் புலமையையும் வளர்த்துக்கொண்டார் திரு. தெ. பொ. மீ.

அறிவின் ஆழம் எவ்வளவாயினும் அதன் அருமையைப் பட்டம் பெற்றாலன்றி எவரும் மதிக்கமாட்டார்கள் என்ற உண்மையை உணர்ந்த திரு. மீனாட்சிசுந்தரம் 1932-ல் தமிழ் வித்துவான் பரீட்சையில் தேறினார்—சாதாரணமாக அல்ல! மாகாணத்திலேயே முதல்வராக வெற்றி பெற்றுவிட்டார். பின்னர் 1938-ம் ஆண்டில் எம்.ஓ.எல். பட்டமும் பெற்றார். தமிழில் இனி இவர் பெறவேண்டிய பட்டமோ, கற்கவேண்டிய பழைய இலக்கியமோ எதுவும் இல்லை என்று கூறும் அளவிற்குப் பேரறிஞர் ஆனார்.

ஆங்கிலத்தையும் தமிழையும் வயிறார அருந்தியும் தீராத இவரது அறிவுப் பசி என்னும் தீ ஏனைய மொழிகளையும் சுவைப்பதற்கு மூண்டெழுந்தது. அண்டை மொழிகளையும் அந்நிய மொழிகளையும் ஆர்வத்தோடு கற்றார். ஜெர்மனி, பிரஞ்சு ஆகிய மொழிகளில் நற்சான்று இதழ்கள் (Diploma) வாங்கியுள்ளார். கீழ்த்திசை மொழிகள், மேனாட்டு மொழிகள் என்ற வரிசையில் ஏறக்குறையப் பன்னிரு மொழிகளில் திரு. மீனாட்சிசுந்தரம் வல்லவரானார். '*பன்மொழிப் புலவர்*' என்று புகழுதற்குரிய எல்லாத் தகுதிகளோடும் விளங்குகிறார்.

மொழி, சமயம், நாடு ஆகிய எல்லாத் துறைகளிலும் மக்களுக்காகப் பணியாற்றும் பொதுநலத் தொண்டர் திரு. தெ. பொ. மீ. இவரது தொண்டு பல முனைகளில் ஒளிபரப்பி வந்திருக்கின்றது. சென்னை மாநகர் மன்ற உறுப்பினர், சிறப்பு உறுப்பினர் (Alderman), அலுமினியத் தொழிற்சங்கத் தலைவர், சென்னை வேதாந்த சங்கத் தலைவர், சென்னைத் தமிழ்ச் சங்கச் செயலாளர், இப்படி இன்னும் எத்தனையோ பொது அமைப்புகளில் இவரது ஆற்றலும் அறிவும் பயன்பட்டு வந்திருக்கின்றன.

பழுத்த காங்கிரஸ்வாதியாக-காந்தீயவாதியாகத் திரு. மீனாட்சிசுந்தரனார் உழைத்த பெருமையை அரசியல் உலகம் அறியும். காந்தியடிகளின் கட்டளைப்படி 1941-ல் நிகழ்ந்த தனிப்பட்டோர் சத்தியாக்கிரகத்தில் சிறை சென்று தியாகத்தழும்பு பெற்றுள்ளார்:

வங்கம் தந்த சிங்கம் நேதாஜி திரு. சுபாஷ் சந்திரபோஸ் 1939-ல் சென்னைக்கு வந்து சிங்கநாதம் செய்தது பலருக்கு நினைவிருக்கும். அவ்வீரரை வரவேற்கச் சென்னை மக்கள் அமைத்த குழுவின் தலைவராக விளங்கியவர் நம் தெ. பொ. மீ. அவர்களே.

கல்விப் பணிகளுக்கே தம்மைக் காணிக்கையாக்கிக் கொண்டுள்ளவர் திரு. மீனாட்சிசுந்தரனார். சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளி, கல்யாணம் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, கலவல கண்ணன் செட்டியார் பெண் பள்ளி, மாண்டிசோரிப் பள்ளி முதலான பல கல்வி நிலையங்களைப் பொறுப்புடன் கண்காணித்து வளர்க்கும் புரவலர்களில் இவர் முக்கியமானவர்.

சென்னை, அண்ணாமலை, திருவிதாங்கூர், இலங்கை ஆகிய பல்கலைக் கழகங்களின் தேர்வுக் குழு- ஆய்வுக் குழு போன்றவற்றில் திரு. மீனாட்சிசுந்தரனார் அங்கம் வகித்து ஆய்வுரை கூறிவருகிறார்.

1944 முதல் 1946 வரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவர்; பின்னர் சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர். இத்தகைய பொறுப்புக்களை ஏற்ற திரு. மீனாட்சிசுந்தரனார் மீண்டும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற் சேர்ந்து தமிழ்ப் பணியாற்றி வருகிறார்.

புலமை எய்திய நாள் முதலாக இவர் தலைமை தாங்கிச் சிறப்பித்த மாநாடுகளும், இலக்கிய விழாக்களும், அரசியல் மேடைகளும் ஏராளம், ஏராளம்!

இவர் முக்கிய பங்குகொண்ட பெருவிழாக்களில், நற்றிணை மாநாடு, சைவத் தொண்டர் மாநாடு, அகில இந்திய சமய தத்துவ மாநாடு, அகில இந்திய வரலாற்று மாநாடு, அகில இந்தியக் கல்வி மாநாடு, திருக்குறள் மாநாடுகள், கம்பர் மாநாடுகள், தமிழ்த் திருவிழாக்கள், தமிழ் இசை விழாக்கள் முதலானவை குறிப்பிடத்தக்கவை.

பொது மேடைகளில் திரு. தெ. பொ. மீ. அவர்களின் சொற்பொழிவு "கல்லார்க்கும் கற்றார்க்கும் களிப்பருளும் களிப்பாக" இருக்கும்! வெடிபடக் கிளம்பும் இவரது குரலில் நெளிவிருக்கும்; சுழிவிருக்கும்; அழுத்தம் இருக்கும்; மென்மை இருக்கும்; வேடிக்கையும் கூத்தும் விரவிக் கலந்திருக்கும்! நெப்போலியனைப்போல நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு அங்கமெல்லாம் அசைந்தாட அருமையான கருத்துக்களை அருவிபோலப் பொழிவார்.

நக்கீரனைப் போன்ற துணிவுள்ளவர் திரு. மீனாட்சிசுந்தரனார். தவறு கண்டால் தயங்கா

டில் 'அடித்துப் பேசும்' திராணி உடையவர்.

கல்லூரிகளில் தமிழைப் போதனு மொழியாக்க வழிவகுப்பதற்கு அறிவுக் கலைப்புலவர் திரு. ஜி. ஆர். தாமோதரன் அவர்கள் தலைமையில் இயங்கும் குழுவில் திரு. தெ. பொ. மீ. அவர்களும் ஓர் உறுப்பினராகப் பணியாற்றுகிறார்.

"காட்சிக்கு எளியர்; கடுஞ்சொல் அறியார்!" என்ற பண்புக்கு உரியவராக அறிவால் உயர்ந்து அடக்கமாக வாழ்கின்ற பேரறிஞர் திரு. தெ. பொ. மீ. இவரோடு பேசிப் பழகுவதிலே ஒரு தனி மகிழ்ச்சி விளையும். அன்பால் இழுத்து அறிவால் பிணைத்துவிடுவார்.

பல மொழிகள் கற்றுப் பெரும் புலமை படைத்த அறிவாளராகவும் பேச்சாளராகவும் விளங்கும் திரு. மீனுட்சிசுந்தரனுர் இலக்கிய விருந்து படைக்கும் எழுத்தாளராகவும் உயர வேண்டுமென்று அன்பர்கள் பலர் விரும்பினர். அதன் பயனுகவே **கால்டுவெல் ஒப்பிலக்கணம் (மொழிபெயர்ப்பு நூல்), வள்ளுவரும் மகளிரும், சூளாமணி, மானத சாத்திரம், அன்பு முடி, குலசேகரர், நற்றிணை நாடகங்கள், சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும், பிறந்தது எப்படியோ?, வள்ளுவர் கண்ட நாடும் காமமும், நீங்களும் சுவையுங்கள்!** முதலான நூல்கள் இலக்கிய மலர்களாகப் பூத்து மணம் பரப்புகின்றன. இவருடைய ஆழ்ந்தகன்ற நுண்ணறிவுக்கும் திறமைக்கும் இவையெல்லாம் நற்சான்றுகள். இவரது பன்மொழிப் புலமையின் சின்னங்களாக இன்னும் பல அறிவு நூல்களைத் தரவேண்டுமென்று தமிழ் உலகம் எதிர்பார்க்கின்றது.

தமிழ் மொழியையும் தமிழ் வழியையும் பாதுகாத்துவரும் முத்தமிழ்ப் பெரும்புலவரான திரு. தெ. பொ. மீ. அவர்களுக்குத் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஒரு கேடயம் அளித்துப் பாராட்டுவது மிகவும் பொருத்தமாகும். கேடெலாம் தாங்கும் கேடயம் ஏந்தி நாடெலாம் புகழ இவரது நற்பணி ஓங்கட்டும்!

* * *

Kindliness is a Tradition

In

SUNDARAM MOTORS PRIVATE LIMITED

Madras — Bangalore — Secunderabad

SRI GANESHRAM'S
777
BRAND
FOOD PRODUCTS MADRAS 1 S. INDIA

A Revolution in the Kitchen !!!
Prepare many dishes in 3 minutes with our
Dhideer Food Products

*

No grinding, No waiting, No Fermentation
Yet with original taste
Dhideer Idli, Bonda, Sambar Etc.

*

Maltex—Baby Food
Maltine Milk Food
Barcotine Food Beverage

*

Phone: 5365

SRI GANESH RAM & CO.
MADRAS-1.

சென்ற எட்டு ஆண்டுகளாகச்
சிறந்த நாடகங்களைத்
தயாரித்துவரும் கலைக்கூடம்

சேவா ஸ்டேஜ்

தமிழ் எழுத்தாளர் சங்க எட்டாவது மகாநாட்டிற்குத்
தன் இதயங் கனிந்த வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கிறது.

ஆராய்ச்சி வல்லுநர்

திரு. கு. கோதண்டபாணி பிள்ளை

[சிறுவை மோகனசுந்தரன்]

கோதண்ட நக்கீரர் எனத் தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களால் போற்றிப்புகழப் பட்ட திறனாய்வாளர் திரு. கு. கோதண்ட பாணி பிள்ளை அவர்கள், திரு. குப்புசாமிப் பிள்ளை எனும் நல்லாருக்கு 29-10-1896-ல் மகனாகப் பிறந்தார்கள். இவர் 'கலைவல் இளை ஞர்' (Bachelor of Arts) தேர்வில் தேர்வு பெற்றார். இவர் நேர்முகத் தேர்வில் தொடக்கத்திலேயே தாசில் துணைவர் பணி யில் நியமிக்கப்பட்டார். பின்னர் அதனின் றும் உயர்ந்து, துணைத் தண்டல் தலைவர் (Deputy Collector) பதவியில் பல மாவட்டங் களில் பணியாற்றினார். இவர் தனது நேர்மை யாலும் அறிவுத் திறமையாலும் மாவட்டத் தண்டல் தலைவர் (Collector) பதவிக்கு உயர்த் தப் பட்டார். அப்பொழுது இந்திய அரசியலார் இவரது பணியை விரும்பிப் பெற்று அயல்நாடு செல்வோருக்கு அதிபர் (Controller of-Emigration) எனும் பதவியில் அமர்த்தினர். அப்பதவியை மிக்க திறம்பட ஆற்றி ஓய்வு பெற்றார்.

சிறந்த அறிவு நுட்பம் வாய்க்கப் பெற்ற கோதண்டபாணியார் ஓய்வு பெற்றாலும் இந்திய அரசியலார் இவரை விட்டுவிடவில்லை. இவரது ஆற்றலை மேலும் பயன்படுத்திக் கொள்ள விழைந்து, இரயில் துறைப் பணி யாளர் தேர்வுக் குழுவின் உறுப்பினராகவும் (Member, Railway Service Commission) நியமிக்கப்பட்டார்.

இவரது பணியையும் திறனையும் பண்பை யும் பாராட்டி அக்கால அரசியலார் "இராவ் சாகெப்" என்னும் பட்டம் வழங்கி மகிழ்ந்த னர்.

இப்பெரியார் திரு. பின்னத்தூர் நாராயண சாமி ஐயர் அவர்கள்மாட்டும் திரு. பண்டித சௌரிராயன் அவர்களிடமும் தமிழ் பயின்றார் கள். இவர் அரசியல் பணியில் அமர்ந்திருந்த காலத்தும் தமிழ் நூல்களை ஆராய்வதிலும், தமிழ் நூல்கள் எழுதுவதிலும் தம் ஓய்வு நேரங் களைப் பயன்படுத்தினார்.

இவர் எழுதிய நூல்கள் : 1. கதைக் கொத்து (சிறுகதை) — இது மதுரை இராமநாதபுரம் முதலிய மாவட்டங்களில் சிறுவர்களுக்குப் பாடபுத்தகமாகப் பயன்படுகிறது. 2. (அ) மங்கையர்க்கரசி, (ஆ) பங்கயச் செல்வி ஆகிய இரு நாடக நூல்கள் — இவை சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் கல்லூரி வகுப்பு மாணவர்களுக்குப் பாட புத்தகங் களாகச் சில ஆண்டுகள் வைக்கப் பெற்றன. 3. (அ) நெடுநல்வாடைப் பொருள் நலன், (ஆ) நெடுநல்வாடைப் பாநலன், (இ) முதற் குறள் உவமை ஆகிய மூன்று திறனாய்வு நூல் கள் வெளிவந்தன. இவைகளில் முதல் இரண்டு நூல்கள் கல்லூரி மாணவர்களுக்குப் பாடமாகச் சில ஆண்டுகள் அமைந்தன. 4. ஈரடி இருநூறு எனும் சிறந்த செய்யுள் நூல் பெரும் பேராசிரியர் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் முன்னுரையுடன் வெளி யிடப்பட்டது. 5. தரைச் செலவு (செய்யுள் நூல்). இஃது இன்னும் வெளியிடப்படவில்லை. 6. பழந்தமிழ் இசை. இது இசைக் கலையைப் பற்றி இதுவரை வெளிவராத மிக அரிய நுட்பங் களை விளக்கிக் கூறும் மிகச் சிறந்த ஆராய்ச்சி நூல். 7. வடவேங்கடம் (இது அச்சில் உள்ளது).

இத்தகு திறமை வாய்ந்த நூலாசிரியர், பாடலாசிரியர், நாடக ஆசிரியர், திறனாய் வாளர், ஆராய்ச்சி நூல் வல்லுநர் ஆகிய போறிஞரைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தார் போற்றுவது தமிழைப் போற்றுவது, தமிழ்ப் பண்பைப் போற்றுவது ஆகும். இவர் பழமை யும் புதுமையும் தழுவிய அரிய எழுத்தாளர். இவரது கருத்துக்களையும் எழுத்து நடையை யும் திறனாய்வு முறைகளையும் முடிவுகளையும் புலவர் ஏறு வரதநஞ்சையர், பண்டிதமணி மு. கதிரேசனார், டாக்டர் பெருநாவலர் எஸ். எஸ். பாரதியார், பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், தமிழ்த் தென்றல் திரு. வி. க, திருவாவடுதுறை ஆதீன வித்து வான் ச. தண்டபாணி தேசிகர், டாக்டர் மு. வரதராசனார், வெ. சாமிநாத சர்மா ஆகிய அறிஞர் பெருமக்கள் போற்றிப் புகழ்ந்து பல குறிப்புகள் எழுதியுள்ளனர். அவைகளை இங்கு விரிக்கின் பெருகும்.

நமது பாராட்டுக்கு உரிய திரு. கு. கோதண்டபாணி பிள்ளை அவர்களைப் பற்றி அவரே இயற்றிய "நெடுநல்வாடை பாநலன்" எனும் நூலில், தமிழ்த் தென்றல் திரு. வி. க.

அவர்கள் குறிப்பிடும் சில வரிகளைக் கூறி அமைவேனாக.

"தோழர் கோதண்டபாணி பிள்ளை நல்ல கலைஞர்; மேல்நாட்டுக் கீழ் நாட்டுக் கலைகளை ஆய்ந்தவர்; தமிழ் நாட்டுப் பழங்கலைகளில் கை போய வர்."......

"கோதண்ட நக்கீரர், நெடுநல் வாடைச் சுரங்கத்துக்கு மின் விளக்கு களிட்டார்; விளக்கு மாலைகள் நிரைத்தார்; நெடிய தூக்குகளெடுத் தார்; வான் படிகளமைத்தார்......

"செவ்விய உரைநடை - ஏற்று (ரிஷபத்தின்) நடை ஆசிரியர்க் கென்று அமைந்தது. அஃது இயற்கை வனப்புடையது; சிறு சிறு தொடர்களாலாயது; நெஞ்சில் பசுமரத்தாணிபோல் படிந்து ஓவிய மாவது; அறிவைவிளக்கி, உணர்வை எழுப்பி, அன்பைப்பெருக்கி, அமைதி யைக் காட்டுவது. அந்நடை தமிழ் இலக்கிய உலகுக்கு ஒருவிதப் புத் துயிர் வழங்குமென்று நம்பு கிறேன்."......

—*திரு. வி. க.*

அச்சுக்கலை

மா. சு. சம்பந்தன் எழுதியது

★ அச்சுக் கலையைப் பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்தியம்பும் முதல் தமிழ்ப் புத்தகம்.

★ அழகிய வெள்ளைத் தாளில் 290 பக்கங்கள், 32 பக்கம் ஆர்ட் தாளில் விளக்கப் படங்களுடன் கூடியது. இரு வண்ண அழகிய முகப்புக் கொண்டது.

★ "அச்சுக்கலை பற்றி விரிவாக ஆராய்ந்து சிறப்பான ஒரு நூல் இயற்றி யுள்ளார்" என டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் இந் நூலாசிரியரை யும் இந் நூலையும் பாராட்டியுள்ளார்கள்.

★ வளரும் தமிழுக்கு ஒரு மணியாரம் இந்நூல்.

விலை ரூ. 6-00

பாரி நிலையம்

59, பிராட்வே :: சென்னை - 1

கடித இலக்கியம்

[மா. இளஞ்செழியன் எம். ஏ.*]*

காலம் என்னும் பெருவெள்ளத்தையும் நீந்திக் கடந்து நிலைத்துநிற்கும் எழுத்துப் படைப்புகளையே இலக்கியங்கள் என்று நாம் ஏற்றிப் போற்றி மகிழ்கிறோம். இலக்கியம் என்பது ஆழமும் அகலமும் காண முடியாத ஒரு மாபெரும் கடலானால், தனிப் பாடல், பெருங்காவியம், நாடகம், சிறுகதை, நெடுங்கதை, கட்டுரை முதலியன அந்தக் கடலில் வந்து கலக்கின்ற பலவகை சிற்றாறுகளும் பேராறுகளும் ஆகும். வன்மையும் வண்மையும் தெளிவும் எழிலும் மிக்க அந்தப் பேராறுகளில் ஒன்றே கடித இலக்கியம் என்னும் சுவை ததும்பும் துறை.

கடிதங்கள் அல்லது முடங்கல்கள், அவற்றை எழுதுபவர்களுக்கும் சரி, பெறுபவர்களுக்கும் சரி, அளவற்ற இன்பத்தை அளிக்க வல்ல ஆற்றல் படைத்தன என்பதை அறியாதார் யார் உளர்? தன் இதயத்தைக் கவர்ந்த இன்பவல்லியிடமிருந்து கிடைக்கும் முடங்கலை ஒரு காதலன் எண்ணற்ற முறை படிப்பதும், ஒவ்வொரு முறை படிக்கும்போதும் அம் மடல் அவனுடைய உள்ளத்திற்கு ஒவ்வொரு படித் தேனைக இனிப்பதும் ஊரும் உலகமும் பன்னெடுங் காலமாக அறிந்த செய்திகள் அல்லவா? இதய வீணையின் நரம்புகளை இனிமையாக மீட்டி எழில்மிக்க நாதத்தை எழுப்பவல்ல காதற் கடிதங்கள் மட்டுமல்ல. பெற்றோர்கள் தம் மக்களுக்கு எழுதும் கடிதங்கள், மக்கள் தம் பெற்றோர்கட்கு வரையும் முடங்கல்கள், ஒருவர் உள்ளத்தில் இன்னொருவராக மாறிப் புகுந்து மாருத இடம் பெற்றுவிட்ட கெழுதகை நண்பர்கள் ஒருவருக்கொருவர் தீட்டிக் கொள்ளும் திருமுகங்கள், சிறந்த எழுத்தாளர்களும் உயர்ந்த தலைவர்களும் பலதுறை அறிஞர் பெருமக்களும், தங்கள் உற்றார் உறவினர்க்கும் நண்பர்கள் — தொண்டர்கள் இன்ன பிறர்க்கும் வரையும் மடல்கள்—ஆகிய எல்லா வகைக் கடிதங்களுமே ஒவ்வொருவகைச் சுவையும் பயனும் உடையனவாய்த் திகழ்வது இயற்கை.

நாள்தோறும் உலகத்தில் எழுதப்படுகின்ற பல்லாயிரக்கணக்கான கடிதங்கள் அத்தனையும், அவற்றை எழுதுவோருக்கும் பெறுவோருக்கும், கூடுதலாகவோ குறைவாகவோ பயன் தரவல்லனவே என்றாலும், அவை அத்தனையும் இலக்கியச் சிறப்போ செம்மையோ வாய்ந்தனவாக இருக்கமுடியாது. ஒரு சில கடிதங்கள் மட்டுமே என்றும் நிலைத்து நிற்கத் தக்க இலக்கிய முத்திரையைப்பெற்றனவாய், தொட்டனைத்து ஊறும் மணற்கேணி போலப் படிக்குந்தோறும் பேரின்பம் பயப்பனவாய் இருக்கக்கூடும்.

ஆன்றோரும் சான்றோரும், அவர்களுடைய அன்றாட வாழ்க்கையின் பல கட்டங்களில், பிற்காலத்தில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும் என்னும் எண்ணமே இல்லாமல் எழுதிய பல தனிப்பட்ட கடிதங்கள், பல்வேறு மொழிகளில் பல பெரிய நூல்களாகத் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன. கடித இலக்கியத்தின் ஒரு பகுதி இது. இதனை உண்மைக் கடித இலக்கியம் என்று இயம்பலாம்.

கடித இலக்கியத்தில் இன்னோர் பகுதி இருக்கின்றது. ஒருவர் மற்றொருவருக்கு உண்மையாகவே கடிதம் எழுதாமல், அவ்வாறு எழுதப்படுவதுபோலக் கற்பனை செய்து எழுத்தாளனின் இதயத்திலிருந்து புறப்பட்டு அவனுடைய எழுதுகோல் வாயிலாகப் பவனி வருகின்ற கடிதங்களே இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்தனவாகும். இந்த வகையைக் கற்பனைக் கடித இலக்கியம் என்று மொழியலாம். கதை உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் கடிதம் எழுதுவதாகக் கற்பனை செய்து, அவ்வாறு எழுதப்பட்ட கடிதங்கள் வாயிலாகவே ஒரு சிறுகதையை அமைக்கலாம்; ஒரு நெடுங்கதை புனையலாம்; அறிவியல்-பொருள் நூல்—சமயம்—தத்துவம் முதலிய பல துறைகள் பற்றிய கருத்துக்களையும் நிகழ்ச்சிகளையும் விளக்கலாம்; பல்வேறு நாடுகளைப்பற்றியும், அந்நாடுகளில் வாழும் மக்களைப்பற்றியும், அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றியும், அந்த வாழ்க்கையின் சிக்கல்கள்-சிறப்புகளைப் பற்றியும் தீட்டிக் காட்டலாம். நேர்முகமாக வெறும் கட்டுரை வடிவில் தெரிவித்தால் சலிப்பூட்டக்கூடிய பல கடினமான பொருள்களைக் கற்பனைக் கடிதங்கள் வாயிலாக விளக்கினால், அப்பொருள்களை எளிமையும் இனிமையும் அழகும் சுவையும் பொருந்தியனவாக மாற்றிவிடலாம்.

உலக மொழியாகத் திகழும் ஆங்கிலத்தில் கூட இந்த இரண்டாவது வகைக் கடித இலக்

கியம் அவ்வளவாக வளர்ச்சி பெறவில்லை என்பது உண்மைதான். ஆனால் அறிஞர் பெருமக்களும் அரும்பெருந் தலைவர்களும் எழுதிய உண்மைக் கடிதங்களின் தொகுதிகள் ஆங்கிலத்தில் நூற்றுக்கணக்கில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன. இலத்தீன் கிரேக்கம், பிரெஞ்சு, இரஷியன் முதலிய வேறு பல மொழிகளில் வெளியாகியுள்ள பல அரிய உண்மைக் கடிதங்களும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளன. உண்மைக் கடித இலக்கியத் துறையில் ஆங்கிலத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, பூரிப்பும் பெருமையும் அளிக்கத்தக்க வளர்ச்சி என்பதை எவரும் மறுக்க இயலாது.

ஆலிவர் கோல்ட்ஸ்மித், இராபர்ட் பிரௌனிங், தாமஸ் கிரே, மாத்யூ அர்னல்ட், ஜான் கீட்ஸ், ஜார்ஜ் பைரன் போன்ற பெருங்கவிஞர்களின் கடிதங்களும், சார்லஸ் லாம்ப், சர் வால்டர் ஸ்காட், ஆர். எல். ஸ்டீவன்சன் முதலிய கதை கட்டுரை ஆசிரியர்களின் முடங்கல்களும, எட்மன்ட் பர்க், வின்ஸ்டன் சர்ச்சில், ஆப்ரகாம்லிங்கன் முதலியபெருந்தலைவர்களின் மடல்களும், நூற்றுக்கணக்கிலும் ஆயிரக்கணக்கிலும் தொகுக்கப்பட்டு, தனித்தனியே பெரிய புததகங்களாகவெளியிடப்பட்டுள்ளன. பைரனின் கடிதங்களில் காணப்படும் நகைச்சுவையும் காதற்சுவையும் தன்னிகரற்ற சிறப்புடையவை. அதுபோலவே ஆப்ரகாம் லிங்கனின் கடிதங்களில் அந்த மனிதகுல மேதையின் கூரிய அறிவையும் பரந்த நோக்கத்தையும் பண்பட்ட உள்ளத்தையும் தெள்ளத் தெளிவாக அறிந்து மகிழலாம்.

ஆங்கில மொழியில் வெளியாகியுள்ள எண்ணற்ற கடிதத் தொகுதிகளில் மூன்று நூல்களைப்பற்றி இங்கே கட்டாயம் குறிப்பிட வேண்டும். செஸ்டர்பீல்ட் பிரபு தன் மகனுக்கு எழுதிய ஆயிரம் கடிதங்கள், ஹொரேஸ் வால்போல் பொதுவாழ்விலிருந்த பலவகை மனிதர் கட்கு எழுதிய 3500 கடிதங்கள், கௌபர் தன் பிள்ளைக்கு வரைந்த பல்வேறுகடிதங்கள் ஆகிய மூன்று கடிதத் தொகுதிகளே அவை. இந்த மூன்று நூல்களும் உலகப் புகழ் பெற்றவை. உண்மைக் கடித இலக்கியம் என்பது இப்படி இப்படி இருக்கவேண்டும் என்று வகை வகையாக விளம்பிக்கொண்டிருப்பதைவிட அது இந்த மூன்று நூல்களைப்போல இருக்க வேண்டும் என்று கூறினால் போதும். அவ்வளவு சிறப்பும் செம்மையும் வளமும் தெளிவும் எழிலும் ஏற்றமும் மிகுந்தவை இந்த நூல்கள். வால்போல் - செஸ்டர் பீல்ட் ஆகியோரின் கடிதங்களில் பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கில மக்கள் வாழ்ந்த வாழ்க்கையின் உயர்வும் தாழ்வும், செம்மையும் சரிவும், பிற்போக்கும் முற்போக்கும் என்று உள்ள எண்ணற்ற கூறுகள் யாவும் அப்படியே படம் பிடித்துக் காட்டப்படுகின்றன.

ஆங்கில மொழியில் உள்ள கற்பனைக் கடித நூல்களில் தலைசிறந்ததாகக் கருதப்படுவது, சிறந்த கட்டுரையாளரும் கவிஞருமாகிய கோல்ட்ஸ்மித் என்பவரால் எழுதப்பட்டுள்ள உலகக் குடிமகன் (Citizen of the World) என்னும்அரும்பெரும்புத்தகமாகும். லீன் சி அல்டாங்கி என்னும் பெயர் படைத்த சீன நாட்டுத் தத்துவ ஞானி ஒருவர், இங்கிலாந்திற்கு வந்து நெடுங்காலம் தங்கியிருந்து, அங்கிருந்தபடியே அந்த நாட்டின் வாழ்க்கை முறைகளைப்பற்றிக் கீழ் நாடுகளில் உள்ள தன் நண்பர்களுக்குக் கடிதங்கள் எழுதுவதாகக் கற்பனை செய்து எழுதப்பட்டுள்ள நூல் இது. ஆங்கில நாட்டு ஆட்சி முறையிலும் சமய அமைப்பிலும் சமுதாய வாழ்விலும் பதினெட்டாம் நூற்றாண்டில் காணப்பட்ட நெளிவுசுளிவுகளையும் கோணல் மாணல்களையும் அற்புதமாகச் சித்தரித்துள்ள இந்த எழுத்தோவியத்தை அறிஞர் கோல்ட்ஸ்மித் அவனிக்கு அளித்துள்ள அறிவுத்துறை அமுதசுரபி என்றே கூறவேண்டும்.

ஆங்கிலத்தில் மட்டுமல்ல, பிரெஞ்சு மொழியிலும் பல அரிய கடித இலக்கியங்கள் காட்சி அளிக்கின்றன. பிரெஞ்சுநாட்டில் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த அபெலார்ட் என்னும் இளம் தத்துவ ஞானியும், அவனுடைய இதயத்தை அள்ளிக்கொண்ட ஹெலாய்சி என்னும் பொன்னூர் மேனிச் சேல்விழியாளும், அம் மடந்தை நல்லாளின் தந்தையால் தண்டிக்கப்பட்டு, ஒருவரை ஒருவர் மணக்கமுடியாமல் வாழ்நாள் முழுவதும் துறவிகளாக வாழ்ந்துவந்தனர். ஆனால் அவர்கள் தங்கள் இளமைக்காலத்தில் பரிமாறிக்கொண்ட காதற் கடிதங்கள், அழியாத ஓவியங்களாக நிலைத்து நின்று, அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரையில் பிரெஞ்சு நாட்டில் தோன்றிய பல்வேறு கவிஞர்களின் உள்ளங்களையெல்லாம் கவர்ந்து, அவர்களின் பாட்டோவியங்களுக்கு உயிரோட்டம் தருகின்ற உணர்ச்சி வெள்ளங்களாக அமைந்துவிட்டன. அல்பான்சே டாடெ என்பார் எழுதிய 'மான் மோலின் கற்பனைக் கடிதங்கள்', மேடம் செவின் என்னும் மாது தன் மகளுக்குத் தீட்டிய உண்மைக் கடிதங்கள் ஆகியவை பிரெஞ்சு மொழியில் உள்ள வேறு சில கடித நூல்களாகும்.

இலத்தீன் மொழியில்உள்ள 'சிசரோவின் கடிதங்கள்' என்னும் நூல், கி. மு. முதல் நூற்றுண்டில் ரோமாபுரியில் ஒப்பற்ற பேச்சாளராக

வும் அரசியல் தலைவரர்க்கும் திகழ்ந்த சிசரோவின் 864 கடிதங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஜூலியஸ் சீசர், புரூடஸ், பாம்பே முதலிய அக்கால மன்னர்கட்கும் தலைவர்கட்கும் சிசரோ தீட்டிய கடிதங்களும் இந்தத் தொகுதியில் இருப்பது இந்த நூலுக்குத் தனிச் சிறப்பை அளிப்பதாகும்.

அமிழ்தினும் இனிய நம் செந்தமிழ் மொழியில், கவிதைச் செல்வம், ஈடு இணையற்ற முறையிலும் உலகுக்கெல்லாம் வழங்கத்தக்க அளவிலும் அமைந்துள்ளது. ஆனால் சிறுகதை, நாடகம், கட்டுரை, நெடுங்கதை முதலிய இக்கால இலக்கியத் துறைகள் போதுமான வளர்ச்சியை அடையவில்லை என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அவ்வாறு நம் தமிழ் மொழியில் தேவையான வளர்ச்சியை அடையாமல் இருக்கின்ற துறைகளில் ஒன்றே கடித இலக்கியம்.

பேரறிஞர் மறைமலையடிகள், தமிழ்த் தென்றல் திரு. வி. க., நாவலர் சோமசுந்தர பாரதியார், பண்டிதமணி கதிரேசனார், நாவலர் வேங்கடசாமி நாட்டார், பரிதிமாற் கலைஞர், உ. வே. சாமிநாத ஐயர், வ. உ. சிதம்பரனார் முதலிய ஆன்றவிந்தடங்கிய சான்றோர்கள் அண்மைக் காலத்தில்தான் வாழ்ந்தனர் என்றாலும், அவர்கள் தம் வாழ்நாளில் எழுதிய சிறந்த கடிதங்களைத் தேடித் திரட்டித் தொகுக்கும் முயற்சியில் தமிழகம் ஈடுபடாமல் இருப்பது, வெட்கமும் வேதனையும் ஒருங்கே தரவல்ல நிலைமையாகும். மறைமலையடிகளாரின் கடிதங்களில் ஒரு சில மட்டும் அண்மையில் ஒரு சிறு நூலாக வெளி வந்திருப்பதும், என் கெழுதகை நண்பர் அன்புப்பழம்நீ முதலிய தமிழன்பர்கட்குக் கவிஞர் சுத்தாநந்த பாரதியார் எழுதிய பல கடிதங்கள், வீரத்தமிழருக்கு ஆவேசக் கடிதங்கள் என்னும் பெயர்படைத்த நூலாக வெளி வந்திருப்பதும், கப்பலோட்டிய தமிழர் சிதம்பரனாரின் சில கடிதங்கள் 'அமுத சுரபி' வாயிலாகத் தற்போது வெளியாகி வருவதும், காலஞ்சென்ற சிறந்த பேச்சாளர் சத்தியமூர்த்தி அவர்கள் தம் மகளாருக்கு எழுதிய பல முடங்கல்கள் ஒரு புத்தகமாக வெளியாகியிருப்பதும், நம் இதயப்பூங்காவில் மகிழ்ச்சித் தென்றலை ஓரளவு உலவ விட்டுள்ளன. ஆனால் இது போதாது. நம் இதயம் முழுவதுமே மகிழ்ச்சிக் கடலில் மிதக்க வேண்டுமானால் மேலே குறிப்பிட்டவர்கள் போன்ற பேரறிஞர்களின் கடிதங்களைத் திரட்டித் தொகுக்கும் முயற்சியில் தமிழ் நாட்டுப் பதிப்பகங்கள் உடனடியாக ஈடுபட வேண்டும். இதில் சற்றுத்தாமதம் காட்டினாலும் இப்போது கிடைக்கக்கூடிய பல கடிதங்கள் கூடப் பின்னாளில் கிடைப்பது அரிதாகிவிடும்.

தமிழறிஞர் அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன் மலேய நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது அங்கிருந்தபடியே தம் மகளுக்கு எழுதிய பல அழகிய கடிதங்கள் "தமிழன் கண்ட மலேயா" என்னும் அரியதோர் நூலாக வெளிவந்திருப்பதும், 'பிள்ளைக் கனியமுது'களின் பெருமைகளை விளக்கி அன்னார் அதே மகளுக்கு எழுதிய வேறு சில கடிதங்கள் 'மக்கட் செல்வம்' என்னும் மற்றோர் நூலாக அச்சாகியிருப்பதும், தமிழ் எழுத்தாளர் உலகத்தில் கடித இலக்கியத்திற்கு நல்லதோர் எதிர்காலம் இருக்கிறது என்னும் நம்பிக்கையை நமக்கு அளிப்பனவாக உள்ளன.

கற்பனையாக எழுதப்படுகிற கடிதங்கள் வாயிலாக ஒரு முழுநீள நெடுங்கதையை உருவாக்குவதில் வியக்கத்தக்க வெற்றி பெற்றிருப்பவர்கள், பேரறிஞர் மறைமலையடிகளாரும், எழுத்துச் செல்வர் நாரண துரைக்கண்ணனும் ஆவர். மறைமலையடிகளார், அவர் பல ஆண்டுகட்கு முன்னரே எழுதிய "கோகிலாம்பாள் கடிதங்கள்" என்னும் அருமையான நூலிலும், நாரண துரைக்கண்ணனார் "கோகிலா" என்னும் அழகிய நவீனத்திலும் இந்தக் கடித முறையைக் கையாண்டு செந்தமிழுக்குப் பெருமை தேடித் தந்துள்ளனர்.

தமிழ் மக்களின் இக்காலச் சமுதாய வாழ்க்கையில் காணப்படுகிற பலவகைச் சிக்கல்களைப்பற்றிச் சிந்தனைச் செல்வர் டாக்டர் மு. வ. அவர்கள் எழுதியுள்ள கருத்துச் சுவை மிகுந்த கற்பனைக் கடிதங்கள் பல, அன்னைக்கு, தம்பிக்கு, தங்கைக்கு, நண்பர்க்கு ஆகிய நான்கு இனிய நூல்களாக வெளிவந்துள்ளன.

இந்தியாவின் தலைமை அமைச்சர் திருவாளர் பண்டித நேருவால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட "தம் மகளுக்கு எழுதிய கடிதங்கள்" என்னும நூலும், வங்க நாடு அளித்த மாபெருந் தலைவர் சுபாஷ் சந்திரபோஸ் வங்க மொழியில் எழுதிய இளைஞன் கனவு என்னும் கடிதத் தொகுதியும், கவியரசர் தாகூர் வரைந்துள்ள பல வங்க மொழிக் கடிதங்களும் தமிழ் மொழியில் பெயர்த்து வெளியிடப்பட்டுள்ளன. ஆங்கில மொழியில் உள்ள வால்போல் கடிதங்கள், கௌபர் கடிதங்கள், செஸ்டர்பீல்ட் கடிதங்கள் ஆகிய மூன்று நூல்களையும் அறிஞர்பெருமகனார் கா. அப்பாத்துரை அவர்கள் சுவை கெழுமிய முறையில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்கள்.

தமிழ்க் கிழமை இதழ்கள்—திங்கள் இதழ்கள் பலவற்றில் கடித வடிவில் அமைந்த பல

சிறு கதைகளும், கட்டுரைகளும் அவ்வப்போது வெளிவந்து கொண்டுள்ளன என்பதை இங்கே மகிழ்ச்சியுடன் குறிப்பிடலாம். சிறந்த பேச்சாளரும் உயர்ந்த எழுத்தாளருமாகிய அறிஞர் அண்ணா அவர்கள், சென்ற மூன்றாண்டுகளாக அவருடைய "திராவிட நாடு" இதழில் தம்பிக்கு அண்ணன் எழுதுவது என்கிற முறையில் தீட்டிவரும் அரசியல் விளக்கக் கடிதங்கள், ஆயிரக்கணக்கான மக்களால் படித்து மகிழப்படும் சிறப்புமிக்கனவாகத் திகழ்கின்றன.

தமிழ் மொழியில் வளர்ந்தாக வேண்டிய சிறந்த துறைகளில் தலையாய ஒன்று, கடித இலக்கியம். இந்தத் துறையில் ஆர்வத்தோடு ஈடுபட்டு, அழகான நூல்களை உருவாக்கி, அணி அணியாக அளிக்கவேண்டிய கடமை தமிழ் எழுத்தாளர்களுக்கும் பதிப்பாளர்களுக்கும் உண்டு என்பதைச் சொல்லவும் வேண்டுமோ ?

★

அறியாமை இருளைப்போக்குவது

இலக்கியம்

வறுமை இருளைப் போக்குவது

கதர்

ஆகவே கதரை ஆதரிப்பது
எழுத்தாளர் கடமை.
இலக்கியத்தில் எளிய நடை
எல்லோருக்கும் உகந்தது.
ஆடையில் கதராடை
எளியது; எல்லோருக்கும் உகந்தது.

அன்றாடத் தேவைகளுக்கு ஏற்ற

கதர்

சென்னை ராஜ்ய

கதர், கிராமக் கைத்தொழில் போர்டு

காதி

விற்பனை நிலையங்களில் கிடைக்கின்றது.

குறிப்பு: அக்டோபர் 31ம் தேதி வரை பருத்தி ரகக் கதர் விற்பனையில் ரூபாய்க்கு 31 ந. பை. தள்ளுபடி உண்டு.

காதி டைரக்டர்

ராஜ்ய கதர், கிராமக் கைத்தொழில் போர்டு
சென்னை

Phone : 5230 Grams : "Exquisite"

For all your Reqirements of
up-to-date Sanitaryware,
Bathroom Fixtures,
Marble, Slabs,
Picture Tiles,
Marble Chips,
White Cement etc.,

●

Contact :

SWAMY & COMPANY

SANITARY ENGINEERING CONTRACTORS,
318, Thambu Chetty Street, Madras-1.

ENQUIRIES SOLICITED

எமது சமீப வெளியீடுகள்

★

உதயஜோதி	பி. ஸ்ரீ	2	50
கருணைக்கடல்	,,	2	50
வரம் தரு வள்ளல்	,,	3	00
கிருகராணி	கௌசல்யா	4	00
கமலினி	தாராசங்கர்	2	00
கலீா ! கலீர் !	எஸ்லார்வி	1	25
கட்டுரைக் கனிகள்		2	00
வளர்க அறிவு	கல்யாணசுந்தரம்	1	00
பாகவதக் கதைகள்	ம. ராதாகிருஷ்ண பிள்ளை	2	00
அவதாரமும் கம்பரும்	,,	1	75
அருள் கொழிக்கும் ஆலயங்கள்	,,	4	00
சுடர்க தமிழ்நாடே !	பி. ஸ்ரீ	1	50
வேலும் மயிலும்	,,	3	00
அன்னையின் அன்பு	மைமலாமணி	1	00
விசித்திரக் குள்ளன்	வாண்டுமாமா	1	25
மழலைச் சித்திரம்	"மல்லாரி"	1	50
ஞானமாலை	கி. வா. ஜகந்நாதன்	2	00
தென்னாட்டு மலைகள்	நாராயணசாமி	1	00
மாயன் வாக்கு	A, S. P. Ayyar	2	00
கண்ணின் ஒளி	குருசாமி	2	25
முன்னும் பின்னும்	ம. ராதாகிருஷ்ண பிள்ளை	1	50
டாக்டர் கிரிஜா	குகப்ரியை	1	50

★

அல்லயன்ஸ் கம்பெனி

தபால் பெட்டி நெ. 617.

மயிலாப்பூர் :: சென்னை-4.

வாசித்தீர்களா ?

எமது சிறந்த வெளியீடுகள்

❊

ரூ. காசு

மோலியேர் இரு நாடகங்கள் 4 00
—மோலியேர்
(சாஹித்ய அகாதெமிக்கான வெளியீடு)

தமிழ் நாட்டுப் பாமரர் பாடல்கள்
—நா. வானமாமலை எம். ஏ. எல். டி.
பரிசுப் பதிப்பு 5 00
சாதாப் பதிப்பு 3 00

ரசாயன மூலகங்கள்
—நெஸேவ்
பரிசுப் பதிப்பு 5 00
சாதாப் பதிப்பு 3 50

வாழ்வின் அலைகள்
—மாக்ஸிம் கார்க்கி
பரிசுப் பதிப்பு 8 00
சாதாப் பதிப்பு 6 00

உயிரின் தோற்றம் 1 00
—ஏ. ஐ. ஒபாரின்

புற்று நோய் 1 00
—வி. ஐ. காஸன்ஸ்கி

சுகப் பிரசவம்
—கே. பிகர்ஜேவ்
பரிசுப் பதிப்பு 0 75
சாதாப் பதிப்பு 0 40

என். சி. பி. எச். (பிரைவேட்) லிட்.

புத்தகம் வெளியிடுவோரும், விற்பனையாளரும்

6, நல்ல தம்பிச் செட்டி தெரு, சென்னை-2.
199, மவுண்ட் ரோட், சென்னை-2.
8, G பைகிராப்ட்ஸ் ரோட், சென்னை-5.
10, மேலகோபுரவாசல், மதுரை.
19-27, பெரிய கடை வீதி, கோயமுத்தூர்.

தமிழ்ப் பத்திரிகைகள்

[மா. சு. சம்பந்தன்]

உலகின் நானுபக்கங்களில் நடைபெறும் முக்கிய செய்திகளையும், கண்டுபிடிப்புக்களையும் இன்ன பிறவற்றையும் உடனுக்குடன் மக்களுக்குத் தெரிவித்து அறிவு பரப்பும் சாதனமாக விளங்குவது பத்திரிகை என்று சொல்வது சிறிதும் மிகையாகாது. பத்திரிகைக்குப் பொதுமக்களிடமும் அரசியலாரிடமும் தனி மதிப்பு ஏற்பட்டுள்ளது. உலகத்தில் மிகப் பழமையான முதல் பத்திரிகையாகக் குறிப்பிடப்படுவது சீன நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் நடைபெற்ற 'பீகிங் கெஜெட்' என்பதாகும்.

கீழை நாடுகளிலே முதன்முதலாக இலங்கையில்தான் 1802-ல் 'சிலோன் கெஜெட்டு' என்ற பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது ஆங்கிலம் தமிழ் சிங்களம் என்னும் முப்பகுதிகளைக் கொண்டு நடத்தப்பெற்று வந்தது. முதன் முதலில் வெளியான தமிழ்ப் பத்திரிகை என்றும் இதனையே சொல்லலாம். அடுத்து 1831-ல் 'தமிழ் மாகஸின்' தொடங்கப்பட்டது. இதனையடுத்து 1852-ல் 'தினவர்த்தமானி' எனும் நாளிதழ் திரு. சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களை ஆசிரியராகக்கொண்டு துவக்கப்பட்டுள்ளது. இந்நாளிதழ் பிறகு வார இதழாக மாற்றப்பட்டது.

தமிழில் உரை நடையையும் அச்சு எழுத்தையும் அச்சு இயந்திரத்தையும் நுழைத்து வளர்த்த பெருமை கிறிஸ்துமதப் பாதிரிமார்களையே சேரவேண்டும். அவர்களது மதப் பரப்புதலுக்காக வேண்டியே தமிழ்ப் பத்திரிகைகளும் தமிழகத்தில் முதலில் தொடங்கப்பட்டன என்று கூறுவது மிகவும் பொருத்தமாகும்.

அவர்களுடைய பத்திரிகைகளைக் கண்ணுற்ற ஏனைய மதத்தினரும் தத்தம் மதத்தின் பெருமையை நிலைநாட்டவேண்டிப் புதுப்புது அச்சகங்களையும் பத்திரிகைகளையும் ஏற்படுத்த முனைந்தனர். இப்படியாகச் சமயப் போட்டிகளிடையே தமிழ் நாட்டில் பத்திரிகையைக் கருவியாகக் கொள்ளும் வழக்கமும், பத்திரிகையைப் படிக்கவேண்டிய ஆர்வமும் இயல்பும் ஒருங்கே வளரத் தொடங்கின.-இச் சமயப் பத்திரிகைகளில் குறிப்பிடத்தக்கன :

1. கிறித்தவம் : 'சிநேக போதன்' (1875), 'வேதவிளக்கன்' (1890), 'வேதபோத மாத தோழி' (1929), 'புத்துயிர்' (1950).

2. இந்துமதம் : 'இந்துமத சீர்திருத்தி' (1883), 'சித்தாந்தம்' (1912), 'திராவிட பாகவதன்' (1914), 'இராமாநுஜன்' (1918), 'சமரச மார்க்கம்' (1927), 'மாதவ மித்திரன்' (1929).

3. இஸ்லாம் : 'இஸ்லாம் நேசன்' (1909), 'தத்துவ இஸ்லாம்' (1921), 'தாருல் இஸ்லாம்' (1922).

சமயப் பத்திரிகைகளுக்கு அடுத்தபடியாக விரைந்து வளரத் தொடங்கிய பத்திரிகைகள் சமூகப் பத்திரிகைகளாகும். வேறு சமூகங்கள் அரசாங்கத்தில் உத்தியோகம் மரியாதை முதலிய சலுகைகள் பெற முந்தத் தொடங்கின. வெள்ளை ஆட்சியினரும் பிரித்தாள்வதில் தான் தங்கள் ஆட்சி நிலைத்து நிற்கும் என்று கருதி சில சமூகங்களுக்குத் தனிச் சலுகை காட்டத் தொடங்கினர். இதனுல் ஒவ்வொரு சமூகமும் பிற சமூகங்களைக் காட்டிலும் தனது சமூகமே உயர்ந்தது என்பதைச் சுட்டிக்காட்டப் பலவித ஆதாரங்களைத் திரட்டிச் சொல்ல முற்பட்டன. அவைகளுக்குப் பத்திரிகைகளே ஏற்ற கருவிகளாகத் தோன்றின; எனவே புதிய புதிய சமூகப் பத்திரிகைகள் தோற்றுவிக்கப்பட்டன. அவற்றில் குறிப்பிடத்தக்கன :— 'சான்றோர் குல விவேக போதினி' (1909), 'வன்னிய குல க்ஷத்திரிய தீபம்' (1912), 'விஸ்வகர்மன்' (1913), 'நாட்டுக்கோட்டை வைசீயம்' (1914), 'ஆர்ய வைசியாபிமானி' (1914), செங்குந்தமித்திரன் (1922), 'ப்ராம்மணன்' (1925), 'கருணிகமித்திரன்' (1926), 'வேளாளமித்திரன்' (1929).

இவ்விதச் சமூகப் பத்திரிகைகளின்தோற்றத்தினுல் சமூக மக்களுக்குள் ஒரு கிளர்ச்சியும், விழிப்புணர்ச்சியும், உத்தியோகங்களைப் பெற வேண்டும் என்பதில் தனியார்வமும் ஏற்படலாயின. பொதுவாக, முன்னணியில் இருந்து வந்த சமூகங்களும் பின்னணியிலிருந்து வந்த சமூகங்களும் தங்களை 'உய்விக்க வந்த' இப் பத்திரிகைகளுக்கு அதிக ஆதரவு காட்டலாயின. இத்தகைய பத்திரிகைளால் ஏற்படுத்தப்பட்ட சமூக விழிப்புணர்ச்சிக்குப் பிறகு தான் அரசியல் விழிப்புணர்ச்சி முகிழ்க்கத் தொடங்கியது எனலாம்.

பொதுவாக இந்திய மொழிகளில் தொடங்கப்பட்ட பத்திரிகைகள் 1867-ஆம் ஆண்டுவரையில் பெரும்பாலும் இலக்கியம், சமூகம், சமயம் போன்ற துறைகளில்மட்டும் ஈடுபாடு காட்டி வந்தன என்பதும், அவை அரசியலிலோ நிர்வாகத் துறையிலோ அதிக கவனம் செலுத்தியதில்லை என்பதும், அப்போது தந்திச் செய்திகள் கிடையா என்பதும் இங்கு நினைவுகூரத்

தக்கது. ஆகவே தமிழ்நாட்டுச் சமூகப் பத்திரிகைகளும் இப்பொழுது விதிக்குப் புறநடையாகப் போக முடியாமல் இருந்தன!

1857-ல் ஏற்பட்ட சிப்பாய்க் கிளர்ச்சிக்குப் பின்னர்தான் இந்தியாவில் அரசியல் எழுச்சி நாடு முழுவதும் பரவலாயிற்று. இந்தியப்படைகளின் உரிமைக் கிளர்ச்சிக்குப் பின்னர் ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகள் இந்தியக் குடிகளின் குணநலன்களைக் குறைகூறத் தொடங்கின. இதனை மறுக்க இந்நாட்டில் தேசீய உணர்வுப் பெற்றிருந்த ஒரு சிலர் கிளர்ந்தெழுந்தார்கள். இவ்வுணர்ச்சியே இந்தியர்களால் சொந்தமாக நடத்தப்பெறும் பத்திரிகைகள் தேவை என்ற பேரவாவைத் தூண்டிவிட்டது. எனவே தங்கள் கோரிக்கைகள் நிறைவேற ஆளும் வர்க்கத்தினரின் கவனத்தைக் கவர்வதற்காகவேண்டி முதலில் ஆங்கிலச் செய்திப் பத்திரிகைகளும், பின்னர் தாய் மொழிப் பத்திரிகைகளும் துவக்கப்பட்டு நடத்தப்பட்டுகின்றன.

அவ்வாறு தொடங்கப்பட்ட தாய்மொழி இதழ்களில், தமிழைப் பொறுத்த வரையில் மூத்தது 'தினவர்த்தமானி' (1852). இதற்கு அடுத்தபடியாக 1880-ல் வார இதழாகத் தொடங்கப்பட்ட 'சுதேசமித்திரன்', பின் வாரம் மும்முறையாகிப் பின் நாளிதழாக மாறி, நடைபெற்று வருகிறது. 'சுதேசமித்திர'னைத் தொடர்ந்து திரு. வி. கல்யாணசுந்தரனாரால் 'தேசபக்தன்' எனும் நாளிதழ் துவக்கப்பட்டது. இது தமிழ் நாளிதழ்களில் நல்லதோர் புரட்சியை உண்டாக்கியது. திரு. வி.க. தமிழ்ப் பத்திரிகை உலகில்புகுந்தவிளைவாக, தமிழும் ஆங்கிலமும் கலந்து எழுதப்பட்ட தமிழ்நடை திருத்தமுற்றது; உணர்ச்சி ஊட்டக்கூடிய முறையில், அன்றாடச் செய்திகளைத் தருவதில் தமிழ்ஆங்கிலத்திற்கு எவ்வகையிலும் சோடை போனதல்ல என்ற உண்மை வெளிப்பட்டது. 'தேசபக்த'னால் தமிழ் உயிர் கொண்டது; தமிழகம் வீறுகொண்டது. டாக்டர் பி. வரதராசலு அவர்களை ஆசிரியராகக் கொண்ட "தமிழ் நாடு" என்னும் வார இதழ் நாளிதழாக மாறி, சென்னையிலிருந்து நெடுங்காலம் சிறந்த முறையில் வெளியாகி வந்தது. இராய. சொக்கலிங்கன் அவர்களை ஆசிரியராகக்கொண்டு 'ஊழியன்' என்னும் நாளிதழும், "ஜெயபாரதி", 'சுயராஜ்யா' முதலிய தேசீய தினசரிகளும், தம்பிடி விலையில் 'பை பத்திரிகை'யும் சென்னையில் வெளியாகியுள்ளன. சுயமரியாதை இயக்கத்தின் சார்பாக 'சண்டமாருத' (1930)மும், நீதிக் கட்சியின் சார்பாக மணி. திருநாவுக்கரசு முதலியார், ஜே. எஸ். கண்ணப்பர் ஆகியோரை ஆசிரியராகக் கொண்டு 'திராவிட'னும் நாளிதழ்களாக வெளியிடப்பட்டன. 'தியாக நாடு' எனும் நாளிதழ் பி. ஜி. ஜோஸப் அவர்களை ஆசிரியராகக் கொண்டு, நாகர்கோயிலிலிருந்து ஏறக்குறைய 90 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இன்னும் டி. எஸ். சொக்கலிங்கத்தை ஆசிரியராகக் கொண்டு 'காந்தி', 'இந்தியா', 'தினமணி', 'தினசரி' முதலிய நாளிதழ்கள் அவ்வப்போது நடத்தப்பட்டுள்ளன. மேலும் 'நவயுகம்', 'பாரததேவி', 'தினத்தந்தி', 'சுதந்திரநாடு', முஸ்லீம், 'சைபுல் இஸ்லாம்', 'தாருல் இஸ்லாம்', 'எங்கள் நாடு', நம்நாடு, 'தமிழ் நாடு', 'நவ இந்தியா', 'நவமணி', தினமலர் 'ஜனசக்தி', 'தமிழ்நாடு', 'முரசொலி', 'தனியரசு' ஆகிய தின இதழ்களும் துவக்கப்பட்டன.

மாத இதழ்களில் புகழ்பெற்றவையாக விளங்கியவை, பெண்களுக்கென நடத்தப்பெற்ற மாதர் மித்திரி(1889),மகாராணி (1887), சக்கரவர்த்தினி (1905), மாதர் போதினி (1911) என்பன. இலக்கியப் பத்திரிகைகளாக நடத்தப்பெற்றவை: ஆநந்தபோதினி, ஆநந்த குணபோதினி, விவேக சிந்தாமணி (1792), ஜனாபிமானி, ஜனவிநோதினி, செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில், கலைமகள் (1923), சக்தி, பொன்னி போன்றவை. கல்வித்துறைப் பத்திரிகைகளாக நல்லாசிரியன் (1906), கல்வி (1917), பேராசிரியன் (1917), ஆரம்பக்கல்வி (1933), கல்விக்கடல் (1924), போதனா விஷயப் பூங்கொத்து (1941) என்பனவற்றைச் சொல்லலாம்.

கல்வித்துறையில் மட்டுமல்ல, மருத்துவத் துறையிலும் பத்திரிகைகள் வெளிவந்துள்ளன. அவை முறையே ஆயுர்வேத பாஸ்கரன் (1908), 'வைத்திய போதினி' (1910), 'சித்தர் திருஉளம்' (1920), 'தமிழ் வைத்தியக் களஞ்சியம்' (1922), 'சித்தர் களஞ்சியம்' (1934) என்பனவாகும்.

தொழில் பத்திரிகைகளாக, 'விநோத விசித்திர பத்திரிகை' (1900), 'பிழைக்கும் வழி' (1909), 'தொழிற் கல்வி' (1914), 'விவசாயி' (1937), 'தொழில் முரசு' (1948), 'கைத்தறி' (1951), 'உழவர் நாடு' (1949) என்பனவற்றைக் கூறலாம்.

பற்பல கலை சம்பந்தமாகவும் தமிழில் பத்திரிகைகள் வெளியாகியுள்ளன. அவைகளின் பெயர்கள் முறையே 'அச்சுத்தொழில்'(1926), 'சிற்பக்கலை' (1947), 'நாட்டியம்' (1949), 'விஞ்ஞானி' (1955), 'கலைக்கதிர்' (1948) என்பனவாகும். சட்டத்தை விளக்கிக் கூற

வந்த பத்திரிகைகள் : 'சித்தாந்த சங்கிரகம்' (1877), 'மாதச் சட்டப் பத்திரிகை' (1893), 'தமிழ்ச் சட்டபுஸ்தகம்'(1909), 'சட்டபோதினி' (1913) என்பனவாம்.

வேளாண்மை பற்றிய பத்திரிகைகள் : 'உழவன்' (1903) இந்திய விவசாயம் (1920) போன்றவை.

உடல்நலம் பற்றியபத்திரிகைகள்: 'ஆரோக்கிய போதினி' (1908), சுகாதார போதினி, ஆரோக்கிய தீபிகை (1924), நல்வழி போன்றன. நாட்டு நிர்வாகம் பற்றிய இதழ்கள் : 'கிராமாதிகாரி' (1900), 'பஞ்சாயத்து' (1918), 'கிராம பரிபாலனம்' (1923),'கிராம வாழ்க்கை' (1925) முதலியன. குழந்தை இதழ்களுக்கும் குறைவில்லை. 'பாலியர் மித்திரன்' (1911), 'பால விநோதனி' (1918), 'பால சிந்தாமணி' (1935), 'சிறுவர் அறிவுக்கதிர்' (1935), 'அம்புலி மாமா' (1947), 'பாப்பா' (1941), 'வானவில்' (1948), 'மாணவர் விருந்து' (1949), 'தம்பி' (1949), 'அணில்' (1946), 'கண்ணன்' (1950) 'கல்கண்டு' (1951), 'பூஞ்சோலை' (1951) முதலியன. கதைகளைத் தாங்கியே வெளிவந்த இதழ்களாவன: 'ஸர்வஜன ரஞ்ஜினி' (1911), 'நாவல்' (1918), 'மனோரஞ்சனி' (1920), கதா ரஞ்சனி. (1922). 'ஜெகன் மோகினி' (1922), 'மன மோகினி' (1922), மக்களை விலாப் புடைக்கச் சிரிக்க வைப்பதற்காகவே துவக்கப் பட்டபத்திரிகைகள்: 'ஆனந்த விகடன்' (இதன் முதல் ஆசிரியர் விகடகவி பூதூர், எம். எஸ். வைத்தியநாத ஐயராவர். பின்னர், எஸ். எஸ். வாசன் இதனைப் பொறுப்பேற்றுத் திறம்பட நடத்தி வருகிறார்.), 'ஆனந்த விஜய விகடன்' (1928), 'பிரசண்ட மகாவிகடன்' (1928). 'பிரசண்ட விகடன்' (1933), 'வசந்த விகடன்' (1933) 'குமார விகடன்' (1933), 'குறும்பன்' (1933), 'ஆனந்தக் கூத்தன்' (1935).

திரைப்படத் துறைப் பத்திரிகைகளாவன:- 'ஆடல் பாடல்' (1935), 'சினிமா உலகம்' (1935). 'ஒளி உலகம்' (1938), 'மின்னொளி' (1939), 'ஜோதி' (1939), 'பேசும்படம்' (1944) கலை (1947), 'திரை உலகம்' (1947), 'குண்டூசி' (1947).

பொதுவாகத் தமிழ்ப் பத்திரிகைகள் சென்னை, மதுரை, திருச்சி போன்ற பெருநகரங்களிலிருந்து மட்டுமல்லாமல் சிற்றூர்களிலிருந்தும் பர்மா, இலங்கை, மலேயா முதலிய வெளி நாடுகளிலிருந்தும்கூட வெளியாகியுள்ளன.

தமிழறிந்த பெருமக்களாகிய சி. வை. தாமோதரம்பிள்ளை, மறைமலையடிகள், திரு.வி. கலியாண சுந்தரனார், எம் எஸ் பூரணலிங்கம் பிள்ளை, ஆரணி குப்புசாமி முதலியார்,எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு, இராய. சொக்கலிங்கம், சொ. முருகப்பா, கோ. வடிவேலு செட்டியார் போன்றவர்களால் நடத்தப்பெற்ற தமிழ்ப் பத்திரிகைகள், தமிழ் மரபு குன்றாமல் அதே நேரத்தில் தமிழ் நடையை எளிமைப்படுத்தித் தந்துள்ளன. இன்னும்தமிழ் நடையில் எளிமையையும் விறுவிறுப்பையும்கையாள இடமுண்டு. தமிழ் எழுத்தாளர்களும், பத்திரிகாசிரியர்களும் தமிழ்ப் பத்திரிகைகளின் நீக்குப் போக்குகளை நன்கு உணர்ந்துகொண்டு, தத்தம் எழுத்தோவியங்களை உயிரோட்டமுள்ள நடையில், பிறமொழியினரும் பாராட்டிப் பின்பற்றத்தக்க வகையில், ஏறு நடைபோட்டு நடக்கத்தக்க வகையில் படைத்து அளிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

எழிலார் ஈழம்

[கா. வேழவேந்தன், பி.ஏ ,]

1. கத்திடும் கடல்க டந்து
கலமேறி ஈழங் கண்டேன் !
எத்தனை அரிய காட்சி!
இயற்கையின் எழிலார் ஆட்சி!
பித்தனாய் ஆனேன் ! விட்டுப்
பிரிந்திட நெஞ்சம் எங்கே?
பத்தல்ல ; பதினொன் றல்ல !
பலநூறு விந்தை கண்டேன் !

2. சிற்றோடை, அருவி, நெஞ்சம்
சிலிர்த்திடும் மலைகள் ; பச்சைப்
புற்றரைக் கம்ப ளங்கள் ;
புன்னகை உதிர்க்கும் பூக்கள்
நெற்றவிழ் தென்னை ; உள்ள
நினைவீர்க்கும் இரப்பர்க் காடு
வெற்றுரை அல்ல தோழா !
விண்ணிலே பறக்கக் கண்டேன் !

3. கண்டனன் 'கண்டி' தன்னைக்
ககனத்தில் பறந்தேன் ! தங்கக்
கெண்டைகள் துள்ளும் ஏரி
கிளைபல சூழ்ந்த குன்றம்
பெண்டுகள் குழந்தை தூக்கிப்
பேச்சின்றி தோட்டம் சென்று
தொண்டாற்றும் காட்சி கண்டேன்
துயரத்தை நெஞ்சில் கொண்டேன் !

4. சிகரத்துள் சிகரமாகி
செழிப்பெலாம் தேக்கிக் கொண்ட
நகரத்துள் ஒளியாம் அந்த
நங் 'நுவ ரேலியாவைப்'
புகழவும் சொற்கள் உண்டா ?
பொலிவடா பொலிவே எங்கும்!
நகரவும் உள்ள மில்லா
நகரமாம் அஃது என்பேன் !

5. வண்டமிழ் யாழ்ப்பா ணத்தார்
வாழ்கின்ற மண்ணில் இன்னும்
பண்டுள்ள பண்பா டுன்றிப்
பலவாறு தழைக்கக் கண்டேன்
'தண்டி'யைத் திகைக்க வைக்கும்
தனித்துறைக் கவிஞர் கண்டேன் !
உண்டான செய்தியாவும்
உரைத்திடச் சொற்கள் எங்கே ?

6. ஈழத்தில் தலையாய் உள்ள
எடுப்பான கொழும்பில், நல்லோர்
வாழிடம் யாழ்ப்பாணத்தில்
மணந்திடும் 'ழ'கரம் கண்டேன்
ஆழியைக் கடந்த சிங்கன்
ஆண்டதோர் மண்ணில் இன்னும்
வாழ்ந்திடும் தமிழைக் கண்டு
வாய்மீதில் விரலை வைத்தேன்.

எழுத்தாளரின் இனிய நண்பர்

SHOW ROOM :
395, MINT STREET, MADRAS-1

விற்பனையாகிறது மலிவுப் பதிப்பாக

அகிலன் எழுதிய நாவல்

நெஞ்சின் அலைகள்

தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரின் முதற் பரிசு பெற்றது.

ரூ. 2-50

⁂

தயாராகிறது

அகிலன் எழுதிய சரித்திர நாவல்

வேங்கையின் மைந்தன்

⁂

பழனி பிரசுரம்

3, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை-5

எங்கள் புதிய வெளியீடுகள்

இலக்கிய நாடகங்கள் —H. **வைத்தியநாதன்**	ரூ	2-00
மணிமேகலை காட்டும் மனித வாழ்வு —**சாமி சிதம்பரனார்**		3-50
பழந்தமிழர் அரசியல்		2-25
கடைசிச் செய்தி —**ரதுலன்**		3-00
ஜான்லாக்கின் ஆட்சிக்கலை —**கொடுமுடி ராஜகோபாலன்**		3-00
புத்தகத்தின் கதை —**எஸ். ராமகிருஷ்ணன்**		1-25
பிச்சமூர்த்தியின் கதைகள்		3-00
வானத்தில் நாம் —**இளம்பாரதி**		1-25
சோலை நிழல்		1-50
கானல்வரி —K. **ராஜகோபாலாச்சாரியார்**		2-50
மதுரை மாணிக்கம் —R. **பத்மநாபன்**		2-50

★

ஸ்டார் பிரசுரம்

66, பெரிய தெரு

திருவல்லிக்கேணி :: சென்னை 5

சிறந்த தமிழ் நூல்கள்

பேராசிரியர் **எஸ். வையாபுரிப்பிள்ளை**

இலக்கிய உதயம் முதற் பகுதி	2	50
,, ,, இரண்டாம் பகுதி	5	00
காவிய காலம்	5	50
இலக்கிய மணிமாலை	3	50
கம்பன் காவியம்	3	00
தமிழர் பண்பாடு	3	00
இலக்கிய விளக்கம்	2	00
அகராதி நினைவுகள்	1	75
திராவிட மொழிகளில் ஆராய்ச்சி	1	00
ராஜி நாவல்)	3	00
சிறுகதை மஞ்சரி (கதைத் தொகுதி)	2	00
History of Tamil Language and Literature	4	75

சாமி சிதம்பரனார்

நாலடியார்—பாட்டும் உரையும்	3	50
வள்ளுவா காட்டிய வைதிகம்	1	25
ஆழ்வார்கள் அருள்மொழி	2	50
வள்ளுவர் வாழ்ந்த தமிழகம்	2	50

★

தமிழ்ப் புத்தகாலயம்

393, பைகிராப்ட்ஸ் :: சென்னை-14

ஆசிரியர்: ஊ. ஜெயராமன்; **வெளியிடுபவர்:** அழ. வள்ளியப்பா, தமிழ் எழுத்தாளர் சங்கம், இளம்பிறைச் சங்கக் கட்டிடம், மவுண்டு ரோடு, சென்னை—2.